# ॐ
# சிகரம்



பிரதேச செயலக கலாசாரப் பேரவை
மண்முனைப்பற்று, ஆரையம்பதி.
2006

மண்முனைப்பற்று பிரதேச செயலக
கலாசார பேரவை – 2006

**தலைவர்**
*திரு.சி.அமலநாதன்*
(பிரதேச செயலாளர்)

**உப தலைவர்**
*திரு.கோ.தனபாலசுந்தரம்*
(உதவிப் பிரதேச செயலாளர்)

**செயலாளர்**
*திரு.மு.சதாகரன்*
(கலாசார உத்தியோகத்தர்)

**உப செயலாளர்**
*ஜனாப்.எ.எல்.முசாதீக்*
(கலாசார அபிவிருத்தி உதவியாளர்)

**கணக்காளர்**
*திரு.க.பிரேமகுமார்*
{உதவிப் பிரதேச செயலாளர் (நிதி)}

**உறுப்பினர்கள்**
*திரு.க.செல்லத்தம்பி*
*திரு.த.நல்லலிங்கம்*
*திரு.மு.அருளம்பலம்*
*திரு.த.இன்பராசா*
*திரு.பெ.சிவசுந்தரம்*
*திருமதி.சு.கோபாலசுந்தரம்*
*திருமதி.இந்துமதி விமல்ராஜா*
*திரு.கி.குணரெட்ணம்*
*திரு.ப.கலாதேவன்*
*திருமதி.கீதா கனகசிங்கம்*

# சிகரம்

## ஐந்தாவது ஆண்டு சாகித்திய விழா சிறப்பு மலர்

**விழா ஒருங்கிணைப்பு**
*திரு. சி. அமலநாதன்*
(பிரதேச செயலாளர்)

**மலர் வெளியீட்டுக் குழு**
*திரு.க.செல்லத்தம்பி*
*திரு.த.நல்லலிங்கம்*
*திரு.க.கோபாலப்பிள்ளை*
*திருமதி.சு.கோபாலசுந்தரம்*
*திருமதி.கீதா கனகசிங்கம்*

**தொகுப்பு வடிவமைப்பு**
*திரு.மு.சதாகரன்*

**கணனிப் பதிவு**
*செல்வி.அ.ஜெயசுதா*

**அச்சகம்**
*சண் அச்சகம்*
05. இருதயபுரம் மேற்கு. மட்டக்களப்பு.
065-2222597

**வெளியீடு**
*பிரதேச செயலக கலாசார பேரவை*
மண்முனைப்பற்று,
ஆரையம்பதி.
2006.

# வாழ்த்துச் செய்தி



மண்முனைப்பற்று பிரதேச கலாசாரப் பேரவையினால் நடாத்தப்படும் சாகித்திய விழாவின் போது இப்பிரதேச கலை, கலாசார பாரம்பரியங்களை உள்ளடக்கியதும் அதற்குப் பங்களிப்புச் செய்த கலைஞர்களின் கலை வாழ்க்கை பற்றிய வரலாற்றினைத் தாங்கியும் "சிகரம்" என்ற சிறப்பு மலர் வெளியிடப்பட்டுள்ளதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

தமிழ், முஸ்லிம் ஆகிய இரு சமூகத்தவரும் இணைந்து வாழும் இப்பிரதேசத்தில் அவர்களின் தனித்துவம் பேணப்படும் வகையில் இம்மலர் ஆக்கங்களைத் தன்னகத்தே உள்ளடக்கியுள்ளது வரவேற்கத்தக்கதாகும்.

வேலைப்பளு மிகுந்த இக்காலகட்டத்தில் இத்தகைய முயற்சியில் ஈடுபட்ட பிரதேச செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்கள் குறிப்பாக மலர் வெளியீட்டுக்குழு ஆகியோருக்கும் எனது உளம் நிறைந்த பாராட்டுதல்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு.செ.புண்ணியமூர்த்தி**
அரசாங்க அதிபரும் மாவட்டச் செயலாளரும்,
மட்டக்களப்பு மாவட்டம்.

# வாழ்த்துச் செய்தி



மண்முனைப்பற்று கலாசாரப் பேரவை 2006 ஆம் ஆண்டிற்கான சாகித்திய விழாவை பல்வேறு சிக்கல்களுக்கும் மத்தியில் சிறந்த முறையில் நடாத்தத் திட்டமிட்டுள்ளமை பாராட்டிற்குரிய விடயமாகும்.

ஈழத்தமிழர் கலாசாரத்திற்கும், பண்பாட்டிற்கும் வரலாறு படைத்த இடமாக மண்முனைப்பற்று விளங்குவது பெருமைக்குரிய விடயமாகும். உலக நாச்சியாரின் வரலாறு கூட கலையுலகிற்கு முழுமையாக சென்றடையவில்லை என்ற ஆதங்கம் கலாசாரப் பேரவையை எட்டியுள்ளமை வேதனைக்குரியதாகும். தமிழரது கலை, கலாசார, பண்பாட்டு அம்சங்கள் தனிமைப்படுத்தக் கூடியவையல்ல. அவை நாளாந்த வாழ்க்கையை வளப்படுத்தும் வகையில் பின்னிப் பிணைந்தவை. எனவே தான் அவை நிலைத்து, நீடித்து நிற்கின்றன.

நாட்டார் இலக்கியத்தில் சர்வதேச மட்டத்தில் மண்முனைப்பற்று ஏற்றுள்ள பங்கினை நாம் மறுதலிக்க முடியாது. ஒரு காலகட்டத்தில் கிராமியக் கலை வளமும், சோதிடமும், மாந்திரீகமும், நாட்டு வைத்தியமும் மக்களது நாளாந்த வாழ்க்கையுடன் இரண்டறக் கலந்த பிரதேசம். சமகாலத்தில் நவீன நாடகம், கவிதை, சிறுகதை, தெருக்கூத்து முதலியவற்றில் மாவட்டத்தின் நாமத்தைத் தக்கவைத்த பெருமையும் இப்பிரதேசத்திற்கே உரித்துடையதாகும்.

இம்முறை சாகித்திய விழாவானது, இலைமறைகாயாக உள்ள சிருஷ்டிகளை இனங்காணல், பிரதேசத்தின் கலைக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டோரைக் கௌரவித்து, சமூக அந்தஸ்து வழங்குதல் என்பவற்றை அடையாளப்படுத்தும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளன. அவற்றுள்ளும் பிரதேசமட்டப் பாரம்பரிய, சமகால கலாசாரப் பின்னணியைப் பிரதிபலிக்கும் வகையில் எழுத்துருக் கொண்டுள்ள "சிகரம்" நிலைபேறான ஆவணப்படுத்தலாக அமைவது பெருமைக்குரிய விடயமாகும்.

சாகித்திய விழா சிறப்பாக நிறைவேற ஒத்துழைத்த பிரதேச, கலாசாரப் பேரவை, கலாசாரத் திணைக்களம், பிரதேச செயலகத்தின் பணியாளர்கள், கலை இலக்கிய ஆர்வலர்கள், நிதியுதவி வழங்கி ஒத்துழைத்த அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகுக.

**திரு.சி.அமலநாதன்**
பிரதேச செயலாளரும், கலாசாரப் பேரவைத் தலைவரும்,
மண்முனைப்பற்று.

# ஆழித்துயரில் ஆராதனை



இருபத்தாறின் இரச்சலது....
எம்....
இதயத்தரை விட்டகலவில்லை....
உருவத்துயிரும் ஒடுங்கியதே....
அம்மா.....
உலகும் ஒருகணம் நடுங்கியதே....

ஆழிப்பேரலை ஆவேசநாள்
அமரர்.....
ஆத்மா சாந்திக்காய் ஆராதனை....
ஆழித்தாயே....!
ஆருயுரெல்லாம் எமன்
ஆழியுள் அடக்கி அழித்தானோ?

தண்ணீர் பயணமம்மா....
கண்ணீர் காவியமாய்
கதறத்தான் வைக்குதையோ...

மரணப் பிடிக்குள்....
உறவுகள் அழித்த நாளை....
நினைவுகூறும் வேளை....
மனசெல்லாம் - கொல்லன்
உலைக்கலமாய் கொதிக்குதம்மா....

தவிக்குதம்மா எம் இதயம்
பதைத்தாரம்மா ஞாயிறு உதயம்

தண்ணீரிலே பல்லுயிர்கள்
தவித்ததம்மா....
கண்ணீரில்லை எம் கண்களிலே
மண்ணிலே மகிழ்விழந்தார்....
மானிடர்கள் - அன்று
மௌனமாக்கி மக்களையே....
மாய்த்தாயே....

வஞ்சியளே! கெஞ்சுகிறோம்
வாய்திறவாய் - ஏனோ
நஞ்சு வைத்தாய் எம்முடைய....
நெஞ்சினிலே....
தஞ்சமென வந்தோரும்
தத்தளித்தார் அம்மா....!
பஞ்சிபடாய் பாடாக
பதைத்தாரையோ....

கொண்டைக்கரம் நீட்டிய தாயே! நீ
கொடிய அலையாய் மாறியதேனோ?

ஆலைவாய் பட்ட கரும்பாக....
கர்ப்பத்துடன் அன்னையர்கள்
கடலிலே மிதந்தாரம்மா....
குழந்தைகளும் தவித்தாரையோ....
உடமைகளும் அழிந்தனவே!
மன உறுதியும் தளர்ந்தனவே!!
மக்கள் மூச்சின்றி பதைத்தாரம்மா....

காலத்தால் அழியாத....
கலங்கத்தை நாமடைந்தோம்
காலனாபதில் சொல்வான்?
இல்லை....
காலமா பதில் சொல்லும்?

தன்னிகரில்லா சக்தியே....
மதபேதமின்றி....
ஜாதியின் மொழியின்றி
அகிலமெல்லாம் ஆழியினால்
அழிந்து போன உறவெல்லாம்
ஆத்மா சாந்தி பெற....
ஆராதனை புரிகின்றோம்
ஆமோதிப்பாய் சக்தியே.....

தங்கராசா கோபால்கிருஷ்ணன்

சுனாமியால் உயிரிழந்தோரின் ஆத்மாசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.


கலாசாரப் பேரவை, மண்முனைப்பற்று.

# மண்முனை ஒரு சிறு தோண்டல்

-மூனாக்கானா-

அழகாபுரியைத் தலைநகராகக் கொண்டு குபேரனும் இலங்காபுரியைத் தலைநகராகக் கொண்டு அவன் மகன் இராவணனும் ஆட்சி செய்தபின் மிகப்பெரிய கடல்கோளினால் பேரழிவு ஏற்பட்டதாக சரித்திர ஆசிரியர்கள் கூறுகிறார்கள். இதன்பின் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் உருண்டோடியபின், அத்தினாபுரியிலிருந்து குருகுல நாகர்கள் ஆட்சி செய்தனர். இது கலியுகம் 800 அளவில் நடந்தது. இவர்களில் பலர் கூட்டங்கூட்டமாக பரந்து குடியேறினர். பெரும்பாலான ஆய்வாளர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

இனி மட்டக்களப்பைப் பற்றிக் குறிப்பிடும்போது சேனன், இலஞ்சன், சிறிகுலன், வாகூரன், பிரசின்ன சித்து, தாசகன், தனசேனன் இவர்கள் வரிசையிலே குணசிங்கன் என்பவன் ஆட்சி செய்தான். இவன் உன்னரசுகிரியை இராசதானியாக்கி ஆட்சி செய்யும் போது, ஒரிசா நாட்டிலிருந்து உலகநாச்சி என்னும் அரசி தனது தம்பி உலகநாதனுடன் இங்கு வந்து கண்டி அரசனின் உத்தரவுப்படி மண்முனைப் பிரதேசத்தை ஆட்சி செய்ததாக வரலாறு கூறுகிறது. இது கி.பி. 3ம் நூற்றாண்டாகும். இப்பிரதேசத்தின் இராசதானியான மண்முனை எது? ஒரு தலைநகரம் கோட்டை கொத்தளங்களோடு மந்திரி பிரதானிகள், சேனைத் தளபதிகள்



வாழ்ந்த அந்த சனநெருக்கமுள்ள நகரம் எது? இதற்கு விடை காண்பது இன்று மிக மிகக் கஷ்டமானதாயிருக்கிறது. இன்று நாம் மண்முனை என்று குறிப்பிடுவது ஒரு சிறிய சனநெருக்கமற்ற

பகுதியாகும். அப்படியானால் இந்த மண்முனை நகரம் முன்பு எங்கிருந்தது. இந்த இடத்தில்தான் இருந்ததா? அல்லது மட்டக்களப்பு வாவியையும் கடந்து இருந்ததா? இவைகளை நாம் அறிந்து கொள்வதாயிருந்தால் இதை அண்டிய பகுதிகளை புதைபொருள் ஆய்வு செய்ய வேண்டும்.

அக்காலத்தில் இப்பகுதிகளில் வேடர்கள் குடியிருந்துள்ளார்கள். வெறியன் சோளன், கங்கன், பாலன், அலயன், ஆனையன், காத்தான் என பலர் சிறுசிறு நீரோடைகளை அடுத்து குடியிருந்து மீன்பிடித்தல், சேனைச் செய்கை, தேன் எடுத்தல் போன்ற தொழில்களைச் செய்து வந்தனர். புதுக்குடியிருப்புக்கும், தாளங்குடாவுக்கும் இடைப்பட்ட இடம் தற்போதும் வேடர் குடியிருப்பு என்றே அழைக்கப்படுகிறது. இங்கு வேடர்கள் கூட்டமாக வாழ்ந்தனர். இவர்களின் பேயாட்டு விழாவைக் காண ஆரையம்பதியிலிருந்து மக்கள் போனதாக இங்குள்ள முதியோர்கள் கூறுகின்றனர்.

இந்த வேடர்களின் ஒருவன்ான காத்தான் பூநொச்சிமுனையை அண்டிய கடற்கரைப் பிரதேசத்தில் வாழ்ந்துவந்தான். அக்காலத்தில் முஸ்லிம்கள் பலர் வியாபார நோக்கமாக மரக்கலத்தில். வந்து கொண்டிருக்கும்போது காட்டுக்குள் புகை தெரிவதைக் கண்டு அங்கு கரைதட்டி, அங்கே சிலகாலம் தங்கினர். இதை விரும்பாத காத்தான் தான் வணங்கிய முக்கோண வடிவமான கல்லையும் எடுத்துக்கொண்டு, தெற்குப் பக்கமாக ஆரைப்பற்றையில் குடியேறினான். இவன் கொண்டுவந்த அந்த முக்கோணக் கல்லை வைத்து வணங்கிய இடத்தில் தான் தற்போதய கந்தசுவாமி ஆலயம் ஆரம்பிக்கப்பட்டதாகக் கூறுகின்றனர். இதையண்டி மக்களும் குடியேறினர். இருபகுதியிலும் குடியேறிய சனப்பெருக்கம் காரணமாக 1872ல் காத்தான்குடி வேறாகவும், ஆரைப்பற்றை வேறாகவும் பிரிக்கப்பட்டு, அரசாங்கத்தால் பிரகடனப் படுத்தப்பட்டது. இனி மண்முனைப் பக்கம் போவோம்.

இப்பிரதேசத்தில் 1726ல் பெருமழையும் வெள்ளமும் அதனால் பெரிய பஞ்சமும் பிணியும் ஏற்பட்டு, மக்கள் வெவ்வேறு இடங்களுக்குக் குடியேறிச் சென்றதாக அறிய முடிகிறது. இக்காலத்தில் காரை இலையை அவித்துச் சாப்பிட்டதாகக் கூறுவார்கள். இந்த குடிபெயர்வு காரணமாகத்தான் ஆரைப்பற்றையிலும் பெரிய குடியேற்றம் ஏற்பட்டிருக்கவேண்டும். இங்கு மலையாளத்து நம்பிமார் உட்பட

தாழ்ந்த சாதியாகிய துரும்பர் வரை இங்கு குடியேறியுள்ளனர் என்பதை விட குடியேற்றப்பட்டனர் என்பதே பொருத்தமாகும். இந்த குடியேற்றத்தை திருவிழா குடியைச் சேர்ந்த திரு.கதிரைவேற்பிள்ளை என்பவரே குடியேற்றியதாக, விதானை கண்ணப்பரின் ஏட்டுக் குறிப்பிலுள்ளதாக திரு.சி.குலசேகரம்பிள்ளை அவர்கள் குறிப்பெழுதியுள்ளார். தட்டார் தெரு, வண்ணார் தெரு, பணிக்கர் தெரு, வேளாளர் தெரு என ஒவ்வொரு சாதியாரையும் ஒவ்வொரு தெருவில் குடியேற்றி எல்லையும் வகுத்துக் கொடுத்துள்ளார். துரும்பன்கேணி என்று ஒரு கேணி இருப்பதால் இங்கு துரும்பரும் இருந்துள்ளார்கள்.

மண்முனை நகரிலிருந்த மக்களைத்தான் ஆரைப்பற்றையில் குடியேற்றி இருக்க வேண்டும் என்பதே என் சொந்த அபிப்பிராயமாகும். இதற்கு ஆதாரமாக சில நிகழ்வுகளைக் கூறலாம். மண்முனையில் ஒரு பிரபல்யமான கண்ணகி கோயில் இருந்திருக்கிறது. இக்கோயில் இன்று அங்கு இல்லை. ஆனால் ஆரைப்பற்றையில் கண்ணகி கோயில் இப்போதும் இருக்கிறது. எனவே, மண்முனையிலிருந்த கண்ணகியின் சின்னங்களை வைத்துத்தான் இங்கே பிற்காலத்தில் கோயில் கட்டியிருக்க வேண்டும். தம்பிலுவில் காவியத்திலும், குயில் வசந்தன் பாடலிலும், கண்ணகி சிலை தமிழ் நாட்டிலிருந்து இங்கு வந்த பாதையிலுள்ள தலங்களைக் குறிப்பிடும் போது தற்போது கண்ணகி கோயில் உள்ள ஆரைப்பற்றையைக் குறிப்பிடாமல், கண்ணகி கோயில் இல்லாத மண்முனை ஊர் குறிப்பிடப்பட்டுள்ளது.

செட்டிபாளையம் மண்முனை சேர்ந்த தாண்டவன் வெளியும் சென்றமர்ந்த கண்ணகையைக் கூவாகுயிலே

**நீதிசெறி தேத்தா வெனுஞ்செட்டி பாளையம்**
**நேராங் கிரான்குளம் புதுக்குடியிருப்பு**
**சோதிபெறு மகிளடித் தீவுமண் முனையூர்**
**சுற்றுமுறு முதலைக் குடாவிலுறை பவளே.**

இதிலே செட்டிபாளையத்துக்கடுத்ததாக மண்முனையூர் குறிப்பிட்டுள்ளதைக் கவனியுங்கள். இத்துடன் இன்றுமொரு செய்தியைக் குறிப்பிட விரும்புகின்றேன். 1949ம் ஆண்டில் சுதந்திரன் பத்திரிகையில், பத்தக்கட்டாடியும் அம்பட்டப் புலவனும் என்னும் தலைப்பில் பேராசிரியர் கே.கணபதிப்பிள்ளையவர்கள் பின்வருமாறு எழுதியுள்ளார்.

"நாவிதன்நாதன் என்பவன் கோயிலுக்குப் போனால் கைகூப்பி வணங்காமல் புறங்கைக் கட்டோடுதான் உலாவுவான். அக்காலத்தில் மண்முனைக் கண்ணகை அம்மன் கோயிலுக்கு பூசகர் இல்லாதபடியால், உரிமைக்குரிய வழித்தோன்றலான பத்தக்கட்டாடியை ஊரவர் பலவந்தப்படுத்தி நியமித்தனர். கட்டாடியாருக்கு சடங்குமுறை தெரியாதபடியால் அம்மனிடம் முறையிட்டார். அம்மன் கனவிலே தோன்றி பூசைமுறைகளை அறிவித்துக் கட்டளையும் இட்டாள். அம்மனின் கட்டளைப்படி வெள்ளிக்கிழமை விசேட அபிசேகம் நடைபெற்று பூசை நடைபெறும்போது மூலஸ்தானக் கதவும், திரையும் தானாகவே திறந்துகொள்ள நாவிதன் நாகன் தலைமீது கைகூப்பி நின்று காவியம் பாடினான். ஏடும் எழுத்தாணியும் கொண்டுபோனவர்கள் எழுதிக்கொண்டனர். இதுவே மண்முனைக் காவியம்.

இதே பத்தக்கட்டாடியார் தான் ஆரைப்பற்றை கண்ணகை அம்மன் கோயிலின் முதல் கட்டாடியாராவார். இவருக்கு அடுத்தபடியாக, கந்தப்பர், கிருஷ்டணர், சின்னத்துரை போன்றவர்கள் கட்டாடியராக இருந்தார்கள். இந்தப் பக்தக் கட்டாடியாரைப் பற்றி ஆரைப்பற்றையில் பல கர்ண பரம்பரைச் செய்திகளுள்ளன. இவர் ஆரைப்பற்றையில் வாவிக்கரையோரம் ஆலடித்துறையில் கட்டியிருந்த மக்காக்குடிலுக்குள் படுத்துறங்கும்போது, வாவிமீது ஒளியோடும் ஒலியோடும் ஒரு பேழை வந்ததாகவும் கனவிலே வெள்ளை ஆடை உடுத்த ஒரு பெண் வந்து "நீ பூசை செய். நீ காவியம் பாடு" என்று கூறியதாகவும் இங்கே பல முதியோர்கள் கூறியுள்ளனர். இந்தப் பத்தக் கட்டாடியார் பற்றிய நிகழ்வை, மண்முனை தென் எருவில்பற்று பிரதேச கலாசார விழாமலர் 1998ல் திரு.ஆ.அரசரெத்தினம் ஆசிரியரவர்களும் குறிப்பிட்டுள்ளார்கள். இதிலிருந்து மண்முனையிலிருந்த கண்ணகை அம்மன் தான் பின்பு ஆரைப்பற்றையில் கோயில்கட்டி பிரதிஷ்டை செய்யப்பட்டது. மண்முனை நகரத்திலிருந்துதான் மக்கள் ஆரைப்பற்றையில் குடியேறினார்களோ என நாம் தீர்மானிக்க வேண்டியதாய் இருக்கிறது.

இந்தக் குடியேற்றத்தின் பின்னர் மலையாளத்திலிருந்தும் பல சாதியினரும் குடியேறியுள்ளார்கள். இங்குள்ள மக்களில் பெரும்பாலானவர்கள் குருகுலத்தவர்கள் என மறைந்த ஆரையூர் அறிஞர் திரு.க.இராசரெத்தினம் அவர்கள் ஆரையூர்க்கந்தன் விழா

மலரில் குறிப்பிட்டுள்ளார். ஆரைப்பற்றை கந்தசுவாமி கோயிலுக்கும் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்திற்கும் மிக நெருக்கமான தொடர்பு இருந்து வருகிறது. இது 'மாகோன்' மன்னனால் ஒழுங்கு செய்யப்பட்ட உடன்பாடாகும். இதன்படி கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வர ஆலயத்தின் தேரோட்டத்தில் ஆரைப்பற்றையிலிருந்து கோயில் அதிகாரிகள் வேல்கொண்டு செல்வார்கள். இவர்களை கொக்கட்டிச்சோலைச் சந்தியிலிருந்து தான்தோன்றீஸ்வர ஆலய நிர்வாகிகள் மேளதாளத்தோடு மேல்கட்டி சகிதம் வரவேற்று அழைத்துச் செல்வார்கள். இவர்களிடம் கோயில் நிர்வாகத்தினர் தேரை இழுக்கும் வடத்தை (கயிறு) தூக்கிக் கொடுத்ததும் அவர்கள் வடத்தைத் தேரில் பூட்டிய பின்புதான் தேரை இழுப்பார்கள். இதற்குப் பதிலாக ஆரைப்பற்றை கந்தசுவாமி கோயில் திருவிழாக் காலத்தில் தான்தோன்றீஸ்வரரர் ஆலயத்திலுள்ள கோவிலார்கள் (கோயில் தொண்டு செய்பவர்கள்) குருக்கள் சகிதம் இங்கு வாவிக்கரையில் இறங்கியதும், இவர்களை ஆரைப்பற்றை கந்தசுவாமி கோயில் நிர்வாகிகள் மேளதாளத்துடன் அழைத்து வருவார்கள். இவர்கள் விழா முடியும் வரை இங்கு கோயிலில் தங்கி, கோயில் தொண்டுகளைச் செய்வார்கள். இது மாகோனின் கட்டளையாகும். அத்துடன் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் தேரோட்ட விழா முடிவில் முட்டி கூறும் வழக்கம் உண்டு. இதில் குருகுலத்தார் என்று குறிப்பிட்டதும் ஆரைப்பற்றை மக்கள் சார்பாக ஒருவர் போய் முட்டியைப் பெற்றுக் கொள்வார். முதலில் முக்குலத்தவர்களின் சாதி, குடி முறைகளை வகுத்துக் கொடுத்தபின்னர், குருகுலத்தவரை அழைத்துக் கேட்ட போது, நாங்கள் அத்தினாபுரத்தை அரசாண்ட தருமரின் குருகுல மரபில் வந்தவர்களென்றும், அரசர்களின் வருவாய்க்கும் பாதுகாப்பிற்கும் சேவையாற்றும் குடிகள் எனவும், கடற்கரையில் பணிபுரிபவர்கள் எனவும், கடல்வழி வாணிபம் செய்வது தங்களது தலையாய தொழில் எனவும், எங்களுக்கு பத்தொன்பது வரிசை உண்டு என்றும், கண்ணகியிடம் வரம் பெற்றவர்களென்றும் கூறினர். இதைக் கேட்ட மன்னன் இரு குலத்தவர்களையும் ஒற்றுமைப்படுத்தி மேற்கூறியவாறு இரு கோயில்களுக்கும் தொடர்பை ஏற்படுத்திக் கொடுத்தான். இதன்பின்னர்தான் மலையாளக் குடியேற்றம் ஏற்பட்டிருக்க வேண்டும்.

இவ்விரு குலத்தவர்களுக்கும் இரு தடவைகள் பூசல் ஏற்பட்டது. ஒரு தடவை மகோன் மன்னனின் பிரதிநிதியான தனி உண்ணாப் பூபாலன் ஏட்டுப் பிரதிகளையும் செப்பேடுகளையும் பார்வையிட்டுத் தீர்த்து வைத்தான். அடுத்தது, வன்னிமையின் அதிகாரம் பற்றியதாகும். தேரோட்டம் நடைபெறும்போது அரசனால் நியமிக்கப்பட்ட தேசத்து வன்னிமையும் அவரது பரிவாரங்களும் தேரின் முன்னால் பவனி செல்வார்கள். (கண்டிப் பெரகராவில் பிரதானிகள் செல்வதுபோல) பின்னர், ஆங்கில அரசாங்கத்தால் வன்னியனார் நியமனம் செய்யப்பட்ட போது ஆரைப்பற்றையைச் சேர்ந்த ச.வ.சோமநாதவன்னியனார் கோயில் நிர்வாகத்தில் தலையிட்டபோது, பிரச்சினை எழும்பியது. இதனால் சோமநாத வன்னியனார் தேரோட்டம் நடைபெறாமல் தடுத்தார். இதை கிழக்கு மாகாண அரசாங்க அதிபர் 'பிறிமன்' துரை, தேசத்து வன்னிமையின் கடமைகளை எங்களால் நியமிக்கப்பட்ட வன்னியனாரும் செய்யலாம் எனத் தீர்ப்பளித்தார்.

மட்டக்களப்பு வரலாறு மண்முனை பிரதேச வரலாறு இவைகளைப் பற்றிய செய்திகள் பற்றி அதிகம் எழுதலாம். இதைப்பற்றிய உண்மை நிலைகளை மேலும் அறிந்து கொள்வதாயிருந்தால், கோயில் குளத்தில் சிகரத்தோடு கூடிய கோயில் இருந்த இடத்தையும் மண்முனைப் பிரதேசத்தையும் புதைபொருள் ஆய்வு செய்தால் மேலும் பல உண்மைகள் தெரியவரும். என்னுடைய இந்த அபிப்பிராயங்கள்தான் சரி என நான் கூறவில்லை. மற்றவர்களும் இதைப்பற்றிய ஆய்வு செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றேன். நான் இந்தக் கட்டுரையை ஆரையூர் அறிஞர்களான திரு.க.இராசரெத்தினம், திரு.சிவ.விவேகானந்த முதலியார், செ.இளையதம்பி ஆசிரியர் போன்றவர்களுடன் ஆரையம்பதி கோயில்குளம் போன்ற ஊர்களிலுள்ள முதியோர்களுடனும் கலந்துரையாடிப் பெற்றுக்கொண்ட குறிப்புக்களும், ஆரையம்பதியூர்க் கந்தன், எழுவான், மகாமாரிதேவி திவ்யகரணி, மட்டக்கப்பு மான்மியம் போன்ற நூல்களிலிருந்தும் பெற்றுக்கொண்ட குறிப்புக்களையும் ஆய்வுசெய்த பின்பே எழுதினேன் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

⊠⊠⊠⊠⊠

# சர்க்கரையமுது

திருமதி.சூரியகுமாரி ஜயாபரன்



மண்முனைப்பற்றுப் பிரதேசத்திலே, ஆரையம்பதி முப்பெருந் தேவிகளும் அருளாட்சி நடாத்திக் கொண்டிருக்கின்ற ஒரு ஊராகும். இங்குள்ள மக்கள் மலையாளப் பரம்பரையைச் சேர்ந்தவர்கள். இதனால் மலையாளத்து சமய, கலாசாரங்களும், மந்திரம், மகுடி போன்ற கலைகளும், போர்த்தேங்காயடித்தல், வழுக்குமரம் ஏறுதல் போன்ற விளையாட்டுகளும் இங்கு பரவியுள்ளன. இங்கே வீதிக்கொரு பரிசாரி ஒழுங்கைக்கொரு மந்திரவாதி என்று முன்பு கூறுவார்கள். நெற்றியிலே திரிபுண்டரமாக திருநீறணிந்து புருவ மத்தியில் திருநீற்றால் வட்டமாக பெரிய பொட்டு வைத்திருந்தால் அவன் ஒரு மந்திரவாதி என்று துணிந்து கூறலாம்.

மலையாளத்திலே கண்ணனூர் என்று ஒரு ஊர். இங்குள்ள மாரியம்மன் கோயில் மிகவும் பிரபல்யமானது. இதனால் தான் மட்டக்களப்பிலே பாடப்படும் அம்மன் காவியங்களில்,

“ **கண்ணனூர் வந்தநீ கம்பயில் வளர்ந்தநீ**

**கரகமதெடுத்த நீ குழையது பிடித்தநீ** ” என்று கூறப்பட்டுள்ளது. மலையாளத்தில் நாயர் போன்ற இனத்தவர்களின் வீடுகளில் மாரியம்மனுக்கு சர்க்கரையாமுது எனப்படும் சமய நிகழ்வு நடைபெறுவது வழக்கம். இதனால்தான் நமது பிரதேசங்களிலும் பணக்காரர்களின் வீடுகளில் இப்போதும் இந்நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டு வருகிறது. இதைப்பற்றிச் சிறிது சிந்தித்துப் பார்ப்போம்.

இந்தச் சர்க்கரையமுது என்ற நிகழ்வு மூன்று பிரிவுகளாக நடைபெறும். மதியம் மாரியம்மனுக்கு சர்க்கரைப் பொங்கலும், அன்று முன்னிரவில் பைரவமூர்த்திக்கு உறொட்டிப் பூசையும், அதிகாலையில், காத்தானுக்கு தண்ணீர்ச் சோற்றுப் பள்ளயமும் நடைபெறும். இவற்றுக்கான ஆயத்தங்களை ஒரு மாதகாலத்துக்கு முன்பிருந்தே செய்யத் தொடங்கிவிடுவார்கள். இதை நடத்தும் வீட்டார் தமது நெருங்கிய உறவினர்களுக்கும் அயலவர்களுக்கும் அழைப்பு விடுவார்கள். அவர்களும் இதை ஏற்று விழா நடக்கும் வீட்டுக்கு வந்து, நெல்குற்றுதல், மாவிடித்தல், தளபாடங்கள் சேகரித்து அவற்றைப் பூசி மினுக்குதல், பந்தல் போடுதல், சக்தி பூசைக்கு விஷேடமாகத் தேவைப்படும் கமுகம் பூ (கமுகம் பாளை), தாமரைப் பூ போன்ற பூக்கள் சேகரித்தல் போன்ற முக்கியமான வேலைகளில் ஈடுபடத் தொடங்கி விடுவார்கள்.

முதல் நிகழ்வு மாரியம்மனுக்குரிய சர்க்கரைப் பொங்கல் மதியத்தில் நடைபெறும். பத்ததி முறை அறிந்த கட்டாடியார் ( பூசாரி) அம்மனின் முகக்களை, வெள்ளிப் பிரம்பு, அம்மானைக் காய், சிலம்பு, தூபதீப உபகரணங்கள் அடங்கிய பெட்டியுடன் பூசை நடைபெறும். வீட்டுக்கு வந்து சேர்வார். அதற்கிடையில் பொங்கல் நடைபெறும் வீட்டார், எச்சந்தாங்கி கட்டப்பட்ட பந்தலின் கீழ் பொங்கல் பொங்கி வைத்திருப்பார்கள். பாக்கு, வெற்றிலை, பழவகை, கரும்பு, பூக்கள் போன்றவற்றை அறுத்துக் கழுவிச் சுத்தம் செய்து வைத்திருப்பார்கள். பூசாரியார் வேப்பிலைக் கும்பத்திலே அம்மனின் முகக்களையை மந்திர உச்சாடனம் செய்து வைப்பார். வட்டாக்களிலே பாக்கு, வெற்றிலை, பழங்கள் கொண்ட மடைகளை வைத்து, வரிசையாக வைப்பார். கும்பத்தின் முன்னே பெரிய வாழை இலைகளைப் பரப்பி அதில் பெரிய மடைகள் வைத்து பொங்கலையும் படைப்பார். இந்தப் பூசையில் அமர வைப்பதற்காக இனத்தவர்கள் அயலவர்களின் வீடுகளிலிருந்து, பூப்பெய்தும் பருவமுள்ள - ஆனால் பூப்பெய்யாத அழகான ஏழு பெண் பிள்ளைகளை தேவ கன்னியர்கள் போல அலங்கரித்து முக்காடிட்டு கையிலே வேப்பம் பத்திரம் கொடுத்து, பாவாடை, சட்டை அணிந்து பொங்கல் நடைபெறும் வீட்டுக்கு வந்து

சேர்வார்கள். (மட்டக்களப்பில் சில இடங்களில் சர்க்கரைப் பிள்ளை என "சப்த கன்னியர்" அழைக்கப்படுகின்றனர்.) அந்த சப்த கன்னியர்களுக்கு வீட்டுத் தலைவி அவர்களின் கால்களை மஞ்சள் நீரால் கழுவி, பொட்டிட்டு பூசை முகத்தில் நிலப் பாவாடை விரித்து அமரவைப்பார்கள். அவர்களுக்கு முன்னேயும் வாழை இலை விரித்து பொங்கல், பழம் வைப்பார்கள். பழங்கள், பால், தயிர், கரும்புச்சாறு, இளநீர், தேன், சர்க்கரை, பனங்குட்டான் போன்ற பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட பாணக்கம் அம்மனுக்கு மிகவும் விருப்பமான ஒரு பிரசாதமாகும் இதுவும் பூசையில் வைக்கப்பட்டிருக்கும். எல்லாம் படைத்து முடிந்தவுடன், மந்திர உச்சாடனங்களுடன் தூபதீபம் காட்டி பூசையை ஆரம்பிப்பார். அந்த வீட்டில் தெய்வம் பிடித்தவர்கள் யாராவது இருந்தால் அவரையும் நீராட்டி பூசை முகத்தில் வைத்திருப்பார்கள். கட்டாடியார் இவருக்கு மந்திரம் சொல்லி உருவேற்றி தலைசுற்றி ஆட வைப்பார். இத்தெய்வம் வீட்டாருக்கு அவர்களுக்கு ஏற்படப் போகும் நன்மை, தீமைகள் பற்றி 'கட்டு' (தெய்வவாக்கு) சொல்லும். பூசை முடிந்ததும் ஏழு கன்னியர்களையும் அழைத்துக்கொண்டு தண்ணீர்ச் செம்புடனும் வேப்பம் பத்திரத்துடனும் தலைவாசல் வரையும் சென்று, வீதியில் வைத்து அந்த ஏழு கன்னியர்களுக்கு வேப்பிலையால் நீர் தெளித்து, 'சுகந்தந்தயள' என்று அவர்களிடம் மூன்றுமுறை கேட்பார். அவர்களும் அதற்குப் பதிலாக 'ஓம்' என்று மூன்று தரம் பதில் கொடுப்பார்கள். பின்பு கன்னியர் வீடு போய்ச் சேர்வார்கள். பின்னர் பூசைக்கு வந்தவர்களுக்கு கட்டாடியார் திருநீறு, மஞ்சள், குங்குமம், பூக்கள் கொடுப்பார். வெளியாருக்கு பொங்கல், பிரசாதப் பொருட்கள், பாணக்கம் இவற்றைக் கொடுத்ததும் அவர்களும் தங்கள் வீடுகளுக்குப் போய்விடுவார்கள். இத்துடன் அம்மன் பூசை முடிவடையும்.

அடுத்த நிகழ்வான பைரவர் பூசை அன்று முன்னிரவில் நடைபெறும். உள் வீட்டின் முன்பாக வாசலிலே இதற்காக அமைக்கப்பட்டுள்ள வயிரவர் பந்தலிலே இப்பூசை நடைபெறும். இப்பூசையில் விசேடமாக உறொட்டி சுட்டு வைப்பார்கள். இந்த சாதாரணமான உறொட்டிகளுடன்

கஞ்சா சேர்த்துச் சுடப்பட்ட மூன்று உறொட்டிகளும், பைரவருக்கு விசேடமான 'வடைமாலை' கரும்புப் பொல்லுகள் இவற்றுடன் இழநீர், பாக்கு, வெற்றிலை, பழங்களும் வைப்பார்கள். அம்மன் பூசையிலே காவியம் படித்தது போன்று கட்டாடியார் இப்பூசையிலே வைரவர் காவியம் படிப்பார். தூபதீபம் காட்டி, பூசை முடிந்ததும் விரும்பியவர்களுக்கு கழுத்தில் அல்லது இடுப்பில் காவல் நூல் போடுவார். சிலருக்கு திருநீறும் போடுவார். இந்தப் பூசையும் முடிந்தவுடன் அம்மனுக்கும் பைரவருக்கும் கடைசியாக 'வாழி' பாடியதும் பிரசாதம் பங்கிட்டவுடன் இந்த நிகழ்ச்சியும் முடிந்துவிடும்.

அடுத்ததாக அதிகாலையில் நடைபெறுவது தண்ணீர்ச் சோற்றுப் பள்ளயம் எனப்படும் நிகழ்ச்சியாகும். இது மாரியம்மனின் மகனான காத்தானுக்கான பூசையாகும். இதில் விசேடமாக தண்ணீர் சோற்றுடன் பால், தயிர், கூழ், பழங்கள், பனங்குட்டான், கற்கண்டு, பலகாரங்கள் இவைகளும் வைத்திருப்பார்கள். அம்மன் பூசைக்கு சப்த கன்னியர்களை அழைத்ததுபோல, இந்தப் பூசைக்கு பஞ்ச கன்னியர்களை வரவழைத்திருப்பார்கள். இப்பூசையிலும் பூசை வட்டாக்கள் வரிசையாக வைத்திருப்பார்கள். கட்டாடியார் தூபதீபம் காட்டி, மந்திர உச்சாடனம் செய்து, காத்தானுக்குரிய பாடல்களைப் பாடி முடித்ததும் இல்லத்தரசி, பஞ்ச கன்னியர்களையும் அழைத்துக்கொண்டு தலைவாசலுக்கு வந்து கன்னியர்களுக்கு நீர் தெளித்து மதியப் பூசையின் போது கேட்டது போல 'சுகந்தந்தயள' என்று மூன்று தரம் கேட்டு அதற்கு விடையாக 'ஓம்' என்று சொன்னவுடன் கன்னியர்கள் தங்களது வீடுகளுக்குச் சென்று விடுவார்கள். பின்னர் பக்தர்களுக்குப் பிரசாதம் பங்கிட்டு முடிந்ததும் சகல பூசைகளும் முடிந்துவிடும். இதனால் வீட்டிலுள்ளோர்கள் நோய்நொடிகளற்று செல்வச் செழிப்போடு வாழ்வதாக ஒரு தெய்வ நம்பிக்கை. இந்த நம்பிக்கைகளெல்லாம் இன்றைய மக்களில் குறைவடைந்து காணப்படுகிறது. இதன் காரணமாகவும் இதற்குப் பெரிய செலவு ஏற்படும் என்பதற்காகவும், நாட்டு நிலைமைகள் காரணமாகவும் இப்படிப்பட்ட சமய நிகழ்வுகள் அருகிக்கொண்டு வருவது வேதனைக்குரிய விடயமாகும்.

⊠⊠⊠⊠

# ஓங்குபுகழ் சாற்றும் ஊஞ்சல் பாடல்



ஆரையூர் இளவல்

**தேடல்கள் தொடர்கின்றன**

அடியேனின் நண்பர்கள், முதியவர்கள் இலக்கிய ஆர்வலர்கள் இருவர் அண்மையில் அடியேனைச் சந்தித்தனர்.

"கொடு வெயில் தனில் ஒரு
குளிர் தரு நிழலெனக்
கோயில் கொண்டாய் நெஞ்சம்
அன்பினால் பண்பினால் எனை
ஆட்கொண்ட ஜோதியானாய்...."

எங்கேயோ, எப்போதோ ஒரு கலைவிழாவிலே கேட்ட பாடல் இது. இன்றும் என் நெஞ்சில் ஒலித்துக் கொண்டிருக்கின்றது. அப்பாடலை என் நெஞ்சம் மறக்கவில்லை. சங்கீத கலாபூஷணம் ஜீவம் யோசப் சகோதரர்கள் இசையமைத்துப் பாடிய பாடல் இது என நினைக்கின்றேன். "இது யாருடைய வரிகள் எனத் தெரியுமா? தயவுசெய்து சொல்லுங்களேன்" என்று அந்த நண்பர்களில் ஒருவர் என்னைக் கேட்டார்.

நான் சிந்தனை செய்கின்றேன். அப்போது மற்ற நண்பர் கேட்கின்றார்

"ஆரையூர் மதுரை போலாம்
ஆனந்தக் கலையின் கூடல் - தேன்
சோலையாம் உலக நாச்சி
ஜோதியாய் அமைத்த மாட்சி" எனப் பாடிக்கொண்டு "இது யாருடைய வரிகள் என்று சொல்லுங்களேன்?" என்று என்னைக் கேட்கின்றார்.

இப்படியாக பண்பாட்டு இலக்கியங்களை அனுபவித்து அனுபவித்து ஆனந்தப் பரவசமானவர்களில் சிலர் இப்போது மறந்துவிட்ட வரிகளைத் தேடுகின்றனர். அந்த வரிகளைப் படைத்தவர்களையும் அறிந்துகொள்ள அவாவுறுகின்றனர். அதன் காரணமாகத்தான் “இலக்கியம்” என்பது சாகாவரம் பெற்றது மட்டுமல்லாமல், அது முதியோர்களை இளங் காளையர்களாகவும் மாற்றிவிடுகின்றது என அறிஞர் கூறினர் போலும்.

உற்சாகமும், மகிழ்ச்சியும் தருகின்ற இத்தகைய தேடலின் மத்தியிலே இங்கு நாம் ஒரு பாடலைத் தருகின்றோம். அன்றைய மண்முனைப் பிரதேசத்தின் வாழ்வையும், வளத்தையும், சீரையும், சிறப்பையும் இந்த ஊஞ்சல் பாடல் பறைசாற்றுகின்றது. இப்பாடலின் வரிகளில் சில நகைச்சுவைக்காக மாற்றப்பட்டு, முதியோர் சிலர் இன்றும் அந்த நகைச்சுவைப் பாடலை முணுமுணுப்பதைக் கேட்கக் கூடியதாக இருக்கின்றது. ஆனால் இங்கு நாம் தருவது நகைச்சுவை அல்ல. இப்பிரதேசத்தின் வரலாற்று உண்மைகள். இதோ அந்த ஊஞ்சல் பாடல்,

**பாடல் தரு :** *தனன தன தனன தன தனன தன தனனா....*
*தனனா தனா தந்த னா தந்த னானா.....*

**பாடல் :** “ அதிமுருகு, திரிகயிறு, கொப்பறை தேங்காய்
அரிவேம்பு அரிசிதவி டெண்ணெய்யாம் பொருட்கள்
ஆறுமுகச் சாமியார் அருள்கொண்டு வாழ்த்த
பன்னிரெண்டு கப்பலிலும் பாய்மரம் கட்டி
போகுதாம் கப்பலவை பெரிய துறை பாக்கப்
பொங்கிப் படைத்திங்கு பூசனைகள் செய்வோம் ”

*தனன தன தனன தன தனன தன தனனா....*
*தனனா தனா தந்த னா தந்த னானா.....*

**இனி இப்பாடல் வரிகளின் கருத்தை அறிவோம்.**

அதிமுருகு - அதிகம் தேன், திரிகயிறு - முறுக்குக்கயிறு
அரிவேம்பு - வேப்பமரப் பலகை
ஆறுமுகச்சாமியார் - ஆரையூர்க் கந்தசுவாமி
பன்னிரெண்டு கப்பல் - “உருக்கள்” என்றழைக்கப்பட்ட பாய்மரக் கப்பல்கள்
பெரிய துறை - தமிழகத்துறைமுகம் (கொற்கை)

இந்த ஊஞ்சல் பாடல் மூலம் தமிழகத்துக்கும் மண்முனைப் பிரதேசத்திற்குமிடையே இருந்த வணிகத் தொடர்புகளை நன்கு அறிய முடிகின்றது.

கி. பி. 312ம் ஆண்டிலிருந்து கலிங்க மன்னன் குகசேனனின் மகளான உலக நாச்சியின் ஆட்சிக்குட்பட்டிருந்தது மண்முனைப் பிரதேசம். இப்பிரதேசத்தின் தலைநகராக விளங்கியது ஆரையம்பதி. தற்போதைய ஆரையம்பதி மேற்குப் பிரிவுக் கிராம உத்தியோகத்தரின் பிரிவிலுள்ள முகத்துவாரத்தெரு என்றழைக்கப்படும் பகுதியில் "தீர்வைத்துறை" என்றும், "தோணித்துறை" என்றும் அழைக்கப்படும் ஓர் துறைமுகம் இருக்கின்றது. இத்துறைமுகத்துக்கு இந்தியா, பர்மா முதலிய தேசங்களிலிருந்து "உருக்கள்" என்றழைக்கப்படும் சிறிய பாய்மரக் கப்பல்களான வர்த்தகக் கப்பல்கள் கொழுக்கி ஓடுகள், வெங்கலச் சாமான்கள், பட்டுச்சாறிகள், வேஷ்டிகள் முதலிய பொருட்களை ஏற்றி வந்துள்ளன. இத்துறைமுகத்தில் இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு வரி (தீர்வை) வசூலிக்கப்பட்டதால் இத்துறைமுகம் "தீர்வைத்துறை" எனப் பெயர் வழங்கப்பட்டு வந்தது. அக்கப்பல்களில் இத்துறையிலிருந்து வேப்பமரப் பலகைகள், அரிசி மூடைகள், தவிடு மூடைகள், கொப்பறை மூடைகள், தேங்காய், தேங்காய் எண்ணெய், தேன், முறுக்குக்கயிறு முதலிய பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன.

ஏற்றுமதிப் பொருட்களைத் தயாரிக்கும் தும்பு ஆலைகளும், மரஅரி ஆலைகளும், தேங்காய் எண்ணெய் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் எண்ணெய் செக்குகள் பலவும் இங்கிருந்துள்ளன. மண்முனைப் பிரதேசத்திலிருந்த அடர்ந்த காடுகளிலிருந்து பெருவாரியான தேன் பெறப்பட்டு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

**தீர்வைத்துறை :**

தீர்வைத்துறை அமைந்திருந்த பகுதியில் பல கிட்டங்கிகளும் (களஞ்சியம், பண்டகசாலை) கடைத் தொடர்களும் செயல்பட்டுள்ளன. இன்றும் அந்த எச்சங்களைக் காணக்கூடியதாக இருக்கின்றது. தீர்வைத் துறையின் அருகாமையில் ஓர் பிரசித்த சந்தை அமைந்திருந்தது. முழுநாளும் இயங்கக்கூடியதாகப் பிரபல்யம் பெற்றிருந்த சந்தையிலும், கடைகளிலும் பலரக அத்தியாவசியப் பொருட்களும், பாவனைப் பொருட்களும் பெறக்கூடியதாக இருந்தது.

இச்சந்தையில் அக்காலத்தில் ஒரு பெரிய தேங்காய் ஒரு சல்லிக்குப் (சல்லி - ஒரு சதத்தின் அரைப்பங்கு) பெறக்கூடியதாக இருந்ததாக ஒரு முதியவர் குறிப்பிட்டார். பொதுவாக ஒரு குடும்பத்துச் சமையலுக்குத் தேவையான அத்தனை பொருட்களையும் ஐந்து சதத்துக்கு வாங்கக்கூடியதாக இருந்ததாம். இக்கடைத் தெருவிலிருந்த "அன்னராசன்" புத்தகநிலையம் பிரசித்தி பெற்றது. இங்கு உள்நாட்டு, வெளிநாட்டுத் தமிழ், ஆங்கிலப் புத்தகங்கள் யாவும் வாங்கக்கூடியதாக இருந்தது. இங்கிருந்த கிட்டங்கிகளில் தேங்காயும், நெல்லும் சேமித்து வைக்கப்பட்டு வருடம் பூராவும் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனை செய்யப்பட்டன.

**தாழ்விலாச் செல்வர் :**

நூற்றுக்கணக்கான ஏக்கர் நெல்வயல்களுக்கும், தென்னந் தோட்டங்களுக்கும் சொந்தக்காரர்களான பெருஞ் செல்வந்தர்கள் இங்கு வாழ்ந்துள்ளனர். கரைவாகுப் பகுதியிலும் (கல்முனை, சம்மாந்துறை, அட்டாளச்சேனை முதலிய பிரதேசங்கள்) படுவான்கரைப் பகுதியிலும் இருந்த இவர்களது நெற்காணிகளிலும், தென்னந்தோட்டங்களிலும் இருந்து ஏராளமான நெல்மூடைகளும், ஆயிரக்கணக்கான தேங்காய்களும் அறுவடை காலங்களில் இருபது, இருபத்தைந்து இரட்டை மாட்டு வண்டிகளில் சாரிசாரியாக இரவும் பகலும் இங்கு வந்து சேரும். வண்டிகளில் கட்டப்பட்டிருக்கும் மாடுகளின் கழுத்துமணியோசைகள் அக்கால மௌன இரவுகளில் ஊர் மக்களுக்கு மகிழ்ச்சி தரும் இன்ப ஓசையாக இனிக்கும். அது மோட்டார் வாகனங்கள் பாவனையில் இல்லாத காலமாதலால் மாட்டு வண்டில்களுக்குத் தனிக் கிராக்கி, படுவான்கரைப் பகுதிகளிலிருந்து பல வள்ளங்களில் நெல்மூடைகள் ஏராளமாக இங்கு வந்து சேரும்.

வளமான காலம், வறுமையைக் காணா மாந்தர், எங்கும் மகிழ்ச்சியின் ஆட்சி, இந்த மகிழ்ச்சியின் உந்து சக்தியாகக் கலைகள் வளர்ந்தன. ஆலயங்கள் வளர்ந்தன. அறநெறிகள் தழைத்தன. கல்வி, கலாசாரம், பண்பாடு ஆகிய மனித விழுமியங்கள் அனைத்தும் பக்குவமாகப் பாதுகாக்கப்பட்டன.

புகழ்பெற்ற செல்வந்தர்களாக க.கணபதிப்பிள்ளை போடியார் (புள்ளார்), த.சின்னத்தம்பி போடியார் (த.சி) முன்னாள் ஆரையம்பதி

புதுக்குடியிருப்பு கிராம சபை அச்சிராசனர்), ப.க.சுப்பிரமணியம் பூபாலபிள்ளைப் போடியார், சி.கணபதிப்பிள்ளை போடியார், வ.இளையதம்பிப் போடியார், நொத்தாரிஸ் மூத்ததம்பி, சின்னத்தம்பி போடியார் (சின்ன வாத்தியார்), காசிநாத உடையார், மாரிமுத்துப் போடியார், சுப்பிரிண்டன் வேலுப்பிள்ளை, அருணகிரி முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் தேடிச்சென்று கொடுத்தவர்கள். கிராம மக்கள் அனைவரும் சேமமாக வாழ வழி செய்தவர்கள். 1924ல் கல்லடிப் பாலம் அமைக்கப்பட்டது. மோட்டார் வாகனப் போக்குவரத்துக்கள் தொடர்ந்தன.

**பொய்யாமொழிப் புகழ் மெய்யாய் அமைந்தது :**

பொய்யாமொழிப் புலவர் திருவண்ணாமலை நாட்டிற்குக் கூறிய இலக்கணத்துள்

*" தள்ளா விளையிளுந் தக்காரும் தாழ்விலாச்*
*செல்வருஞ் சேர்வது நாடு"*

*" பிணியின்மை, செல்வம், விளைவின்ப மேமம்*
*அணியென்ப நாட்டிற் கிவ் வைந்து "*

என்பனவும், ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றான சீவக சிந்தாமனியின் ஆசிரியர் நாட்டு வளப்பங் கூறும்போது,


*"காய்மாண்ட தெங்கின் பழம் வீழக் கமுகினெற்றிப்*
*பூமாண்ட தீந்தேன் றொடை கீறி வருக்கை போழ்ந்து*
*தேமாங்கனி சிதறி வாழைப்பழங்கள் சிந்தும்*
*ஏமாங்கத மென்றிசை யாற்றிசை போயதுண்டே"*

சங்க இலக்கியப் பாடல்கள் எம் முன்னோரின் ஊஞ்சல் பாடல்களுக்குப் பொருத்தமாயமைந்திருப்பது கண்டு பூரிப்படைகின்றோம்.

**உசாத்துணை**


1. இலங்கை – இந்திய வரலாற்று நூல்கள்
2. சீவகசிந்தாமணி
3. இந்தியச் சுற்றுலா - ஆசிரியர் எஸ்.சங்கரன்
4. "இரும்பு அரசன்" – புறபசர் கே.எஸ்.சங்கரதாஸ்
   "வாழ்க்கை வரலாறு" ஆசிரியர் – க.தா.செல்வராஜ கோபால்
5. மூத்தோர் சொல்லமுதம்

# பெண்மை



ஜனனத்தின் போதே
மரணத்தையும்
வாங்கிக் கொள்ளும்
உயிரினத்தின் தொடர்புள்ளி
தான்
பெண்மை....!

மலராய் மலர்ந்த மலர்
மாதராய் உதிர்கிறது...!
ஆறிலே நீ சிறுமி
அறுபதிலே நீ சிறுமி
வானவில் வாழ்க்கையில்
வசந்தமில்லாத போராட்டங்கள்
பொங்கும் கடலில் பெண்
ஓடத்தின் சில தருகாட்டங்கள்...!

பூவே நீயும்
பூப்படைந்த பின்னே
க(ன்)னியாகிறாய்!
உன் சிறகுகள் முறிக்கப்பட்டு
உணர்ச்சி நரம்புகளிலே
உலையிடுகிறது இச் சமூகச் சாக்கடை!

சத்தமாய் கதைத்தாலும்
சந்தோசமாய்
சிரித்தாலும் - சமூகச்
சந்தையிலே நீ
தெருத் தேங்காயாகிவிடுகிறாய்!
என்ன காரணம் சொல்ல....

துணைவியாய் நீயும்
தோற்றம் கொண்டாலும்
விழவில்லை உன் அடிமைச் சங்கிலி!
வீட்டுக்குள்ளேயே உன்
வாழ்வு விடிவதனால்
புதுமை விளையும்
அழுகிறது...!

நீ தாயாகி விட்டாயாமே?
உன்னையே உருக்கி
உருவம் கொடுக்கிறாய்!
இனி... பிள்ளைக்குக்
காய்ச்சலென்றால் உன்
மேனி கொதிக்கும்?

கண்களிலே குழி
தோலிலே சுருக்கம்
காதுகளின் கதவும்
அடைபட்டுவிட்டது
மூன்றாவது காலும்
முளைத்துவிட்டது?
இப்போ நீ கிழவி...!

பாடையிலே உன் பயணம்
தொடர்ந்தாலும் நீ
சாகும் வரைக்கும்
கூடவே வருகிறது அடிமை
அறுணாக்கயிறு!

சிசுபாலன் புவனேந்திரன்

நெடுமூச்சு.... விட்டான் கந்தப்பன். மறுமூச்சிவிட மூச்செங்கே....? அவனது பேச்செங்கே...?

அல்லும் பகலும் பாடுபட்டு ஆறு பிள்ளைகளை வளர்த்தவன். அயராத முயற்சியால் சமூகச்சீரழிவை பண்டைய கலை. கலாசாரத்தினை கலைவடிவில் காட்டியவன். அடுப்படி குடிலுக்குள் அடங்கிக்கிடக்கிறான். எட்டு நாளாய் இரணம் ஒழுங்கில்லை. இருந்தாலும் கலையார்வம் குன்றவில்லை.

காய்ந்த உடம்பின் கருகிய ஈக்கிள் கைகளினால் கவி எழுதும் நோக்குடன் தனது பேனாவைத் தூக்கினான்.

"தன்னிகர் இல்லா சக்தியே...!
கலைத்தாகத்துடன்....
கடல் நீரில் பயணம் செய்தேன் - என்
தாகம் தீரவில்லை...."

சிறுகதை

# மண்ணில் புதையும் மத்தளம்



தங்கராசா இன்பராசா

இது அவனது முற்றுப்பெறாத கவி வரிகள். வரிகளை முடிக்கும் முன்பே மைத்துளி முடிந்து விட்டது.

மௌனப் பூதங்களாக நிற்கும் மரங்கள்கூட அவன் மத்தளம் அடித்தால் மெய்சிலிர்க்க ஆடும். கந்தப்பன் மௌனி ஆனதும் அந்த மரங்கள் எங்கே...? மனிதர்கள் எதைக் கௌரவிக்க வேண்டுமோ..... எவற்றை வளர்க்க வேண்டுமோ.... அதை மறந்து விடுகிறார்கள்.

"மறந்தாலும் பரவாயில்லை மட்டம் தட்டுகிறார்கள்"

"என்னடியம்மா பொன்னம்மா....? இந்த மத்தளம் இறுகுதே இல்லை நல்ல குரங்குத்தோல் என்றுதான் சொன்னானுகள்.... மத்தளம் பேசுதில்லையடி....."

கந்தப்பன் தமிழர் பண்பாட்டின் ஆணிவேர் தமிழர் சொத்தான கூத்துக்கலையினை தன் வாழ்நாளில் உயிராகக் கருதியவன் எத்தனையோ இதிகாச புராண சரித்திரக் கதைகளை மக்களுக்கு வெளிச்சம் போட்டுக்

காட்டியவன். மீண்டும் மத்தளத்தை அடிக்கிறான்.

"தந்தாக...... தாக....தாக" அவன் அடித்தால் அது பேசும்.

"உங்கட பம்மாத்தென்றால் தாங்கமுடியல்ல. விடிந்தால் பொழுது போகும் மட்டும் பாட்டும் கூத்தும்தான். பாழாப்போன கடவுள் என்ட தலையில' எழுதின எழுத்து....."

கந்தப்பனின் முகம் தொட்டாச்சிணுங்கியாக மாறுகிறது.

"ம்.... சும்மா ஒரு பேச்சிக்கு சொன்ன மனிசா....

இந்தா வெத்திலை. பாக்கு"

பொன்னம்மா வெற்றிலை துவைக்கும் உரலுக்குள் இடிக்கப்பட்ட தாம்பூலத்தினை எடுத்து. கந்தப்பன் கையிலே கொடுக்கிறாள்.

வெற்றிலையினை வாங்கிய கந்தப்பன் கற்பனையில் மூழ்கின்றான்.

"இஞ்சாருங்கோ.... உங்களை கணவனாக அடையிரத்திற்கு நான் கோடாகோடி தவம் செய்திருக்கனும்."

கந்தனும் பொன்னம்மாவும் காதலித்துக் கல்யாணம் செய்த காலத்தில் கூறிய வார்த்தை இது. அது ஒரு பொற்காலம்' "

தாம்பூலத்தினால் உருவாகிய வேகம் அவனது தலையில் வடமோடியும். தென்மோடியும் சுழன்று வருகின்றது. மத்தளத்தை எடுத்து தொட்டு வணங்கினான். தாளம் போட ஆரம்பிக்க....

"ஏவுகணை வார்த்தைகள் அவன் இதயத்தைத் தாக்கியது."

"கந்தப்பன் தாளம் போட்டதுபோதும் வாங்கின கடனை எப்போ தரப்போறாய்...."

பொன்னையனின் வேகமான வார்த்தையால் வெகுண்டு போனான் கந்தப்பன்.

கலைஞனின் வாழ்வில் கஸ்டம் வருவது நியதி. கந்தப்பனை வறுமையும் பிணியும் விட்டுவைக்கவில்லை. அவன் செய்யாத தொழில் இல்லை. படாதபாடும் இல்லை. எது எவ்வாறு இருந்தாலும் கூத்தையும் மத்தளத்தையும் கந்தப்பன் விட்டுவைக்கவில்லை.

"பொன்னையன் கோவிக்காத. இந்தமுறை நாடகம் அரங்கேற்றினதும் கோயில்காரனுகள் என்னவும் தருவானுகள். கட்டாயம் தந்திடுவன்..."

ஆரம்ப காலகட்டத்தில் கூத்தென்றால் மக்கள் கூட்டமே பெருக் கெடுக்கும். அதிலும் கந்தப்பனின் கூத்தென்றால் மக்கள் வெள்ளம்.

ஆனால் மேலைத்தேய கலாசாரம் ஊடுருவி தமிழர் பாரம்பரியத்தில் தடைக்கல்லை போட்டது. இருந்தாலும் கந்தப்பன் சளைக்கவில்லை. இனிவரும்காலம்எப்படியிருக்குமோ.... அதைப்பற்றித்தான் கவலைப்பட்டான்.

"நாடகம் கூத்தென்று ஆத்தாத தொழில் செய்ற உமக்கு என்னத்த நம்பி...சீ.... என்ட புத்தியைச் செருப்பால அடிக்கனும்..."

கேவலமான வார்த்தை பேசி வெளியேறினான் பொன்னையன். கந்தப்பன் வெட்கத்தால் தலை குனிந்தான். அருகிலிருந்த மனைவியை உற்றுப்பார்த்தான். மனைவியின் பார்வை தன்னைக் கேவலமாகப் பார்ப்பது போல் அவனுக்கு இருந்தது.

ஆறு பிள்ளைகளில் ஒரு பிள்ளையும் கந்தப்பனைக் கவனிப்பதே இல்லை. ஆறு பேரும் மிகுந்த செல்வந்தர்களாக இருக்கின்றார்கள்.

"என்னமனுசா நாடகம் எழுதிறதும் மத்தளம் தட்டுறதும் வேலையாய் போச்சி. பகலைக்கு அரிசில்லை. என்ன செய்யப்போறா....?

பொன்னம்மாவின் சொல் கந்தப்பனின் இதயத்தைத் தாக்கியது. சிந்தித்தான்.... சிந்தனையில் பொன்னையன் பேசிய ஆத்தாத தொழில்... எனும் சொல் அவன் இதயத்தை உடைத்துவிட்டது.

ஆத்தாத என்பதன் அர்த்தம் என்ன ? சமூகத்தின் சீரழிவைப் பொறுத்துக்கொள்ள முடியாத கலைஞன் தனது மனதை ஆத்திக்கொள்ள முடியாமல் கலையைப் படைக்கின்றான். அதில் சமூகத்தைத் திருத்துகின்றான்.

பண்டைய மரபுகளை வரலாறுகளை சமூகத்திற்கு எடுத்துச் சொல்கிறான். இது ஆத்தாத தொழிலா....? சமூகத்தை ஆற்றுப்படுத்தும் சேவை.

இப்போதுதான் பொன்னம்மாவின் செல்லுக்கான சொல் தொடர்...

"மூத்த மகனுட்ட போய் ஏதாச்சும் கேட்டுப் பாருடியம்மா இந்த முறை வேளாண்மை செய்தவன்தானே ஏதாச்சும் தருவான்...."

பொன்னம்மாவின் அடிவயிறு பற்றி எரிந்தது. ஒருபுறம் ஆத்திரம். மறுபுறம் வேதனை. ஆறு பிள்ளைகளைப் பெற்றெடுத்த தன் கணவனுக்கு ஆறுதல் சொல்ல யாரும் இல்லை என்ற ஏக்கம்.

கந்தப்பன் மூத்த மகனிடம் போகச் சொல்லும்முன்னே போய் அவமானப்பட்டு வந்துவிட்டாள் பொன்னம்மா.

"இந்த மனுஷன் உயிரோடு இருக்கும்வரை கஸ்டமே கஸ்டம்தான். அனுபவித்தது போதும். இனியும் என்னால் அனுபவிக்க முடியாது."

இவ்வாறு தனது மனதுக்குள் பேசிக்கொண்டு குனிந்துபோகும் குடிலுள் நுழைந்து வினாயகப் பானைக்குள் இருக்கும் கோதுமை மாவை முதுகுப்பிரம்பு சுளகுக்குள் அள்ளியெடுத்தாள்.

சுண்டுக்கொத்தினைத் தேடினாள். அது ஒருபுறம் நெளிந்து கிடக்கின்றது. கரங்களாலே அள்ளினாள்.

இங்கு மத்தளம்....

'மதுரவாசகன்' நாடகத்தின் ஒரு பகுதியை மதுரக்குரலில் பாடிக்கொண்டிருந்தான் கந்தப்பன்.

"விறகு கொள்வீரோ..." எனும் பாடல் வானைப் பிளக்கின்றது. கந்தப்பனின் கூத்துப்பாட்டு ஒருபுறம் பொன்னம்மாவின் கூப்பமாரொட்டி மறுபுறம்.

மன்னனாய் இருந்த மதுரவாசகன் அரம்பை மேல் ஆசைகொண்டு விறகு விற்பவனாய் மாறிய கதை பாட்டிலே சென்றுகொண்டிருக்கின்றது.

பாட்டைக் கேட்டவாறு தெருவிலே பலர் போகின்றனர்.

"மதுரைவாசகன் கெட்டான் அரம்பையால்
கந்தப்பன் கெட்டான் அரங்கினால்"

தெருவில் போகும் ஒருவன் குத்துவாரம் பேசிக்கொண்டு போகின்றான்.

கந்தப்பன் கெட்டுப்போகவில்லை. சமூகத்திலே கௌரவிக்கப்பட வேண்டியவர்கள் விருது வழங்கப்பட வேண்டியவர்கள். ஓரம்கட்டப்பட்டு ஒதுக்கப்பட்டார்கள். மதிக்கப்படவேண்டியவர்கள் மிதிக்கப்பட்டார்கள். புறக்கணிக்கப்பட்டார்கள்.

கந்தப்பனின் தலைமுறைக்குப் பின்பு எந்தப்பன் இந்த அரிய சொத்தை வளர்க்கப்போகிறான்....?

இரண்டு பக்கமும் அடிபட்டது மத்தளம். கந்தப்பன் வறுமையினாலும் பிணியினாலும் மிகுந்த கஸ்டப்பட்டான். காலம் நகர்ந்தது.....

மூட்டை முடிச்சுகளை கட்டிய பொன்னம்மாவிடம்

"என்னடியம்மா நீயும் என்ன விட்டுத்துப் போனால் கடைசி காலத்தில் என்னை யாரடியம்மா பாப்பாங்க...?

வளர்த்த நாய்க்குட்டி முகத்தைப் பார்ப்பதுபோல் பொன்னம்மாவை நோக்கிக் கேட்டான் கந்தப்பன். பொன்னம்மா அதற்குப் பதிலடி கொடுத்தாள்.

"பிறகென்ன செய்ய....? இந்த நரகத்தில் கிடக்கவா.....?

சுவர்க்கமாக இருந்த கந்தப்பன் நரகமாக எப்படி மாறினான்.....?

மறுவார்த்தை பேசமுடியாமல் மௌனியாகிவிட்டான். ஒருபுறத்தில் நேற்றுக்காலை குடித்த தேநீர்க்கோப்பையை ஈ மொய்த்துக் கிடக்கின்றது. எட்டுநாளாய் பாயும் படுக்கையுமானான். எட்டிப்பார்க்க எவருமில்லை. தவித்தான் கந்தப்பன்.

பொன்னம்மா கந்தப்பனை விட்டுப்போய் எட்டுநாள்தான் ஆகிறது. அவள் கந்தப்பனை விட்டு மூட்டை முடிச்செல்லாம் கட்டிக்கொண்டு தன் இளைய மகனோடு சேர்ந்துவிட்டாள்.

அதுவும் வீட்டு வேலைக்கு....?

கந்தப்பனின் கண்கள் ஒளியிழந்து காணப்பட்டது. அவன் குடியிருந்த குடிலுக்குள் துர்நாற்றமே வெளியாகியது. அவனைப் பார்ப்பதற்கு எவரும் இல்லை. சமூகத்தைத் தனது பாட்டாலும் கூத்தாலும் மகிழ்வடையச் செய்தவன் மங்கிப்போய்க்கிடக்கிறான்.

"இறைவா....! நான் செத்தாலும் இந்தக் கலைக்காக ஒருவனைப்படைச்சிடப்பா..."

கந்தப்பனின் வாய் முணுமுணுத்துக்கொண்டிருந்தது.

ஒட்டறை படிந்திருந்த தனது மத்தளத்தைப் பார்த்து மனவேதனைப்பட்டான். மறுபுறத்தில் தனது வெள்ளைச் சேட்டுக்குள் சத்தியவான் சாவித்திரி நாடகம் எழுதிய பேனா மங்கலாகத் தெரிந்தது.

"சத்தியவான் சாவித்திரி கணவனுக்காக காலனோடு போராடினாள். பொன்னம்மா....?"


நெடுமூச்சிவிட்டான் மூச்சிப்பறந்தது. யாருமில்லை உதவிக்கு அரசு வந்தது அடக்கம் செய்ய பாவம்! இப்போதாவது மரியாதை கிடைக்குதே! அது கௌரவிக்கப்பட்டதே!

---

பிரதேச சாகித்திய விழா 2006ஐ ஒட்டி மண்முனைப்பற்று பிரதேச கலாசாரப் பேரவை நடாத்திய சிறுகதைப் போட்டியில் முதலிடம் பெற்றது.

# கண்டுகொள்!

தயாபரம்



ரயர்ப்புகையினுள்ளே
மனித இறைச்சிக்காக
கடிபிடிப்பட்ட நாய்களையெல்லாம்
படலை தாண்டியந்து
பராக்குப் பார்த்தவன் நான்
ஆனாலும்.....
பெண்ணே!
அது ஏனோ தெரியாது
உன்னைக் கண்டால் போதும்
ஊரடங்குச்சட்ட காலத்து
கடைசி பஸ்ஸாக நீயும்
இருபது வயது
இளம் பிரயாணியாக நானும்.....

ஒவ்வொரு நாளும் நான்
ஒத்திகை பார்த்துக் கொண்டாலும்
நான் சொல்ல நினைப்பது மட்டும்
நழுவிக்கொண்டே போகிறது
நமது தேசத்தின் சமாதானம் போல
நீயும் ஒரு இரக்கமற்றவள்
கிபீர்க் குருவிகள் போல

காதலி!
என் எதிர்பார்ப்பினைக் கண்டுகொள்
இல்லையேல்
என் எதிர் காலத்தினைக் கொன்று செல்.

ஒரு நாட்டின் பண்பாட்டில் தாக்கத்தை உண்டு பண்ணுவது அந்நாட்டு மக்களால் பின்பற்றப்படும் மரபுக் கலைகளாகும். எமது பழந்தமிழ் மக்களின் வாழ்க்கை முறையில் முக்கிய திருப்பங்களை உண்டாக்கியவை அவர்களால் கைக்கொள்ளப்பட்ட சடங்கு முறைகளும் மரபுக் கலைகளுமே ஆகும். இவற்றுள் குரவைக் கூத்து, துணங்கைக் கூத்து, வேலன் ஆடல், வெறியாட்டு என்பவற்றைக் குறிப்பிடலாம். ஒரு கட்டுக்கோப்பான சீரிய வாழ்க்கை முறையினை எடுத்துக்கொள்வதற்கு இவை பெரிதும் உதவின. பிற்பட்ட காலப்பகுதியில் வசந்தன், கும்மி, கரகம், காவடி, கூத்து ஆகிய சகல மரபுக் கலைகளும் நிலைத்து நிற்பதற்கு இவையே வழிகோலின என்றே கூறவேண்டும்.

# மக்களும் மரபுக் கலைகளும்



எஸ்.எதிர்மன்னசிங்கம்

மக்கள் வாழ்வில் கூத்து முக்கிய பங்கினை எடுத்திருந்ததென்பதற்கு 'இருவகைக் கூத்தின் இலக்கணமறிந்து.." எனத் தொல்காப்பியர் கூறியுள்ளதைக் குறிப்பிடலாம். இதற்கு உரையெழுதிய உரையாசிரியரும், அடியார்க்கு நல்லாரும் இருவகைப்பட்ட அகக்கூத்தென்று உரை எழுதினார்.

| | | |
|---|---|---|
| வசைக்கூத்து | - | புகழ்க்கூத்து |
| வேத்தியல் | - | பொதுவியல் |
| வரிக்கூத்து | - | வரிசாந்திக்கூத்து |
| சாந்திக்கூத்து | - | விநோதக்கூத்து |
| ஆரியம் | - | தமிழ் |
| இயல்புக்கூத்து | - | தேசிக்கூத்து |
| அகக்கூத்து | - | புறக்கூத்து |

இவ்வாறு பதினான்கு வகையான கூத்துக்கள் கூறப்பட்டுள்ளன. இவற்றுள் ஆரியம், தமிழ் என்ற இருவகைக் கூத்தும் தான் இன்று மக்களால் பெரிதும் பின்பற்றப்படும் வடமோடி, தென்மோடியாகும். இக்கூத்துக்கள் கிராமியக்கலைகளுள் பெரிதும் முக்கியத்துவம் பெறுகின்றன. இருவகைக் கூத்துக்களினதும் ஆடல் வகைகளும், தாளக் கட்டுக்களும், பாடல்களும் மிகவும் அற்புதமானவையாகும். இவற்றைக் கிராமப்புற மக்கள் பெரிதும் விரும்பிப் பார்த்து ரசிப்பர். அத்தோடு கிராமங்கள் தோறும் ஆடப்பட்டுவரும் வசந்தன் கூத்தும் சிறப்பம்சம் பொருந்தியன. 'வசந்தன் கவித்திரட்டு' எனும் நூலில் அறுபத்திரண்டு வகையான வசந்தன் கூத்துக்கள் கூறப்பட்டுள்ளன.

வசந்தன் பாடல்களிலே கூவாய் குயில் வசந்தன், விதைப்பு வசந்தன், அறுவடை வசந்தன், முயிற்று வசந்தன், அனுமார் வசந்தன், பிள்ளையார் வசந்தன் ஆகியன பாராட்டற்குரியன. மக்களது விவசாய வாழ்க்கையுடன் இவ்வசந்தன் பாடல்களும், கூத்தும் மிகவும் தொடர்பு உடையன. வசந்தன் ஆடல் பன்னிருவர் விட்டமாக நின்று கோல் (தடி) கொண்டு தாள அமைதி பிசகாது பாடலுக்கேற்றவாறு ஆடுவதாகும். மத்தளம், சல்லரி ஆகிய வாத்தியங்கள் இசைக்கேற்றவாறு அடிக்கப்படும் வெவ்வேறான சந்தங்கொண்ட பாடல்களை வெவ்வேறு பெயருடன் படிக்கப்படுகின்றன. ஆடல்களின் செயலால் அப்பாடல்கள் பெயர்பெறுகின்றன. எடுத்துக்காட்டாக, அனுமான், வசந்தனைக் குறிப்பிடலாம். வசந்தன் கூத்துக்களில் இடம்பெறுகின்ற தருக்கள் அல்லது பாட்டுக்கள், உடையணியும் முறை, காலில் சதங்கை அணிதல் போன்றவற்றைப் பார்க்குமிடத்து; தென்மோடிக் கூத்து வகையினை இவை சார்ந்ததாகத் தென்படுகின்றது. 1925ல் இலங்கை வந்திருந்த பிரிட்டிஷ் மகா தேசாதிபதி 'உவில்லியம் மனிங்ஸ்' என்பவர் இவ்வசந்தன் கவிகளின் சிறப்பையும் இனிமையையும் நேரில் கண்டு ஆங்கில நாட்டிற்குப் பல கட்டுரைகள் மூலம் தெரியப்படுத்தியுள்ளார்.

அடுத்துக் குரவையொலி மக்கள் கலைகளுள் மிகவும் சிறப்பிடம் பெறுகின்றன. சகல இன்ப, துன்ப நிகழ்ச்சிகளுள்ளும் குரவை ஒலிக்கும் தொடக்க காலத்தில் குரவைக் கூத்தாக இந்நிகழ்ச்சி இடம்பெற்றுள்ளது. சங்க இலக்கியங்களுள் ஒன்றான நற்றிணையில்,

**"லாங்கமைப் பழுநிய நறவுண்டு**
**வேங்கை முன்றிந் குரவையுங் கண்டே"**

எனக் கூறப்பட்டுள்ளது.


நன்றாக முற்றின (வச்சிக்கள்) கள்ளைச் சாப்பிட்டு (குடித்து) வேங்கை மர நிழலில் குரவைக்கூத்து ஆடினர் எனக் கொள்ளலாம். மலைபடு கடாம், புறநானூறு, திருமுருகாற்றுப்படை, மதுரைக்காஞ்சி ஆகிய இலக்கியங்களிலும் குரவை பற்றிய குறிப்புக்கள் உள்ளன. சிலப்பதிகாரத்திலே 'குரவையென்ப எழுவர் மங்கையர்' கைகோர்த்து நின்று நிகழ்த்தும் செயலாகும் எனக் காணக்கிடக்கின்றது. மட்டக்களப்பு மாநிலந்தோறும் கண்ணகி அம்மன் சடங்கு நிகழ்ச்சி நடைபெறும் போது குரவை போடும் முக்கிய நிகழ்ச்சியும் இடம்பெறும். முஸ்லிம் மக்களிடையேயும் குரவைபோடும் வழக்கம் உள்ளது. காட்டுப் பிரதேசங்களில் வாழும் குறவர்கள் 'கள்' குடித்து மகிழ்ச்சி கொண்டாடும் போது குரவையிடுவர். அப்போது அவர்கள் தலையில் கலசம், வில், அம்பு என்பவற்றை வைத்துக்கொண்டு ஆடுவர். இச்சமயத்தில் ஆண், பெண் என இரு பாலாரும் சேர்ந்தே குரவை ஒலியெழுப்பி ஆடுவர்.

ஏனைய மரபுக் கலைகளுள் சிறப்புடையவை கொம்பு முறிப்பு (கொம்பு விளையாட்டு) கும்மி, கரகம், காவடி முதலானவை. இவ்வொவ்வொரு கலையாடலும் மக்கள் வாழ்க்கையுடன் எவ்விதம் பின்னிப் பிணைந்துள்ளன என்பது பற்றித் தனித்தனியாக எடுத்து ஆராயமுற்பட்டால், கட்டுரை மிகவும் விரிவடைந்து செல்லும் என அஞ்சி, கொம்புமுறிப்பாடல் அடிகள் சிலவற்றைக் குறிப்பிட்டு கட்டுரையினை நிறைவுசெய்யலாம்.

**"வடசேரியான் கொம்பு எங்கே யெங்கே**
**மணமுள்ள தாழையின் மேலே மேலே**
**தென்சேரியான் கொம்பு எங்கே யெங்கே**
**செம்பா பற்றைக்குக் கீழே கீழே"**

இவ்விதம் மரபுக் கலைகள் யாவும் மக்கள் வாழ்க்கையில் பெரிதும் இடம்பிடித்துள்ளன என்பதையிட்டு நாம் பெருமைடையாமல் இருக்க முடியாது.

# திருக்குறள்



மறுமை இம்மை மலர்வாக சங்கம்
மருவியதோர் காலத்தின் மாணிக்கமே!
திருமறையாய் பொதுமறையாய் - பேதமின்றி
திருவள்ளுவரின் தீந்தமிழே! திருக்குறளே...!

திருவருளின் ஒளிவிளக்கே! அரும்பொருளே! - எங்கள்
இருளகற்றும் இன்தமிழே! திருக்குறளே!
பெருமையுடன் பிறந்திட்ட பெரும்பொருளே! - வள்ளுவர்
கருவுதித்த செந்தமிழே! திருக்குறளே....!

இருவரியால் பெருமையுறும் திருக்குறளே! - என்றும்
இளைத்திடா துவகாளும் இன்பத்தமிழே!
மருவிடுவோம் அதனடியை மாண்புறவே - நித்தம்
மாட்சிமையே உண்டாகும் மறுப்பே இல்லை.

அருள்மொழியாம் திருக்குறளே! அகத்தின் வாழ்வே!
அழியாது ஒழியாது நிந்தன் புகழே
பெருகிடுமே பாரினிலே மாண்புதானும் - குறள்
பேரறிவை எந்நாளும் மனத்தே கொண்டால்.

அருமை புகழ் திருக்குறளை - அகத்தில் கொண்டால்
அமரத்துவம் அடைந்திடவும் அடியே கோலும்
சிறுமைமனம் சிதைந்திடுமே - மண்ணின் மீது
சிறப்பான வாழ்வு நிதம் பெருகிடுமே!

தங்கராசா இன்பராசா

*சாகித்திய விழா - 2006 ஐ முன்னிட்டு பிரதேச கலாசார பேரவை நடாத்திய கவிதைப் போட்டியில் முதலிடம் பெற்ற கவிதை இது.*

# ஆரையம்பதியின் முன்னோடி இலக்கியக் கர்த்தாக்கள்

- அன்புமணி -

## (1) பொது

மட்டக்களப்பு மாவட்டத்தில் மரபு இலக்கியத்தைப் பேணி வளர்த்தவர்களாக சுவாமி விபுலானந்தர், வித்துவான் க.பூபாலபிள்ளை, வித்துவான் சரவணமுத்தன், பண்டிதர் செ.பூபாலபிள்ளை, புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை, க.தா.செல்வராசகோபால், வித்துவான் F.X.C.நடராசா, வித்துவான் வி.சீ.கந்தையா, கங்கேஸ்வரி கந்தையா, பண்டிதர் சபாபதிப்பிள்ளை முதலியோரைக் கூறலாம்.

இவர்கள் செய்யுள் நூல்களை யாத்தும், செய்யுள் நூல்களுக்கு உரை எழுதியும், மரபு இலக்கிய வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தனர். இவர்களைப் போன்று ஆரையம்பதியில் தோன்றிய சில இலக்கிய கர்த்தாக்களும், இலக்கியப் பங்களிப்புச் செய்துள்ளனர். செய்யுள்களை யாத்தும், பழந்தமிழ் இலக்கியங்களைப் பயின்றும், தமது புலமையை வெளிப்படுத்தியுள்ளனர். இலக்கியக் கட்டுரைகளையும் வரைந்துள்ளனர். இவர்களுள் டாக்டர் சிவ.சோமசுந்தரனார், அழகேச முதலியார், சி.க.பொன்னம்பலம், திருமலர்ப்பாக்கியம், தமிழ்மணி விவேகானந்த முதலியார் முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

சிவசோமசுந்தரனார், டாக்டர் தொழிலை மேற்கொண்டிருந்தார். பழந்தமிழ் இலக்கியங்களுடன் ஈடுபாடு கொண்டு ஏகலைவன் பாணியில் தனது இலக்கியத் திறமையை வளர்த்துக்கொண்டார்.

ஆரையூர் நல்.அழகேச முதலியார் ஒரு படிக்காத மேதை ஆவார். பழந்தமிழ் இலக்கியங்களைத் தாமாகவே தேடிப் படித்துத் தனது திறமையை வளர்த்துக் கொண்டவர். தமிழ்மணி

சிவ.விவேகானந்த முதலியார் ஒரு பயிற்றப்பட்ட தமிழாசிரியர். இயல்பாகவே தமிழ் இலக்கியங்களுடன் ஈடுபாடு கொண்டவர்.

**(2) டாக்டர் சிவ.சோமசுந்தரனார் :**

ஆரையம்பதி சிவசிதம்பரப்பிள்ளை அவர்களின் மூத்த புதல்வனான இவர் ஒரு டாக்டர் ஆவார். ஆனாலும் பழந்தமிழ் இலக்கியங்களைப் பயின்று, தாமாகவே செய்யுள்களை யாத்தார். ஆலயங்கள் மீது பதிகங்கள் பாடினார். கவியரங்குகளில் கலந்துகொண்டார்.

ஆரையம்பதி முருகன் மீது அவர் பாடிய திருப்பதிகத்திலிருந்து ஒரு பாடல் வருமாறு:

*பங்கயமலர்ப் பொய்கை பொங்கு நீரோடை பல*
*பாய்ந்து சேர் வாவியதனில்*
*பலமீனினம் பொலிய வருகின்ற சிறுதோணி*
*பஃறிக ணெருங்கியதிரக்*
*கங்கைக் கரைக்குள் வளர் நுங்கம் பனைக்குள் வதி*
*காக்கையுங் குருகு மிரையக்*
*கதிர்வேலவன் றுவச நிரைவாரணங்கூறு*
*கட்டியம் போது புலர,*
*வெங்கணும் புகழ்பெற்ற சங்கையுறு மகரயா*
*ழின்னிசை யெழுப்பி முரல*
*வெழினாக சுரவோசை தவில் மேளவாத்திய*
*மியம்பிடும் பேரொலியெழத்*
*திங்களொடு கங்கையணி, மங்கையுமை பங்கனருள்*
*தேவ சேனாதி பதியுன்*
*சினகரங் கொண்டழுத செறியா ரையம்பதி*
*செம்மலே கந்தவேளே!*

இது, பதினான்கு சீரடி நெடிலடி ஆசிரிய விருத்தம் ஆகும். இச் செய்யுள் அமைப்பு முறையும், செழுமை மிகுந்த சொல் வளமும் வர்ணனையும் கற்பனையும் ஆழ்ந்து நோக்கி அனுபவிக்கத்தக்கவை. இவ்வாறே இப்பதிகத்தில் உள்ள பத்துப் பாடல்களும் கடவுள் வணக்கம், வாழி, மங்களம் முதலிய பாடல்களும்

படித்துச் சுவைக்கத்தக்கவை. இச் செய்யுள்கள், நேரிசைவெண்பா, கலிவிருத்தம், எண்சீர் விருத்தம் முதலிய யாப்பு முறைகளில் பாடப்பட்டுள்ளன. விபுலானந்தருக்கு நிகரான இவரது கவிப்புலமை நம்மைப் புல்லரிக்கச் செய்கிறது.

**(3) ஆரையூர் நல். அளகேசமுதலியார் :**

இவர் ஒரு வரகவி. சிறு வியாபாரம் இவரது வருமான வழி. ஆனால், செய்யுள் யாப்பது இவரது தொழில். "நமக்கு தொழில் கவிதை, நாட்டுக்குழைத்தல், இமைப்பொழுதும் சோராதிருத்தல்" எனப் பாடிய பாரதியின் கவிதை வரிகளை எழுத்துக்கெழுத்து வாழ்க்கையில் கடைப்பிடித்தவர் இவர். சித்தாண்டியில் சிறுகடை வைத்திருந்தபோது சித்தாண்டி மக்களைத் தம் புலமையினால் கவர்ந்து, அவர்கள் வேண்டுகோளின்படி, "சித்தாண்டி தலபுராணம்" பாடியவர். அந்த நூலுக்காக, மட்டக்களப்பு அரசாங்க அதிபரைத் தலைவராகக் கொண்ட மட்டக்களப்பு கலாசாரப் பேரவையால் "இலக்கியமணி" பட்டமளித்துக் கௌரவிக்கப்பட்டவர்.

இவர் வாயைத் திறந்தாலே தமிழருவி கொட்டும் அற்புதமான செய்யுள்களை மிக அனாயாசமாகப் பாடுவார். ஆனால் நூல்களாக வெளிவந்தவை ஒரு சிலவே. இவற்றுக்கு முன்பு குறிப்பிட்ட "சித்தாண்டி தலபுராணம்" மற்றும் "ஆரையூர்க்கோவை" என்பவை குறிப்பிடத்தக்கவை. "ஆரையூர்க்கோவை" நூலும், சித்தாண்டித் தலபுராணம் போலவே பல்வேறு செய்யுள் யாப்பு வடிவில் அமைந்த பாடல்களைக் கொண்டவை.

இவை தவிர, கந்தவிரத அம்மானை, தமிழ்த்தாய்க் காவியம் முதலிய சிறு நூல்களும் அச்சில் வெளிவந்துள்ளன. இவரது செய்யுள் யாப்பு முறையையும், பொருள் அமைதியையும், கற்பனை வளத்தையும் காண்பவர்கள் இவர் ஒரு பண்டிதர், அல்லது வித்துவானாக இருக்கவேண்டும் எனக் கூறுவர். ஆனால் பள்ளிக்கூடப் பக்கமே போகாத ஒரு படிக்காத மேதை இவர்.

எந்நேரமும், வெண்ணிற உடையும், வெண்ணீறும் அணிந்து, சிவப்பழமாகக் காட்சிதரும் இவரது தோற்றத்தைப் பார்த்த மாத்திரத்தே நம் மனதில் ஒரு பரவசம் ஏற்படும்.

**(4) தமிழ்மணி சிவ. விவேகானந்தமுதலியார்**

டாக்டர் புலவர் சிவ.சோமசுந்தரனாரின் சகோதரரான இவர் ஒரு பயிற்றப்பட்ட தமிழாசிரியர் ஆவார். இவர் ஆழ்ந்த தமிழ்ப்புலமை உள்ளவர். செய்யுள் யாக்கும் திறமைமிக்கவர். பல சிறு நூல்களைத் தொகுத்தளித்தவர். கந்தர் சஷ்டி கவசப் பாடல்கள், சிவராத்திரி பூசைப் பாடல்கள், மரணச் சடங்குப் பாடல்கள், எண்ணெய்ச் சிந்து முதலியன இவர் தொகுத்த சிறு நூல்களுள் சிலவாகும்.

யாவராலும் "சேர்" என்று அழைக்கப்படும் இவர் இந்துசமய கலாசாரத் திணைக்களத்தினால் பட்டமளிக்கும் திட்டம் வருமுன்பே ஆரையம்பதி மக்களால் "தமிழ்மணி" என அழைக்கப்பட்டவர். அப்பட்டத்திற்கு எல்லா வகையிலும் பொருத்தமானவர். தமிழே உயிர் மூச்சாகக் கொண்டு வாழ்ந்தவர். அவர் இயற்றிய "மண்முனை கோவிற்குளம் காசிலிங்கேசுவரர் கோவில்" என்ற பாடலில் இருந்து ஒரு பாடல் வருமாறு,

*"ஆதியிலே மண்முனையில் உலகநாச்சி*
*அமைத்து வைத்த கோவிலெதென் றாய்ந்தகாலை*
*பாதியிலே போத்துக்கீஸ் கொள்ளையிட்டுப்*
*பலகிலமா யுடைத்தெறிந்த சிகரக் கோயில்*
*சாதியிலே கலிங்கர்க ளாலியற்றப்பெற்ற*
*சரியான காசிலிங்கக் கோவிலல்லால்*
*மேதினியில், தான்தோன்றி ஈசனென்று*
*மெய்ப்பிக்கக் கூறுமொழி பொய்யதாமே"*

இப்பாடல் கோவிற்குளம் காசிலிங்கேசுவரர் கோயில் போத்துக்கேயரால் அழிக்கப்பட்ட வரலாற்றுத் தகவலைத் தருவதுடன், சிலர் தவறாகத் தான்தோன்றி ஈசுவரர் ஆலயமே காசிலிங்கக் கோவிலெனக் கூறுவதையும் நிராகரிக்கின்றது. பல இலக்கியக்

கட்டுரைகளையும், வரலாற்றுக் கட்டுரைகளையும் எழுதிய இவர், "இந்துசமயம்" என்னும் ஒரு விளக்க நூலை எழுதியுள்ளார். மாணவர்க்கு மிகவும் பயன்படக் கூடிய இந்நூல் இன்னும் அச்சாகாமல் எழுத்துப் பிரதியாக இருப்பது துரதிஷ்டமே.

**(5) தமிழ்ச் செல்வி திருமலர்ப்பாக்கியம் :**

பயிற்றப்பட்ட தமிழாசிரியையான இவர், ஆரையம்பதி சிவசிதம்பரப்பிள்ளையின் புதல்வியாவார். ஆக மூவர் ஒரே குடும்பத்தில் இலக்கிய கர்த்தாக்களாகப் பரிணமித்திருப்பதைப் பார்க்கிறோம். சிறுசிறு பதிகங்கள் பல பாடியுள்ள இவர், "சாவித்திரி" என்னும் குறுங் காவித்தை நூலாக வெளியிட்டுள்ளார். இந்நூலைக் கையெழுத்துப் பிரதியில் பார்வையிட்ட புலவர் சோ.நடராசன், வித்துவான் F.X.C.நடராசா மற்றும் தமிழகப் புலவர்கள் பலர் இச் செய்யுள்களின் செழுமையை மிகவும் பாராட்டியுள்ளனர். தமிழகத்தைச் சேர்ந்த புலவர் சி.கோவிந்தசாமி, பேராசிரியர் அப்துல் ரகுமான் ஆகியோர் இந்நூலுக்கு அணிந்துரை வழங்கியுள்ளனர். இந்நூலிலிருந்து சில பாடல்கள் வருமாறு....

1) நற்குண மனையாள் என்றும் நாயகற்கினிதாய் வாழ்ந்து
பொற்புறு குணங்கள் நான்கும் பொருந்திய அறிவும் சேர்ந்து
நற்பணிப் பெண்களோடும் நயந்து நல்வார்த்தை பேசிக்
கற்புள மங்கையாகக் காசினி போற்ற வாழ்ந்தாள்

2) மக்கட் பேறில்லாச் செல்வம் வசைமொழியாகுமென்று
துக்கமும் நிறைந்த நெஞ்சாய்த் தூக்கமு மின்றி நின்று
மிக்கதோர் தவத்தைச் செய்தால் விரும்பிய மகவுண்டாகும்
இக்கணம் தொட்டே நாமும் இதற்கொரு வழியைக் காண்போம்.

(இப்பாடல்களின், எளிய மொழியும், இலகு நடையும் கவனத்திற் கொள்ளத்தக்கன.) இவ்வாறே இவரது ஏனைய பதிகங்களிலும் செய்யுள் சிறப்பைத் தரிசிக்கலாம். பின்வரும் பதிகங்களை இவர் யாத்துள்ளார்.

(i) மட்/அரசினர் வைத்தியசாலை பழனியாண்டவர் திருப்பதிகம்
(ii) நுவரெலியா ஆவலியூர் ஸ்ரீ முத்துமாரியம்மன் திருப்பதிகம்
(iii) கல்லடி ஸ்ரீ சித்திவிநாயகர் திருப்பதிகம்

(iv) கல்லடி வேலாயுதர் திருப்பதிகம்
(v) திருச்செந்தூர் முருகன் திருப்பதிகம்
(vi) திருப்பெருந்துறை முருகன் திருப்பதிகம்
(vii) மாந்தீவு முருகன் திருப்பதிகம்
(viii) கல்லடித்தெரு முருகன் திருப்பதிகம்
(ix) வி.சீ. கந்தையா சுகம்வேண்டி கோட்டமுனை ஸ்ரீ சித்தி விநாயகர் திருப்பதிகம்.

**(6) புலவர் சி.க.பொன்னம்பலம்:**

புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளையின் மாணவரான இவர், மட்/உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தில் நீண்டகாலம், நிர்வாக உதவியாளராகக் கடமையாற்றி ஓய்வுபெற்றவர். ஆரையம்பதி பரம நயினார் மீது அளவில்லாத பக்தி கொண்டவர். ஏகலைவன் பாணியில் கவிதைக் கலையைப் பயின்றுகொண்ட இவர், இதுவரை ஏராளமான செய்யுள்களை இயற்றியுள்ளார். இரு செய்யுள் நூல்களை வெளியிட்டுள்ளார். பழந்தமிழ்ப் புலவர்களின் பாடல்களை நிகர்ந்த செய்யுள்களை அனாயாசமாக இயற்றும் இவர் அவ்வப்போது சமயக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

"ஆரையம்பதியில் முருகனைக் கண்டேன்" என்னும் செய்யுள் ஆக்கத்திலிருந்து ஒரு பாடல் -

ஞானவேல் ஏந்தும் கையும்
ஞாயிறைப் பழிக்கும் மெய்யும்
மோனமா முனிவர் போற்ற
முத்தமிழ் மொழிந்த சீரும்
கானமாதான வள்ளிக்
கனி தெய்வயானை நட்பும்
கானமா மஞ்ஞையுற்று
கந்தவேளிடத்தே கண்டேன்.

இப்பாடல்களின் சாந்தச் சிறப்பும் ஓசை நயமும் உற்று நோக்கற்பாலன. வார்த்தைகள் இயல்பாக வந்து விழும் லாகவமும் நேர்த்தியும் அவதானிக்கத் தக்கன. இவர் எழுதி வெளியிட்டுள்ள (அ) ஐயனார் சுவாமி, (ஆ) தெய்வப்பாமாலை ஆகிய இரு நூல்களிலும்

மேற்கண்டவாறு கவிதைச்சுவை விரவிக் கிடப்பதைக் காணலாம். (இ) பிள்ளையார் பெருங்கதை என்னும் இவரது தொகுப்பு நூலிலுமே இவரது செய்யுள் சிறப்பைக் காணலாம்.

**(7) துதிப்பாடல்கள் பாடிய இலக்கியக் கர்த்தாக்கள்:**

ஆரையம்பதியில் வாழ்ந்த தமிழறிஞர்கள் இங்குள்ள ஆலயங்கள் மீது துதிப்பாடல்களையும், பதிகங்களையும் பாடியுள்ளனர். அவை அவ்வப் போது பிரசுரமாகியுள்ளன. ஆனால் காலப்போக்கில் அத்தகைய பாடல்களின் ஆசிரியர் பெயர்கள் விடுபட்டுப்போயுள்ளன. அவ்வாறான சில விபரங்கள் வருமாறு,

ஆரையம்பதி முருகன் மீது பாடப்பட்ட திருவூஞ்சல் பாடல், ஆண்டு தோறும் பாடப்பட்டுவருகிறது. இப்பாடல் ஆரையம்பதி கந்தசுவாமி கோயிலின் *1980* வரவு-செலவு அறிக்கை என்ற பிரசுரத்தில் இடம் பெற்றுள்ளது. ஆனால் இயற்றியவர் பெயர் குறிப்பிடப்படவில்லை.

பத்துப் பாடல்களைக் கொண்ட இத்திருவூஞ்சல் பாடலில் சில பாடல்கள் வருமாறு:

(i) *சீரார் பவளம் கால் சிவாகமம் கயிறதாக*
*மேலார் புகன்ற வியன்வேதம் விட்டமாக*
*தாராபதியும் ரவியும் குடையதாக*
*ஏராரும் அண்டம் பலகை இனிதமர்ந்து*
*ஊரார் துதிகூவ, உம்பர் மலர்தூவ*
*பேராரும் சேவல் பெரிதும் உவகையுற*
*தேரார் படை தேய்ந்த நெடுவேல் கரமேந்தி*
*ஆரையம்பதி வாழ்கந்தசாமி நீயாடீரூஞ்சல்*

(ii) *மேளம் ஒலிக்க விண்ணோர் புகழ்பரவ*
*தாளம் ஒலிக்க தபனர் துதிபரவ*
*நாதம் ஒலிக்க நக்கார் முறுவலிக்க*
*பாதம் ஒலிக்க, பாவாணர் இசைபரவ*
*வேதம் ஒலிக்க வீரர் புடைசூழ*
*கீதம் ஒலிக்க, கின்னரர் யாழிசைக்க*
*ஆரம் ஒலிக்க அறுகால் அளி முரல*
*ஆரையம்பதி வாழ்கந்தசாமி நீ யாடீரூஞ்சல்*

**(8) ஆரையம்பதி கந்தசுவாமி கோயில் வரலாறு பாடிய புலவர்:**

*1980ம் ஆண்டு வரவு-செலவு அறிக்கையில் மேற்படி தலைப்பில் 12 பாடல்கள் இடம்பெறுகின்றன. ஒரு வகையில் இதை கந்தசுவாமி ஆலய தலபுராணமாகவே கொள்ளலாம். கி.பி. 1692ல் காத்தான் என்னும் வேடன் வெள்ளைக்கல் பிள்ளையார் சிலையைக் கண்டெடுத்து வணக்கம் செய்தது முதல் 1850ல் கோயில் அமைத்து 1864ல் கும்பாபிஷேகம் செய்த விபரங்கள் இப்பதிகத்தில் இடம் பெறுகின்றன.*

இப்பாடல்களில் கவிதைச் செழுமை குறைவாக இருந்தாலும், கர்ண பரம்பரைக் கதைத் தகவல்கள் யாவும் இடம்பெறுகின்றன. ஒருசில பாடல்கள் வருமாறு:

(i) *சென்றதொரு ஆயிரத்து ஆறாம் நூறின்*
*திறமான தொண்ணூற்று இரண்டாமாண்டில்*
*நின்றனனாம் காத்தானின் நாமம் பூண்டு*
*நெடுகவே மீன்மிருக வேட்டையாடி*
*கன்றியதோ ரதிகாரம் செலுத்தி இந்தக்*
*காத்தானின் குடியென்ற ஊர் தனக்கு*
*ஒன்றிய புத்தளமதனி லிருந்து வந்து*
*ஊரறிய வைத்த உபகாரி மாதோ*

**வேறு**

(ii) *வெளியில் வந்து மீன்வேட்டை*
*வெகுவாய் ஆடி விளங்குங்கால்*
*களிசேர் மனத்துக் காத்தாற்குக்*
*காட்சியளித்த கல் உருவம்*
*ஒளியாய்க் கிடக்க வதையெடுத்து*
*உயர்ச்சி சேர்ந்த மண்மேட்டில்*
*அளியாம விருட்சத் தடியதனில்*
*அமர்த்தி அங்கு தங்கினனே!*

❖ ❖ ❖ ❖

# முஸ்லிம்களின் கலைவடிவமான "களிகம்பு"

பாவலர் சாந்தி முஹியித்தீன் JP




கலை, கலாசாரம் ஒரு சமூகத்தைப் பிரதிபலிக்கின்ற முத்திரைகளாகும். பாரம்பரிய கலாசார வடிவங்களைக் கொண்டு ஒரு சமூகத்தை எடைபோட முடியும். கலாசார வடிவங்கள் ஒரு சமூகத்தின் வரலாற்றைச் சொல்லும் அடிநாதமாக விளங்கும் கலாசார வடிவங்களை அறிவியல் ரீதியாக ஆராயும் போது, அதற்குள்ளிருந்து ஆழ்ந்த, அகன்ற அடிப்படைக் கருவூலங்கள் வெளிவரும் ஒவ்வொரு சமூகத்திற்கும் கலாசார வடிவங்கள் உண்டு. இந்த வகையில், இலங்கை முஸ்லிம்களின் கலாசார கலை இலக்கிய பாரம்பரிய வடிவங்களில் கோலாட்டம் மிக முக்கியமான இடத்தை வகிக்கின்றது. இக்கலை மிக நீண்ட நெடுங்காலமாக முஸ்லிம்களால் பாதுகாத்து வளர்க்கப்படுகின்ற ஓர் கிராமியக் கலையாகும்.

கோலாட்டத்தை முஸ்லிம்கள் கம்படி, பொல்லடி, களிகம்பு, களிக்கம்பு என்று பலவாறாக ஊருக்குத் தக்கவாறு அழைப்பார்கள். என்றாலும், 'களிகம்பு' என்றே இலங்கையில் அதிகமான ஊர்களில் இது பேசப்பட்டு வருகின்றது. இலங்கை முஸ்லிம்களின் களிகம்புக் கலை இந்தியாவிலுள்ள 'களியல்' ஆட்டத்தை ஒத்தவொரு ஆட்டமாகும். கேரளத்தில் இதனை "கோல்கள்" என்று கூறுவார்கள். களியல் என்றால் ஆட்டம் என்று மலையாளத்தில் பொருள். கோல் என்பது தடியையும் களி என்பது ஆட்டத்தையும் குறிப்பிடுவதால் இது மலையாளத்தில் கோல்களி என்றாயிற்று. இதனை வைத்து ஆராயும்போது, முஸ்லிம்களது களிகம்பு ஆட்டம் கேளரத்திலிருந்து

தோற்றம் பெற்றிருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகின்றது. அப்படியாயின் மலையாளத்தில் இருந்துவந்த பட்டாணியர்களுடைய வருகைக் காலத்திலேயே களிகம்பு இலங்கை முஸ்லிம்களது கலாசார வடிவமாகத் தோற்றம் பெற்றுள்ளது.

கும்மி, கோலாட்டம் போன்ற கலைகள் நாட்டார் இலக்கிய வடிவங்களைச் சார்ந்ததாகும். இதற்கு சாஸ்திரிய முறைப்படியான வடிவமைப்புக்கள் குறைவு. சாஸ்திரிய முறை என்று சரியாக இல்லாததால் இதன் ஆட்ட வடிவங்களை இதன் அண்ணாவிமார்களே (குரு) தன் எண்ணங்களுக்குத் தக்கவாறாக வடிவமைத்துக் கொள்கின்றனர்.

களிகம்பு ஆட்டம் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு சமாந்திரமான இரட்டை அணியாகவும், வேறு வடிவங்களிலும் ஆடப்பட்டாலும் களிகம்பு ஆடுவதற்கு வட்டம் முக்கியமானது. ஒன்றுக்குள் ஒன்றாக இரட்டை வட்டத்தில் எதிரும் புதிருமாக நின்று ஆடும் ஆட்டம் மிகவும் சிறப்பானது. இதில் எட்டுப்பேர் முதல் முப்பத்திரண்டு பேர் வரை இணைந்து ஆடமுடியும். கேரளத்தில் இதற்கு அதிகமானவர்களும் சேர்ந்து ஆடுவார்கள்.

களிகம்பு ஆட்டத்தில் முக்கிய இடம் அதன் அண்ணாவியாருக்கே உண்டு. கோலாட்டத்தின் ஆட்ட நாயகர் அண்ணாவியாரே ஆவார். ஆகையினால் ஆட்டக்காரர்கள் எப்பொழுதும் தனது குருவை (அண்ணாவியாரை) மதிப்பார்கள். ஆட்டம் சம்பந்தமான விடயங்கள் அனைத்தும் அண்ணாவியாரின் ஆலோசனைப்படியே நடைபெறும். ஒரு அண்ணாவியாரிடம் ஆட்டம் பழகிய குழுவினர் அவரின் அனுமதி இன்றி வேறு ஓர் ஆட்டக்குழுவில் சேர்ந்துகொள்ள மாட்டார்கள். ஆட்டத்திற்காக சபையில் தோன்றும்போதுகூட அண்ணாவியாரையே முற்படுத்தி பின்னால் வருவது அவர்கள் வழமை.

இவ்வாட்டம் முஸ்லிம்களின் பெருநாட்களான நோன்புப் பெருநாள், ஹஜ்ஜுப் பெருநாள், நபி பிறந்தநாள், திருமண வைபவம், ஹத்னா என்னும் சுண்ணத்துக் கலியாணம் ஆகிய காலங்களிலும் இடங்களிலும் சந்தோஷ மிகுதியால் ஆடுவது வழக்கம். ஓர் இடத்தில் களிகம்பு ஆடுவதற்கு ஏற்பாடு செய்தால் அப்பகுதி மக்கள் அண்ணாவியாருக்கு வட்டாவில் வெற்றிலை, பாக்கு வைத்து அழைப்பது

மரபு. இதனை 'வட்டா வைத்தல்' என்று கூறுவர். இதன் பின் அண்ணாவியாரையும் ஆட்டக்காரர்களையும் குறித்த நாளில் ஊர்வலமாக மேடைக்கு அழைத்து வருவார்கள். களிகம்புக் குழுவின் ஆடற்சிறப்பு அண்ணாவியாரின் முன் அனுபவத்திலும் நெறிப்படுத்தலிலுமே தங்கியுள்ளது.

அண்ணாவியாராக இருப்பவருக்கு இரண்டு தகைமைகள் மிகவும் முக்கியமானது. ஒன்று தனது குழு ஆடுகின்ற ஆட்டங்கள் யாவும் தனக்குத் தெரிந்திருக்க வேண்டும். சிலவேளைகளில் ஆட்டக்காரர்கள் தவறிழைத்தால் தானே கழிக்கோலை கையில் எடுத்து ஆடிக்காட்ட வேண்டும். மற்றது, ஆடுகின்ற ஆட்டங்கள் அனைத்திற்கும் இசைவான தாளம் தப்பாத, சீர்பிழைக்காத பாடல்கள் பாடக்கூடியவராக இருக்க வேண்டும். தாளமும், பாடலும் வேறுபடும் ஆயின், ஆட்டம் பிழைத்து விடும் ஆகையினால் ஆட்ட ஆரம்பத்திலேயே அதன் தாள இசைக்குத் தக்கவாறான பாடல் அமைந்துவிடுவது முக்கியமானது. இதுதவிர அவ்வப்போது நடைபெறும் சம்பவங்களை பாடலாக வடிவமைத்துப் பாடக்கூடிய தகைமையும் அண்ணாவியாரிடம் அமைந்துவிடுவது மேலதிகத் தகைமையாகும்.

களிக்கம்புப் பாடல்கள் அதிகமாக இஸ்லாமிய இலக்கிய நூல்களில் உள்ள சரித்திரம் சம்பந்தமான பாடல்களே பெரிதும் பாடப்படுகின்றன. அப்பாசு நாடகம், அலிபாதுஷா நாடகம், கப்பற்பாட்டு, குணமாது காசீம் படைப்போர் மஃஷசக்கு மாலை ஆகிய நூல்களில் உள்ள பாடல் களிகம்பு ஆட்டத்திற்குரிய இசை வடிவிலான பாடல்களாகும்.

கடந்த அறுபது வருடங்களுக்கு முன்னதாக காத்தான்குடியில் களிகம்பு ஆட்டக்கலையின் அண்ணாவியராக இருந்து 'தேன்பாணியர்' என்று செல்லமாக அழைக்கப்பட்டுவந்த அகமதுலெவ்வை அண்ணாவியார் அவர்கள் சமகாலச் சம்பவங்களை வைத்து பாட்டாகப்பாடி, அதனைத் தனது ஆட்டங்களில் இணைத்துக்கொண்ட ஒருவர். பல பாடல்களை அகமதுலெவ்வை அண்ணாவியார் எழுதியிருந்தாலும், அவரால் எழுதப்பட்ட பாலப்பாட்டும் கோச்சுப்பாட்டும் இம் முதியவர்களுடைய இதயத்தில் உயிர் வாழுகின்றது.

1931ம் ஆண்டளவில் மட்டக்களப்பு கல்லடிப்பாலம் கட்டுப்பட்டுக் கொண்டிருந்த காலகட்டத்தில் அதனைப் புதினம் பார்ப்பதற்காக பக்கத்துக் கிராமங்களிலிருந்து இரவும் பகலும் மக்கள் சென்று வருவது வழக்கம். இதனை கருவாக்கி, காத்தான்குடியிலிருந்து ஒரு குடும்பம் பாலம் பார்ப்பதற்காகப் புறப்பட்டு அதனைப் பார்த்துவிட்டு வீடு திரும்பியதை கவிதையில் அமைத்து, களிகம்பு ஆட்டத்தில் இணைத்துக் கொண்டார் அண்ணாவியார்.

அவர் இயற்றிய பாடலிலிருந்து:-

" பாலம் பாக்கப் போவோம் வாருமே - என்
பாவையரே பெண்ணே
பாலம் பாக்கப் போவோம் வாருமே - II

பாலம் பாக்கப் போவோம் வாரும்
பாவையரே சேர்ந்து நாமள்
கால்நடையாப் போனோம் எண்டா
காணலாமே காட்சிகள் எல்லாம் - (பாலம் பாக்கப்...)

பொட்டகத்தை திறந்து பொன்வெள்ளிச் சாமானை
பொற்கொடியே நீயும் போடு
வாட்டிமறிச்ச வடக்கத்திச்சோமன
வண்ணக்கிளியே கொசுவி உடு....

சாரிக்கு ஏத்த சயிசான சட்டைய
சட்டென எடுத்துப்போடு
முகத்தையும் மூடி நீ மொக்காட்டப் போட்டுக் - II
முன்னால போறன் நான் பின்னால வா பெண்ணே!

(பாலம் பார்க்க...)

இப்பாடல் ஓர் வழிநடைச் சிந்தாக காத்தான்குடியிலிருந்து புறப்பட்ட தம்பதிகள் மட்டக்களப்பு வரை நடந்து சென்று திரும்பி வரும்வரை கண்ட புதினங்களை எடுத்துக்கூறுகின்றது.

களிகம்பு ஆட்டத்தில் அதிகமாக இஸ்லாமிய வரலாற்றுச் சம்பவங்களை உள்ளடக்கிய பாடல்களும் சமகாலச் சம்பவங்கள் சம்பந்தமான பாடல்களும் பாடப்படுவதால் ஒரே நேரத்தில் ஆட்டத்தைக் கண்டு இரசிக்கவும், சரித்திரச் சம்பவங்களைக் கேட்டுச் சுவைக்கவும் கூடியதாகவுள்ளது. ஆகையினால், இவ்வாட்டத்தைப் பார்த்து இரசிப்பதற்கு ஆண்களை விடப் பெண்களே அதிகமாகக் கூடுவர்.

ஆட்டம் தொடங்குவதற்கு முன்னதாக ஓர் பிரார்த்தனை நடைபெறும். முஸ்லிம்கள் எந்த நல்ல விடயத்தை ஆரம்பிப்பதாயினும் அதை ஒரு பிரார்த்தனை மூலமாகவே ஆரம்பிப்பது வழக்கம். கோலாட்டமும் மிகவும் சிக்கல் நிறைந்த ஆட்டமாதலால் ஆடும் போது ஏதும் தடைகள் ஏற்படாமல் ஆடும் கோல்கள் தலையையோ கையையோ பதம்பார்த்துவிடாமல், ஆட்டத்தில் சீர் தளை பிழைக்காமல் இருக்க வேண்டும் என்று இறைவனை வேண்டி, இப் பிரார்த்தனை நடைபெறும். இதன்பின் ஆட்டக்காரர்கள் அண்ணாவியாரிடமிருந்து தாம் ஆடும் கோல்களைப் பெற்றுக்கொண்டு ஆட்டத்திற்குத் தயாராக உரிய இடத்திற்கு வருவர்.

ஆட்டத்திற்குரிய மேடை உரிய வகையில் அலங்கரிக்கப்பட்டு, நடுவில் ஓர் உரல் கவிழ்க்கப்பட்டு, கவிழ்க்கப்பட்ட உரலின் மேல் ஓர் குத்துவிளக்கு எரியவிடப்பட்டிருக்கும். உரல் ஆட்டக்காரர்கள் அளவுக்கு அதிகமாக நெடுங்காலம் இருப்பதற்கு உதவியாக இருப்பதுடன் அதன் மேல் சுடர்விட்டுக் கொண்டிருக்கின்ற குத்துவிளக்கு சிலவேளைகளில் மேடை வெளிச்சங்கள் அணைந்தாலும் ஆட்டக்கோல்கள், தலையிலோ கையிலோ அடிபடாமல் பார்த்துக்கொள்வதற்கு உதவியாக அமையும்.

எந்த ஆட்டமாக இருந்தாலும், அது ஒரு விருத்தப்பாவுடனே ஆரம்பமாகும். விருத்தத்தை அண்ணாவியாரே ஆரம்பிப்பார்.

உதாரணம் :-

**அண்ணாவியார்** : திருவினுந்திருவாய் பொருளினும் பொருளாய்த்
தெளிவினுந் தளிவதாய்ச் சிறந்த

**குழுவினர்** : நல்லதே

அண்ணாவியார் : மருவினும் மருவாய் அணுவினுக்கணுவாய்
மதித்திடாப் பேரொளி யனைத்தும்

குழுவினர் : மர்ஹபா

அண்ணாவியார் : பொருவினும் பொருவாய் வடிவினும் வடிவாய்ப்
பூதலத் துறைந்த பல்லுயிரின்

குழுவினர் : நல்லதே

அண்ணாவியார் : கருவினுங்கருவாய்ப் பெருதலம்புரந்த
கருத்தனைப் பொருத்துதல் கருத்தே

குழுவினரும் ஒன்று சேர்ந்து : கருத்தே....

விருத்தம் ஆரம்பமானவுடன் ஆட்டக்காரர்கள் ஒற்றை வட்டமாகி வலப் பக்கமாகவும், பின் இடப்பக்கமாகவும் சுற்றி வருவதுடன், விருத்தத்தின் ஈற்றடிகளில் மர்ஹபா, நல்லதே என்றும் கூறிக்கொண்டு வந்து, விருத்த முடிவை அண்ணாவியாருடன் சேர்ந்து ஏகாரத்துடன் முடிந்தபின், ஒற்றைவட்டமாக உள்ளவர்கள் இரட்டை வட்டமாக மாறி, தனது இரு கைகளிலும் உள்ள தடிகளை ஒத்த ஓசையுடன் தட்டிக் கொள்வர். விருத்தம் பாடி முடிந்தவுடன் அண்ணாவியார் "தைதாம்.... தை" என்று கூறித் தாம் பாட இருக்கும் பாடலின் தருவை ஆரம்பிப்பார். அதைத்தொடர்ந்து ஆடுவோரும் தருவைப் பாடுவார்கள். பின் அண்ணாவியாரும் அவருக்கு உதவியாக இருப்பவரும் பாடல்களைப் பாட எதிரும் புதிருமாக நிற்கும் இரட்டை வட்டத்திலுள்ள ஆட்டக்காரர்கள் தாளத்திற்கு அமைவாக ஆடத் தொடங்குவார்கள். இது மிகவும் இலகுவான ஆட்டமான தன்னாளைச் சுற்றி ஆடுதல் அல்லது "திகுர்தை" என்று வழங்கப்படும் ஆட்டத்தில் தொடங்கி, தாராட்டு, பப்பலடி, ஆவிதியே, ஓடைக்காறன், பள்ளிவிட்டடி, கீச்சான்போர், தரித்தடித்தல், நாலுவீடு செல்லுதல், தேன்கூடு, மான்வளையம், ஒற்றைமல்லி, இரட்டைமல்லி, ஐந்துவெட்டுவாள், கறுப்பு பாவையடி, என ஆட்டங்கள் விரிந்து செல்லும். கட்டுரையாளருக்கு களி, கோலாட்ட வகைகளில் 24 வகையான ஆட்டங்கள் தெரிந்திருந்தாலும் அதனையும்விட அதிகமான ஆட்ட வடிவங்கள் இதில் இருக்கக்கூடும்.

⊠⊠⊠⊠



(1) **ஒரு நோக்கு :-**

கண்ணகி ஒரு காவியத்தின் நாயகி. பின்னர் அவள் தெய்வமாகி, இன்று சக்தி வணக்கத்தின் அம்சமாகத் திகழ்கின்றாள். சிலப்பதிகாரக் கதையின் நாயகியாக இருந்தாலும் ஒரு கதாபாத்திரம் என்ற வகையில் அவள் ஒரு சாதாரண பெண்ணாகவே சித்திரிக்கப்படுகின்றாள். அக் கண்ணகி வழுவாநிலை மாந்தருக்கு வாழ்வளித்த உத்தமியா, அது எவ்வாறு?....

# வழுவாநிலை மாந்தருக்கு வாழ்வளித்த உத்தமி கண்ணகி

கலாபூஷணம் கவிஞர் தேனூரான்

இருநிலையில் இச்சிந்தனை விரிகிறது. அவை,

(i) ஒரு கதாபாத்திரமாக, கதையில் வரும் ஏனைய கதைமாந்தர்களில் வழுவாநிலை உள்ளோர்க்கு வாழ்வளித்தமை.

(ii) தெய்வமாகிவிட்ட பின் உலகிலுள்ள வழுவாநிலை மாந்தருக்கு வாழ்வளிக்கும் தன்மை.

ஒரு கதாபாத்திரமாக அவளைப் பார்க்கும் போது அவளது கற்பு முக்கியத்துவம் பெறுகிறது.

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பெனும்
திண்மை உண்டாகப் பெறின்" என்பது குறள்.

புராண இதிகாசங்களில் கற்பரசிகளாக சீதை, நளாயினி எனப் பலர் இடம்பெற்றாலும் "கற்புக்கரசி கண்ணகி" என்பதே மக்கள் மனதில் ஆழப்பதிந்த பெயராகும். கற்பு என்னும் சக்தி நமது இதிகாசங்களில் தெய்வீகமானதாக, தெய்வ சக்தியாக நிறுவப்பட்டுள்ளதை யாரும் மறுக்க முடியாது.

கற்புக்கரசியாக மட்டுமல்லாது ஒரு சாதாரண மானிடப் பெண்ணாக

அவள் வெளிப்படுத்தும் மனித நேயமும் "வழுவாநிலை மாந்தருக்கு வாழ்வளித்த" வெற்றியை சிலப்பதிகாரக் காட்சிகள் காட்டுகின்றன.

### (2) வழுவாநிலை மாந்தர் என்போர் யார்?

*"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்."* என்பது குறள்.

வாழ்வாங்கு வாழுதல் என்ற வார்த்தையில் சகல மனித விழுமியங்களும் அடங்கியிருப்பதை நாம் உணரலாம். நீதிநெறி வழுவாதவர்கள், தர்மநெறி தவறாதவர்கள், ஒழுக்கநெறி ஓம்பாதவர்கள் முதலியோரை "வழுவாநிலை மாந்தர்" எனக் குறிப்பிடலாம். அத்தகைய மாந்தர்களை புராண இதிகாசங்களில் நாம் பார்க்கின்றோம். ஸ்ரீ ராமாயணத்தில் வரும் ஸ்ரீராமர், லட்சுமணன், பரதன், சத்துருக்கன், சீதை, சுக்கிரவன், அனுமான், விபூசணன், தசரதன் முதலிய ஒவ்வொரு பாத்திரமும் வழுவாநிலை மாந்தரின் உருவகமாகும். அவ்வாறே மகாபாரதத்தில் வரும் பஞ்சபாண்டவர், துரோணாச்சாரியர், விவரனன், கர்ணன் முதலிய ஒவ்வொரு பாத்திரமும் வழுவாநிலை மாந்தரின் உருவகமாகும். இப்பாத்திரங்கள், தலை முறை, தலைமுறையாக பலநூறு வருடங்களாக நமது மக்களுக்கு இந்து மக்களுக்கு தர்மநெறிகளை உபதேசித்து வழுவாநிலையில் அவர்களை வழி நடாத்தி வருவதைப் பார்க்கின்றோம்.

உலகப் பெரியார்கள் பலர் வழுவாநிலை மாந்தராகின்றனர். அன்னை சாரதா, தெரேஸா, கஸ்தூரியா என இன, மத வேற்றுமை கடந்து பல வழுவாநிலை மாந்தர் உளர். ஒவ்வொரு கிராமத்திலும் எவ்வித விளம்பரமும் இல்லாமல் தர்ம நெறியைக் கடைப்பிடித்து வாழ்பவர்கள் ஏராளமானோர் வழுவாநிலை மாந்தராக வாழ்கின்றனர்.

### (3) சிலப்பதிகாரத்தில் வரும் வழுவாநிலை மாந்தர்கள்

சிலப்பதிகாரக் காவியத்தில் வரும் பல பாத்திரங்கள் நமது உறவினர் போல் நமக்கு நன்கு அறிமுகமாகியுள்ளனர். வணிகப் பெருமக்களான மாசாத்துவன், மாநாயகன், மாதவி, கண்ணகி, கோவலன், தேவந்தி (தோழி), கவுந்தியடிகள் (துறவி), கௌசிகன் (பார்ப்பணன்), மாடலன் (மறையவன்), மாதரி (ஆயர்), ஐயை (மாதரி மகள்), நெடுஞ்செழியன் (பாண்டிய மன்னன்), கோப்பெருந்தேவி

(மன்னன் மனைவி) இவர்கள் கண்ணகிக்கும் கோவலனுக்கும் பல்வேறு கட்டங்களில் சம்பந்தப்படுகின்றனர். ஒரு கற்புத் தெய்வத்துடன் உறவாடுகிறோம் என்பதை அவர்கள் அப்போது அறியமாட்டார்கள். அதனால் கற்புநெறி இவர்கள் அனைவருக்கும் வாழ்வளித்தது. கோவலன் மாதவியை விட்டு நீங்கி, கண்ணகியிடம் வந்தான். கா்ம வினையால் அவன் கொலையுண்டாலும், கண்ணகியின் தெய்வத் தன்மையால் அவன் தேவலோகம் செல்ல முடிந்தது. மாதவியும் அவள் மகள் மணிமேகலையும் குலத்தொழிலை விட்டு, துறவறம் பூண்டு மேலான வாழ்க்கையைத் தொடங்கினர்.

பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனும், அவனது மனைவி கோப்பெருந்தேவியும் மரணமடைந்தாலும் "மயிர் நீப்பின் உயிர்வாழாக் கவரிமான்" என்பதற்கமைய. தம் பூதவுடல் நீங்கிப் புகழுடம்பெய்தினர்.

**(4) எரியுண்ட மதுரை :-**

கண்ணகி மதுரையை எரித்தது சரியா என இன்றும் பலர் கேட்கின்றனர். ஆனால் உண்மையில் மதுரை ஏன் எரிந்தது?

சூரியனைப் பார்த்து கண்ணகி முறையிட்ட போது "உன் கணவன் கள்ளன் அல்லன்; அவனுக்குத் `தவறிழைத்த இவ்வூரை எரி உண்ணும்" என்ற அசரீரி அங்கு கூடியிருந்த அனைவருக்கும் கேட்டது எனச் சொல்லப்படுகின்றது. எனவே, தா்ம தேவதையே மதுரையை எரித்தது என்றே நாம் கொள்ள வேண்டும். கண்ணகி ஒரு கருவியாக மட்டுமே செயற்பட்டாள்.

மதுரையை எரியுண்ட போதும், கண்ணகி தா்மத்தைதக் கடைப்பிடித்தாள். அந்தணர் பத்தினிகள் நல்லோர் குழந்தைகள் முதலியவர்களை விட்டுத் தீத்திறந்தார் பக்கமே தீ செல்ல வேண்டும் எனப் புகன்றாள். இதன்மூலம் வழுவாநிலை மாந்தருக்குத் தெய்வமாகிறாள். அவள் கொடியவளாக இருந்திருந்தால் சேரன், செங்குட்டுவன் அவளுக்குக் கோயில் எழுப்பியிருக்க மாட்டான். "கடல் சூழ் இலங்கை கயவாகு வேந்தன் கண்ணகி வணக்கத்தை இலங்கைக்குக் கொண்டுவந்திருக்க மாட்டான்.

படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் எனும் பண்புகள் தெய்வத்திற்குரியவை. கண்ணகித் தாய் அதையே செய்தாள் என நாம் கொள்ளவேண்டும்.

## (5) வாழ்வளித்த தெய்வம்

சிலப்பதிகார காவியத்தைப் படிப்போர் கண்ணகியின் மறைவுக்குப் பின் நடைபெற்ற சம்பவங்களில் அதிக அக்கறை கொள்வதில்லை. சிலப்பதிகாரம் முப்பது காதைகளையும் மூன்று கண்டங்களையும் கொண்டது. அவற்றில்,

(அ) கண்ணகியின் தெய்வத்தன்மை வெளிப்படுகிறது.

(ஆ) சிலப்பதிகாரக் காவியம் இளங்கோவடிகளால் இயற்றப்படுகின்றது.

(இ) மணிமேகலை காவியம் கூட வாணிகன் சாத்தனரால் இயற்றப்படுகிறது.

(ஈ) சேரநாட்டில் கண்ணகிக்குக் கோயில் எழுப்பப்படுகின்றது.

(உ) கண்ணகி சிலை அமைப்பதற்கான கல் இமயத்தில் இருந்து கொண்டு வரப்படுகிறது.

(ஊ) இப்பயணத்தில் குறிக்கிட்ட கனக, விசயர் என்ற இரு மன்னர்கள் தோற்கடிக்கப்பட்டுச் சிறைப்படுகின்றனர்.

(எ) கடல்சூழ் இலங்கைக் கயவாகு வேந்தனால் கண்ணகி வணக்கம் இலங்கைக்குக் கொண்டுவரப்படுகிறது.

(ஏ) பல நாடுகளில் பத்தினி வணக்கம் பரவியது.

இதெல்லாம் சரி. ஆனால், இவற்றினால் மக்களுக்கு ஏற்பட்ட நன்மை என்ன? கற்பின் சக்தி மூலம் வழுவாநிலை மாந்தருக்கு வாக்களிக்க முடியும் என்ற புதிய கோட்பாடு நிறுவப்பட்டது. அன்றும், இன்றும், என்றும் பத்தினித் தெய்வ வழிபாட்டின் தொடர்ச்சியே என்பதை நாம் உணரவேண்டும்.

## (6) கற்புநெறியும் பெண்களும்

கற்புநெறி என்பது : இந்துக்களின் ஆத்மீக நெறிகளில் ஒன்று.

"தெய்வம் தொழா அள் கொழுநற்
தொழு தெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை"

என்பது தெய்வப் புலவர் வள்ளுவரின் வாக்கு. கற்பு நெறியால் தீய சக்திகளைச் சுட்டெரிக்க முடியும் என்பது இந்து விஞ்ஞானம்.

கற்புநெறியால் தீயவர்கள் தம்மை நெருங்க முடியாமல் காக்க முடியும் என்பது இந்து தர்மம். மேலை நாட்டு விஞ்ஞானத்தில் இக்கோட்பாடு எள்ளி

நகையாடப்படுகிறது. மேல்நாட்டு நாகரிகத்தால் கறைபட்டுப்போன நம்நாட்டுப் பெண்களும் சில வேளைகளில் இந்த எண்ணங்களில் ஈடுபடுகின்றனர். அரைகுறை உடை, ஆண்களைக் கவர வேண்டும் என்ற ஆதங்கம் என்பன நிச்சயமாக நல்ல பண்புகள் அல்ல என்பதை நாம் அறிவோம். நாடும் அறியும். ஆனால் அன்னிய மோகத்தால் நமது பெண்களின் அறியாமையால் நாம் இந்த நிலைக்கு ஆளானோம். அதன் காரணமாக, பாலியல் வல்லுறவு, பாலியல் சுதந்திரம் முதலிய கலாசார சீரழிவுகள் நமது பெண்களைப் பெரிதும் பாதிக்கின்றன. பெண்ணிலைவாதம் என்ற புதிய கோட்பாடு ஒன்று இந்த சீரழிவுக்கு மேலும் வழிவகுக்கின்றது. ஆனால். கற்புநெறி மூலம் நாம் வழுவாநிலை மாந்தராக முடியும். உன்னத வாழ்வு பெற முடியும்.

**சுவாமி விவேகானந்தர் கூற்று**

சுவாமி விவேகானந்தர், ஆன்மீகத் தலைவர். அவர் ஐரோப்பிய நாடுகளில் மூன்று வருடங்களுக்கு மேல் ஆத்மீகப் பயணம் செய்து, பாரதப் பெண்களின் மகிமை பற்றியும், அவர்களின் கற்புநெறி பற்றியும் மிக ஆணித்தரமாக, விஞ்ஞானபூர்வமாகவும் எடுத்துக் கூறினார். அதன் பயனாக மேல்நாட்டுப் பெண்கள் கற்பின் பெருமையை உணர்ந்து தமிழ் நாட்டுப் பண்பாடுகளைப் பெரிதும் மதித்தனர். சிலர் அவரைப் பின்பற்றி அவரது சிஷ்யைகளாகினர். (உதாரணம் மார்கிட் நோபிள் என்ற நிவேதிதா) இவ்வாறு உலக மக்களின் கவனத்தை ஈர்த்த கற்புநெறிக் கோட்பாட்டின் மூலவர் கண்ணகியே என்பதை நாம் நினைவுகூர வேண்டும்.

கற்புநெறி ஒரு சமூகத்திற்கு வாழ்வளிக்கின்றது; நாடு ஒன்றிற்கு வாழ்வளிக்கிறது. பாலியல் வன்முறையும், பாலியல் சுதந்திரமும் தலை விரித்தாடும் இன்றைய நவநாகரிக உலகில் அவற்றால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை, பேராபத்தைத் தடுத்து நிறுத்தக்கூடியது கற்புநெறி ஒன்றே!

கிராமப்புறங்களில். இதன் முக்கியத்துவம் நன்கு உணரப்பட்டுள்ளது. ஆனால் பட்டினங்களிலும் உயர்கல்வி நிறுவனங்களாகிய பல்கலைக்கழகங்களிலும் இது நன்கு உணரப்படவில்லை. வழுவாநிலை மாந்தருக்கு வாழ்வளிக்கும் கற்புநெறி மக்கள் மத்தியில் நன்கு விதைக்கப்பட வேண்டும்.

**கண்ணகி வழிபாடு**

கற்பின் தெய்வமான கண்ணகி வழிபாடு அன்று முதல் இன்றுவரை நீடிப்பதும், அதில் மக்கள் அனைவரும் மிகுந்த ஈடுபாட்டுடன் பங்குகொள்வதும் நாம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய ஒரு விடயமாகும். இவ்வணக்கத்தோடு தொடர்புபட்ட பல சடங்குகள் நாட்டுக்கு நன்மை பயப்பதாகும்.

வரட்சி நீங்குதல், மழை பெய்தல், நோய் நொடிகள் அகலுதல், இச்சடங்குகளால் ஏற்படும் நன்மைகளாகும். அநேகமான தமிழ் கிராமங்களில் கண்ணகி உற்சவம் ஆண்டுதோறும் நடைபெறுகின்றன. இந்த உற்சவங்களில் பெண்கள் அதிகமாகப் பங்குபற்றுகின்றனர். மிகுந்த பயபக்தியுடன் காணிக்கை செலுத்துகின்றனர். பத்தினித் தெய்வத்தை வழிபடுவதன் மூலம் தமது கற்பு நெறியைக் காத்துக்கொள்கின்றனர்.

பல மேல் நாட்டவர்கள் இந்த உற்சவங்களை நேரில் வந்து பார்வையிட்டு; விரிவான கட்டுரைகளை எழுதியுள்ளனர். இவை மக்களின் பயபக்தியையும் அவற்றின் பின்னாலுள்ள ஆழமான தெய்வ நம்பிக்கையையும் வலியுறுத்துகின்றது. இத்தகைய ஒரு வழிபாட்டின்மூலம் வழுவாநிலையிலுள்ள மாந்தர்கள் அனைவருக்கும் வாழ்வளித்த உத்தமியான கண்ணகி என்றும் போற்றுவதற்குரிய தெய்வமாகிறாள்.

## *தெய்வங்களும் மூலிகைகளும்*

| | | |
|---|---|---|
| சிவபெருமான் | - | வில்வம் |
| மகாவிஷ்ணு | - | துளசி |
| பராசக்தி | - | வேம்பு |
| முருகன் | - | கடம்பு |
| விநாயகர் | - | அறுகு |

## தெய்வங்களும் பிரியமானவைகளும்

| | | |
|---|---|---|
| சிவபெருமான் | - | அபிஷேகப் பிரியர் |
| மகாவிஷ்ணு | - | ஆடை ஆபரண அலங்காரப் பிரியர் |
| விநாயகர் | - | மோதகம், அவல், அப்பம் பிரசாதப் பிரியர் |
| முருகன் | - | காவடி, நடனம் போன்ற கேளிக்கைப் பிரியர் |
| பராசக்தி | - | பாணக்கம், சர்க்கரைப்பொங்கல் பிரியர் |
| வயிரவர் | - | வடைமாலை, உறொட்டி பிரியர் |

# மண்முனைப்பற்று பிரதேசத்திலுள்ள பேச்சுவழக்கு மொழியும் அதிலுள்ள சொற்களின் சிறப்புக்களும்

(தொடக்க ஆய்வுச் சுருக்கம்)

கலாபூசணம் - கவிஞர் ஆரையூர் அமரன்

மனித உள்ளங்களில் தோன்றும் எண்ணங்களை வெளியிடுவதற்கு உதவுவதில் சிறப்பிற்குரியது மொழியாகும். ஒரு மொழியின் இரு வேறுபட்ட வடிவங்களே பேச்சுவழக்கு மொழியும், எழுத்துவழக்கு மொழியுமாகும். பேச்சுவழக்கு மொழி முன் தோன்றியதாகும். எழுத்து வழக்குமொழி பின்னர் தோன்றியதாகும். மனிதன் மொழியினைப் பழகத் தொடங்கும் போது முதலிலே பழகுவது பேச்சுவழக்கு மொழியேயாகும்.

தமிழ் இலக்கண நூல் தமிழ்மொழிக்குரிய எழுத்துக்களைப் பற்றிக் கூறும்போது அவ்வெழுத்துக்களை இரு வேறு வடிவங்களாகக் கூறியுள்ளது. அவற்றுள் ஒன்று ஒலிவடிவமாகும். மற்றது வரி வடிவமாகும். மேற்காட்டியபடி எழுத்துக்களுக்குக் கூறப்பட்ட இந்த இரண்டு வடிவங்களும் இவ்வெழுத்துக்களை உறுப்புகளாக ஒட்டிப்பிறந்த சொற்களுக்கும் பொருந்த மானதாகும்.

மொழி, நாள்தோறும் பல்வேறு வகையான படித்த தரங்களில் உள்ளவர்களாலும் பயன்படுத்தப்பட்டுவருவதாகும். இதன்படி பேச்சுவழக்கு மொழியினை ஆராய்ந்து, அவதானித்துப் பார்த்தால், அப்பேச்சுமொழிகளில் மிகத் தொன்மையுள்ள நாட்டார் பாடல்களே தோன்றியதாக அறியக்கூடியதாய் உள்ளது. பின்னர் இதன் தொடர்ச்சியாகவே, செய்யுள் வரம்பிற்கு உள்ளடங்கிய செய்யுள்கள் தோன்றலாயின. இவ்வாறேதான் பேச்சுவழக்கு மொழியிலிருந்தே இலக்கண வரம்புக்கு உள்ளடங்கிய எழுத்து வழக்குமொழியும் தோன்றியதாகும். இங்கு பேரறிஞர் டார்வின் அவர்களின் (பரிணாம) படிமுறை வளர்ச்சி விதி - மொழியின் வளர்ச்சிக்கும் பொருந்தியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

எள்ளிலிருந்து எண்ணெய் பெற்றதுபோல் - இலக்கியமாகிய எள்ளிலிருந்து இலக்கணம் எனும் எண்ணெய் பெறப்பட்டதாகும். இதனையே அறிஞர்கள் எள்ளிலிருந்து எண்ணெய் பெறுவது போல் - இலக்கியத்திலிருந்து பெறுவதே

இலக்கணம் எனச் சுருக்கமாகவும் விளக்கமாகவும் கூறியுள்ளனர். இது மேலும் பேச்சுவழக்கிலுள்ள மொழியிலிருந்துதான் எழுத்து வழக்கிலுள்ள மொழி பிறந்தது என்பதை வலியுறுத்தக்கூடிய சிறந்ததொரு எடுத்துக்காட்டாகும்.

எழுத்து வழக்கிலுள்ள மொழி ஏட்டில் அல்லது காகிதத்தில் வரையப் பெற்ற சுரைக்காய் வடிவம் போன்றது எனக் கூறினால், அந்த ஏட்டில் அல்லது காகிதத்தில் வரையப்பெற்ற சுரைக்காயின் உண்மை வடிவமே பேச்சு வழக்கில் உள்ள மொழி எனக் கூறலாம். மேலும் கூறினால், எழுத்து வழக்கு மொழி - ஒருவரின் நிழல்படம் (புகைப்படம்) எனக் கூறினால் - அந்நிழல் படத்தில் உள்ளவரின் உண்மையான வடிவம் போன்றதே பேச்சு வழக்கிலுள்ள மொழி என எடுத்துக்காட்டலாம்.

எமது பேச்சுவழக்குத் தமிழ் மொழியை எடுத்து அவதானித்து, ஆராய்வோமானால், இந்தியத் தமிழகப் பேச்சு வழக்கிற்கும், இலங்கைத் தமிழகப் பேச்சு வழக்கிற்கும் இடையில் வேறுபாடுகள் உள்ளதை அறியலாம். இதேபோல் இலங்கையிலுள்ள பேச்சுவழக்கினை அவதானித்து ஆராய்வோமானால், யாழ்ப்பாணப் பகுதியில் ஒருவகைப் பேச்சு வழக்கும், மட்டக்களப்புப் பகுதியில் வேறு ஒருவகைப் பேச்சுவழக்கும், தென் இலங்கைப் பகுதியில் வேறு ஒருவகைப் பேச்சுவழக்கும் நடைமுறையிலிருந்து வருவதை அறியலாம். இத்தகைய பேச்சுவழக்கு மொழியினால் தமிழ் மொழியின் நிலையான எழுத்து வழக்கு மொழியின் பொதுத் தன்மைக்குப் பாதிப்புக்கள் உண்டாவதில்லை.

மட்டக்களப்புத் தமிழகத்திலுள்ள மண்முனை எனும் நிலப்பரப்பு அக்காலத்தில் அரச ஆட்சிக்குரிய தலைமைத்துவச் சிறப்பான இடமாய் விளங்கியது. மேலும், மண்முனை எனும் நிலப்பரப்பின் அயலில் அமைந்துள்ள ஊர்களில் ஒன்றான ஆரையம்பதி எனும் ஊரில் அக்காலத்தில் அமைந்திருந்த 'தீர்வைத்துறை' யின் சிறப்பினாலும், ஆரையம்பதி என்ற ஊரை அடுத்துள்ள கோவில்குளம் என்ற ஊரில், அன்று பலவகையான சிறப்புடன் விளங்கி, இன்று அழிந்து மண்மேடாகத் தோன்றும் சைவசமயக் கோவிலினாலும், இதுபோன்ற பலவகைச் சிறப்புகளாலும், இப்போது மட்டக்களப்புத் தமிழகத்திலுள்ள மண்முனைப்பற்று எனும் அரசாங்க நிருவாகப் பிரிவு அன்று தலைசிறந்து விளங்கியது என்பது மிகைப்படக் கூறுவது ஆகாது.

மேற்கூறிய தொன்மைச் சிறப்பிற்குரிய நிலப்பரப்பில் வாழ்ந்துவரும் மக்களின் பேச்சுவழக்கு மொழியினையும் அப்பேச்சுவழக்கு மொழியிலுள்ள தனித்துவமும், தொன்மையுமுள்ள சிறப்புக்களை எடுத்துக்கூற முன்வந்துள்ளேன். குற்றம் குறைகள் இதில் காணப்படுமாயின், என்னிடம் எடுத்துக்கூறுங்கள். நிறைவுகள் காணப்படுமாயின் மற்றவர்களிடம் எடுத்துக் கூறுங்கள். இங்கு ஆராயப்படும் பேச்சு

வழக்கு மொழியிலுள்ள சொற்கள்-பொதுவாக மட்டக்களப்புத் தமிழகத்திலும், சிறப்பாக மட்டக்களப்புத் தமிழகத்தில் மண்முனைப்பற்று நிருவாகப் பிரிவில் உள்ள ஊர்களிலும் பேச்சுவழக்கிலுள்ள சொற்களாகும்.

[1] **கணகாட்டு**

(கண்ணப்பரும் - காத்தமுத்தரும் கதைக்கும் பொழுது)

**காத்தமுத்தர்** :- "அடே கண்ணப்பா! எத்தனை நாளைக்கு என்ன ஏமாத்தப் போறா? மரியாதயோட கடனா வாங்கின காசத் தந்துபோடு. தராட்டி நம்ம ரெண்டுபேருக்குமிடையில் **கணகாட்டுத்தான்** வரும்."

**கண்ணப்பர்** :- "இந்தக் கணகாட்டுக்கெல்லாம் இந்தக் கண்ணப்பன் பயந்தவன் இல்ல. அது கிடக்கட்டும். இப்ப ஆத்தில மீன்குஞ்சிகள் குறஞ்சிபோச்சிது. அதால தொழில் இப்ப **சவுப்பாக்** கிடக்குது. ஆண்டவனே எண்டு தொழில் சரிவந்தா உன்னிட்ட வாங்கின காசக் காலடியில கொண்டுவந்து தந்து போடுவன். கொஞ்ச நாளைக்குப் பொறுத்துக் கொள். எல்லாம் சரிவரும்.

**(சவுப்பாக்கிடக்குது = மோசமாயிருக்கிறது)**

'கணை' என்பது வில்லில் பொருத்தி எய்யப்படும் அம்பினைக் குறிக்கும் சொல்லாகும். காட்டவேண்டி அல்லது கட்டவேண்டிவரும் என்பது - வில்லேந்தச் சண்டை பிடிக்கவேண்டி வரும் என்பதாகும். எனவே - **கணகாட்டு** என்ற சொற்தொடர் வில் ஏந்திச் சண்டை பிடிக்கும் நிலையைக் குறிப்பதாகும். இச்சொற்தொடர் - மனித இனம் அம்பும், வில்லும் ஏந்தி மிருகங்களை வேட்டியாடிய காலத்தை ஒட்டித் தோன்றியதாகும்.

ஒருபானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதற்கு இணங்கக் **"கணகாட்டு"** என்ற சொற்றொடர் ஒன்றே, மேற்குறிப்பிட்ட இப்பகுதியிலுள்ள பேச்சுவழக்கு மொழியின் தொன்மைச் சிறப்பிற்குரிய ஓர் சிறந்த எடுத்துக் காட்டாகும். வான்புகழ் வள்ளுவப் பெரியார் - தனது திருக்குறளில் - 'கணை' என்ற சொல்லை வைத்து "கணை கொடிது யாழ்கோடு செவ்விது ஆங்கு அன்ன வினைப்படு பாலால் கொளல்" (அதி - 28-279) எனப் பாடியிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். அம்பு வடிவில்நேராயிருந்தாலும், செயலில் கொடியது யாழ், தண்டால் வளைந்திருந்தாலும், செயலால் இனியது. அங்ஙனமே, தவம் செய்வாருள்ளும் யார் கொடியவர்? யார் நல்லவர்? என்பதை அவர் அவர் கோலத்தால் கொள்ளாமல், செயல்வகையாலே அறிந்துகொள்ள வேண்டும்.

[2] **விற்பூட்டு**

(குமாரவேலியரும் - கோணாமலைச் சாத்திரியாரும் பேசும்பொழுது)

**குமாரவேலியர்** :- "சாத்திரியார்! நான் - பஞ்சுபடாப் பாடுபட்டுக் கோவில்குளப் பள்ளிக்

கூடப்பக்கத்தில ஒரு வீட்டக்கட்டி முடிச்சிருக்கன். அந்த வீடு குடிபோறதுக்குப் பஞ்சாங்கத்தப் பாத்து ஒரு நல்லநாளாச் செல்லவேணும்.

**சாத்திரியார்** :- அதுசரி இப்பதான் எண்ட பின் வளவுக் காறனோட, எண்ட வளவுக்குள்ளால ஒழுங்கை ஒண்டுக்கு நிலம் விடுற காரியமாச் சச்சரவுப்பட்டுக் கொண்டிருக்கிற, **விற்பூட்டான** நேரத்தில நீயும் வந்திட்டா உன்னக் கும்பிட்டுச் சொல்லுறன், குறைநினைக்காம இரண்டொருநாள் கழிச்சி வா, ஆறுதலா பஞ்சாங்கத்தப் பாத்து ஒரு நல்லநாளாச் சொல்லுறன்.

இங்கு, மேற்காட்டிய **விற்பூட்டு** என்ற சொற்றொடர் வில்லும் - அம்பும் ஏந்திச் சண்டையிடக்கூடிய நேரம் என்பதைக் குறிக்கிறது. **(விற்பூட்டான நேரம் = அபாய நேரம்)** இதனை எழுத்துவழக்கு மொழியில் கூறுவதாயின், ஆபத்து வரக்கூடிய நேரம் எனக் கூறலாம். இதேபோல் **"வில்லங்கம் - வில்கண்டம்"** என்ற சொற்தொடர்கள் - இப்பகுதிப் பேச்சுவழக்கு மொழியில் உள்ளன. இச் சொற்தொடர்களும் வில்லை ஒட்டியே பிறந்தவையாகும். இதனை எழுத்துவழக்கு மொழியில் **"ஆபத்து"** எனக் கூறலாம்.

**(3)** **வழுதுளங்காய்**

*(தாயும் - மகனும் கதைக்கும் பொழுது)*

**தாய்** :- "தம்பி! இண்டைக்கு மரக்கறி ஒண்டுமில்ல. சந்தைக்குப் போய்த் தெரிஞ்சு பாத்து அஞ்சாறு **வழுதுளங்காயும்** - பத்துப்பதினைஞ்சி வெண்டிக்காயும் வாங்கிற்றுவா"

**மகன்** :- சந்தையில வாங்கிற சாமான்கள் எல்லாத்தையும் ஒரே நேரத்தில சொல்லிப்போடு, **மறுகா**, அதுவாங்கிவா - இதுவாங்கிவா எண்டு என்னப் போட்டுக் கரைச்சல் படுத்தாத." (மறுகா = மறுகால் = மறுதரம் = மறுபொழுது)

இங்கு பேச்சுவழக்கு மொழியில் **வழுதுளங்காய்** என்ற சொற்தொடர் வந்துள்ளது. இந்த வழுதுளங்காய் என்ற சொற்தொடர் எழுத்துவழக்கு மொழியில் கத்தரிக்காய் எனக் கூறப்படும். **வழுதுளங்காய்** :- வழுதுணங்காய் என்றும் திருத்தமாகவும் கூறப்படும். "வரகரிசிச்சோறும் **வழுதுணங்காய் கறியும்** -" என்ற ஔவைப் பாட்டியின் பாடலில் இந்த வழுதுணங்காய் என்ற சொற்தொடர் வந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**(4)** **அடுக்குப் பார்த்தல்**

*(அல்லிசீனியரும் - அருச்சுனன் சின்னத்தம்பியரும் கதைக்கிறபொழுது)*

**அல்லிசீனியர்** :- "வாறகிழம அல்லி நாடகம் **அடுக்குப்பாக்கிறதா** அண்ணாவியார் சொல்லிப்போட்டுப் போறார்."

**சின்னத்தம்பியார் :-** "என்னிட்ட மட்டும் சொன்னாப்போதுமா? கூத்தாடுற எல்லாரிட்டையும்தானே சொல்லவேணும். அதோட ஊர் முழுதும் அறியச் சொல்லவேணுமே"

(இங்கு விரிவு அஞ்சி - பேச்சுவழக்குமொழியிலுள்ள சொல்லுக்கு அல்லது சொற்தொடருக்கு பே.வ.மொ.சொ. என்றும் எழுத்து வழக்கு மொழியிலுள்ள சொல்லுக்கு அல்லது சொற்தொடருக்கு எ.வ.மொ.சொ. என்றும் சுருக்கமான தொடர் இடம்பெறும் என்பதை இங்கு குறிப்பிடுகின்றேன்.)

பே.வ.மொ.சொ.தொ. - அடுக்குப்பார்த்தல்
எ.வ.மொ.சொ.தொ. - ஒத்திகை பார்த்தல்

[5] **சோட்டை**

(கணவனும் மனைவியும் கதைக்கிறபொழுது)

**சோட்டையாயிருக்குது**

**கணவன் :-** எனக்குச் சோளன் அப்பம் தின்னச் சோட்டையாயிருக்குது

**மனைவி :-** இரண்டொருநாள் பொறுத்திரு. நானே சோளன் அப்பம் சுட்டுத் தாறன் உண்ட சோட்டை தீருமட்டும் தின்னலாம்.

பே.வ.மொ. சொல்:- சோட்டையாயிருக்கு
எ.வ.மொ.சொல் :- ஆசையாயிருக்கு (அ.பி.ப.பா.)

[6] **விடுப்புப் பார்த்தல்**

(தாயும் மகளும் கதைக்கும் பொழுது)

**மகள் :-** "அம்மா! அம்மா! நான் பள்ளிக்கூடம் விட்டு வரக்குள்ள வழியோரத்தில நாயும் நாயும் சண்டபுடிச்சதப் பாத்துக்கொண்டு ஓடுனாப்பில வழியில சறுக்கி விழுந்து - கால், கை, தல எல்லாம் காயப்பட்டுப் போனன்."

**தாய் :-** "அடிபோடி மடச்சி! உனக்கு நான் பள்ளிக்கூடத்துக்குப் போற வாற நேரத்தில விடுப்புப்பாக்காம வீடுவந்து சேரவேணும் எண்டு எத்தன தரம் தான் சொல்லியிருக்கன். சொல்லுக்கேக்காட்டி இப்படித்தான் எல்லாம் நடக்கும் "தாய் சொல்லத் தட்டாதே" எண்டு பள்ளிக்கூடத்தில படிச்சாமட்டும் போதுமா?

பே.வ.மொ. சொற்தொடர் :- விடுப்புப் பார்த்தல்
எ.வ.மொ. சொற்தொடர் :- புதினம் பார்த்தல் / பராக்குப்பார்த்தல்

[7] **ஆணம்**

(அரசம்மாவும் அழகம்மாவும் கதைக்கிறபொழுது)

**அரசம்மா :-** "அடியே மச்சாள் அழகம்மா; இண்டைக்கு நீ என்ன கறிஆக்கியிருக்கா?

அழகம்மா :- "இண்டைக்கு வெள்ளிக்கிழம எண்டதால, மீன் நல்ல மலிவாக் கிடச்சுது, அதால மனசுக்குப் புடிச்சபடி கறியெல்லாம் ஆக்கியிருக்கன். சுறா மீன்பொரியல், உழுவமீன் சுண்டல், ஒட்டி மீன்குழம்பு, கிளக்கன் மீன் வெள்ளாணம்

அரசம்மா :- இண்டைக்குப்பகல் சாப்பாட்ட உண்ட வீட்டில வைச்சா வாய்க்கு ருசியாக வயிறு முட்டச் சாப்பிடலாமெண்டு எண்ணுறன்.

அழகம்மா :- என்ன நீ, எண்ணுறன் எண்டு ஒரு மாதிரியாக் கதைக்கிறா - இது உண்ட அண்ணன்ர வீடுதானே நானென்ன உன்னச் சாப்பிடாமப் போக விடுவணெண்டா? எண்ணுறா? - நீ சாப்பிட்ட புறகுதான் உன்ன எண்ட வீட்ட விட்டுப் போக விடுவன்.

அரசம்மா :- சரி, சரி மச்சாள் நான் எண்ணினதும் நீ சொல்லுறதும் சரியாத்தானிருக்கு இதில எந்தவிதமான பிசகும் கிடையாது.

(பிசகும் = பிழையும்)

பே.வ.மொ.சொ. - **ஆணம்**

எ.வ.மொ.சொ. - **சொதி**

இதன்கீழ்வரும் நாடோடிப்பாடல், இப்பகுதியில் பாடப்பட்டுவரும் ஒரு பழம் பாடலாகும். இப்பாடலிலும் **'ஆணம்'** என்ற சொல் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

*மாமிக்கு மருமகள்*
*என்ன? சொன்னாள்டி*
*மாங்காய்ப் புளி ஆணம்*
*காய்ச்சச் சொன்னாள்டி*

*மத்த மருமகள்*
*என்ன சொன்னாள்டி*
*மச்சக் கறியொண்டு*
*ஆக்கச் சொன்னாண்டி*

[8] **பொடியன் – பொடிச்சி**

(பொன்னையாவரும் - சின்னையாவரும் கதைக்கிற பொழுது)

பொன்னையாவர் :- "என்ன! வீட்டில புள்ளையள் ஒருவரையும் காணல்ல."

சின்னையாவர் : "மூத்த பொடியன் கூத்துப்பழகப் போயிற்றான். இளைய பொடிச்சி விளையாடப் போயிற்றாள்.

| | | | |
|---|---|---|---|
| பே.வ.மொ.சொ. | :- பொடியன் | எ.வ.மொ.சொ. | :- சிறுவன் |
| பே.வ.மொ.சொ. | :- பொடிச்சி | எ.வ.மொ.சொ. | :- சிறுமி |

(9) **அயத்துப்போனன்**

(நல்லதம்பியரும் - செல்லத்தம்பியரும் கதைக்கும் பொழுது)

**நல்லதம்பியர்** :- வரக்குள்ள வயிரமுத்தனையும் கூட்டிக்கொண்டு வா எண்டு சொன்னேன் ஏன்? அவனக் கூட்டிக்கொண்டுவரவில்ல.

**செல்லத்தம்பி** :- உன்னிட்ட வர வெளிக்கிட்ட நேரத்தில மாமனாரோடக்கொடுக்கல் வாங்கல் - விசயமாகச் சச்சரவுப்பட்டதால - மனங் குழம்பிப்போய் வயிரமுத்தக் கூட்டிவாறத **அயத்துப்போனன்** - வேணுமெண்டால் இப்ப போய்க் கூட்டிக் கொண்டு வாறன்.

பே.வ.மொ.சொற்றொடர் :- **அயத்துப்போனேன்**

எ.வ.மொ.சொற்றொடர் :- **மறந்துபோனேன்**

(10) **ஓங்காளித்தல்**

(கணவனும் மனைவியும் கதைக்கும் பொழுது)

**கணவன்** :- ஏன்? தம்பி ஓங்காளிக்கிறான்.

**மனைவி** :- அவன் என்னத்தத் திண்டானோ தெரியாது. சமியாக்குணத்தால ஓங்காளிக்கிறான் போலத் தெரியுது. எதுக்கும் இஞ்சிக்கிழங்க அரைச்சிக் குடுத்துப் பாப்பம்.

பே.வ.மொ.சொல் :- **ஓங்காளித்தல்**

எ.வ.மொ.சொல் :- **சத்தியெடுத்தல் அல்லது வாந்தியெடுத்தல்**

(11) **பக்கிள்**

(அப்பாவும் - மகனும் கதைக்கிறபொழுது)

**அப்பா** :- அடே! மனேதம்பி! இப்ப ரெண்டொரு நாளா ராத்திரி எட்டு, ஒம்பது மணியளவில எங்கட பின் வீட்டு வளவில உள்ள மாமரத்துக்கு மேல இருந்து பக்கிள் கத்திக்கொண்டு வருகுது அதக் கல்லால எறிஞ்சி திரத்திவிடு.

**மகன்** :- "அது கத்தினாக் கத்திற்றுப் போகுது. அதால நமக்கென்ன நட்டம்?"

**அப்பா** :- "பக்கிள் கத்துறது கூடாதாம் எண்டு சொல்லுறாங்க. அதாலதான் சொல்லுறன்."

**மகன்** :- "அப்படின்ன, நான் அதக் கல்லால எறிஞ்சி துரத்துறன்"

பே.வ.மொ.சொல் :- **பக்கிள்**

எ.வ.மொ.சொல் :- **ஆந்தை**

(12) **ஏனம்**

(அம்மாவும் - மகளும் கதைக்கிற பொழுது)

**அம்மா** :- "புள்ள சின்னவள் கறி வைக்கிற ஏனத்தையும் நல்ல துப்பரவாகக் கழுவிவை மகள்."

மகள் :- "அம்மா! நான் சட்ட தைச்சிக்கொண்டிருக்கன். அக்காச்சி அன்னப் பிள்ளையிட்டச் சொல்லன்கா"

பே.வ.மொ.சொல் :- ஏனம்

எ.வ.மொ.சொல் :- பாத்திரம்

[13] **கல்லை**

(நல்லையாவரும் செல்லையாவரும் கதைக்கிறபொழுது)

**நல்லையாவர் :-** "அடே! தம்பி செல்லையா, கந்தன் என்றவனும் காசுபதி என்றவனும் ஒண்டுக்கும் உதவாது எண்டு, கழிச்ச மரத் துண்டுகளுக்காக எச்சுக் கல்லைக்கு நாய்கள் சண்ட போடுறாப்போல சண்ட போடுறானுகள்."

**செல்லையா :-** "சொல்லுக் கேக்காதவனுகளோட கதைக்கிறதால பலனில்ல. அதவிட்டுப்போட்டு உங்கட காரியத்தக் கவனியுங்க."

பே.வ.மொ.சொல் :- **கல்லை**

எ.வ.மொ.சொல் :- **இலைக்கலம்**

இப்பகுதியில் ஒருவர் இறந்துவிட்டால் இறந்தவரது வீட்டார் இறந்தவரது வீட்டினுள் வாழை இலையில் உணவுப்பொருட்களை வைத்து, இறந்தவருடைய ஆன்மா சாந்திக்காக இறைவனை வழிபடும் வழக்கமுண்டு. இதனைக் **கல்லையில் வைத்தல்** என்று கூறுவர். இது இங்கு குறிப்பிடத்தக்க எடுத்துக்காட்டாகும்.

[14] **அறும்பு**

(மரவியாபாரியார் மாமாங்கத்தாரும், மரமக்கறி வியாபாரியார் மாணிக்கத்தாரும் கதைக்கிற பொழுது)

**மர வியாபாரியார் :-** "அடேய்ப்பா மாணிக்கம், எனக்கு மருந்துக்காக அஞ்சாறு எலுமிச்சம்பழம் தேவைப்படுது. எங்கும் தேடிப்பாத்தன் கிடைக்கல்ல. எப்படியாச்சும் நீதான் தேடி எடுத்துத் தரவேணும்.

**மரக்கறி வியாபாரியார் :-** இப்ப எலுமிச்சம்பழத்துக்கு அறும்பானகாலம் - எண்டாலும் தெண்டிச்சி எடுத்துத்தரப் பாக்கிறன்.

பே.வ.மொழி.சொல் :- அறும்பு (அறும்பான காலம்)

எ.வ.மொழி.சொல் :- பஞ்சம் (பஞ்சமான காலம்)

[15] **மறுகா – ஒருக்கா**

(ஓடாவியார் தம்பிமுத்தரும் வண்டிக்கார வயிரமுத்தரும் கதைக்கும்பொழுது)

**ஓடாவியார் தம்பிமுத்தர் :-** "அடே தம்பி வயிரமுத்து! ஒருக்கா அந்தக் கொல்லன் காளிக்குட்டியின்ர கம்மாலைக்குப்போய் நான் அவனத் தேடுறனெண்டு சொல்லிப்போடு.

**வண்டிக்கார வயிரமுத்தர் :-** இப்பநான் அவசரமாச் சந்தைக்குப் போய்ச் சாமான் வாங்கப்போறன். முதல் அதமுடிச்சிட்டுப் போட்டு - மறுகா நீ சொன்னத அவனிட்டச் சொல்லுறன்.

| | | |
|---|---|---|
| பே.வ.மொ.சொல் | :- | மறுகா |
| எ.வ.மொ.சொல் | :- | மறுபொழுது = மறுதடவை = மறுதரம் |
| பே.வ.மொ.சொல் | :- | ஒருக்கா |
| எ.வ.மொ.சொல் | :- | ஒருதடவை = ஒருமுறை = ஒருபொழுது |

இங்கு **"மறுகால்"** என்பதில் உள்ள "ல்" என்ற எழுத்து கடைக் குறையாய் **'மறுகா'** எனப் பேச்சுவழக்கு மொழியில் வந்துள்ளது. இதேபோல் ஒருகால் என்பது **"ல்"** என்ற எழுத்துக்கடைக்குறையாகவும், **"க்"** என்ற எழுத்து இடையில் தோன்றுதலைப் •பெற்று, பேச்சுவழக்கு மொழியில் **'ஒருக்கா'** என வந்துள்ளது.

கால் - என்பதன் பொருள்- பாதம், தூண், கம்பம் முதலிய பொருள்களையும் தரும் சொல்லாகும். இங்கு இச்சொல் பொழுது, தடவை, தரம் என்ற பொருள் குறித்து வந்துள்ளதாகும். இச்சொல் வான்புகழ் வள்ளுவப் பெரியார் வழங்கியுள்ள திருக்குறளில்

**"யான் நோக்குங்கால் நிலன் நோக்கும் நோக்காக்கால்**
**தான் நோக்கி மெல்ல நகும்"** (அதி. 110 - 1094வது குறள்பா)

(நான் அவளை **நோக்கும்போது** அவள் **எதிர்நோக்காமல்** நாணித் தலைகுனிந்து நிலத்தை நோக்குவாள். அதைக்கண்டு நான் அவளை நோக்காத போது அவள் என்னை நோக்கித் தனக்குள் மகிழ்ந்து புன்னகைப்பூப்பாள்) **"நோக்குங்கால்" :- நோக்கும் பொழுது** எனவும் **நோக்காக்கால் :-** நோக்காதபொழுது எனவும் கூறியிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

**[16]** **அறுநீர்**

(வட்டவிதானையார் வரதராசரும் பட்டங்கட்டியார் பரமக்குட்டியரும் கதைக்கிறபொழுது)

**வட்டவிதானையார் :-** "என்ன பரமக்குட்டி ஆத்துத் தொழில்கள் எப்படிப் போகுது?"

**பட்டங்கட்டியார் :-** "அதுகள இப்ப ஏன் கேப்பான்- இப்ப ஆத்தில மீன் சாதிகள் குறஞ்சிபோச்சுது. மீன்பிடிக்கிற ஆக்கள் தொக கூடிப் போச்சுது". ஆத்தில மீன் பிடிக்கிற தொழில, லேசான தொழில் எண்டு நினைச்சா, அது பெரிய மடத்தனம். மீன்பிடிக்கிற தொழிலச் செய்யிறண்டால் அதிலுள்ள நுணுக்கங்கள நல்லாத் தெரிஞ்சிருக்கவேணும். அதில ஒண்டுதான் ஆத்தில உள்ள **அறுநீர் - வெள்ளம்** எண்ட நீரோட்டம் - ஆத்துத்தண்ணி கடலுக்கு உள்ள மீன்கள் கடலுக்க ஓடிப் போகும் வெள்ளம் எண்டா கடலுக்க உள்ளமீன்கள் ஆத்துக்க ஓடிவரும்

இத வற்றுப்பெருக்கு எண்டும் சொல்லுவாங்க. இது உனக்குத் தெரிஞ்சும் இருக்கலாம். தெரியாமலும் இருக்கலாம். (ஆத்தில = வாவியில்)

**வட்டவிதானையார் :-** எனக்கும் இது சாடமாடயாத் தெரியும். எண்டாலும் உனக்குத் தெரிஞ்சிருக்கிற அளவுக்கு மீன்பிடித் தொழிலப் பத்தி எனக்குத் தெரியாது. ஆத்தில மீன்பிடிக்கிற தொழிலும், நெல் வேளாமைச் செய்யிற தொழிலும் தண்ணியோட தானே பின்னிப் பிணைஞ்சவை. மீன் விளையிறதும் தண்ணியாலதான் நெல் விளையிறதும் தண்ணியாலதான். இத அறிஞ்சிதானே அந்தக்காலத்தில உள்ளவங்க தாயப்பழிச்சாலும் தண்ணியப் பழிக்காதே" எண்டு சொல்லியிருக்காங்க.

| | | |
|---|---|---|
| பே.வ.மொ.சொல் | :- | அறுநீர் |
| எ.வ.மொ.சொல் | :- | ஆற்றைவிட்டு நீங்கிச் செல்லும் நீர் |
| பே.வ.மொ.சொல் | :- | வெள்ளம் ஆற்றுக்குப் |
| எ.வ.மொ.சொல் | :- | கடலிலிருந்து பெருகிவரும் நீர் |
| | | (ஆற்றுநீர் - வாவிநீர்) |

அறிவிற்சிறந்த அனுபவத்தில் முதிர்ந்தவரான ஔவைப்பாட்டியார் பாடியுள்ள மூதுரையில் வாக்குண்டாம் பகுதியில் வரும் வெண்பாவில் 'அறுநீர்' என்ற சொல்லை வைத்துப் பாடியிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

மூதுரை வெண்பா (வாக்குண்டாம் பாடல் தொகுதி)

**" அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவைபோல்**
**உற்றுழித் தீர்வார் உறவு அல்லர் - அக்குளத்தில்**
**கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே ஒட்டி உறுவார் உறவு"**

(அறுநீர் - நீங்கிச் செல்லும் நீர்)

**பட்டாங்கட்டியார் :-** (மட்டக்களப்பு வாவியில்) ஆற்றில் மீன்பிடித்தொழில் தொடர்பான வழக்கம், ஒழுங்கு முதலிய கருமங்களைக் கண்காணிக்கும் அதிகாரம் பெற்றவர்.

**வட்டவிதானையார் :-** நெற்செய்கைக்குரிய வயல்கள் உள்ள நிலப்பரப்பில் குறிப்பிட்ட பிரிவிலுள்ள நெல்வயல்கள் தொடர்பான வழக்கம், ஒழுங்கு முதலிய கருமங்களைக் கண்காணிக்கும் அதிகாரம் பெற்றவர்.

**[17]** **சிறுவால்**

(அசனார் லெவ்வையும் - ஆதம்பாவாவும் கதைக்கும் பொழுது)

**அசனார் லெவ்வை:-** "என்ன ஆதம்பாவா! இடுப்பில் சிறு வாலும், கையில கத்தியுமா வாறா."

**ஆதம்பாவா :-** நேத்து வீசின கடும் காத்தில வீட்டுக்குப் பக்கத்தில நீண்ட வேப்ப மரக் கந்துகள் முறிஞ்சி விழுந்து கிடந்ததால அந்தக் கந்துகள வெட்டித் துப்பரவாக்கிக்கொண்டு நிண்டநான். நீங்க வந்தத அறிஞ்ச உடனே நீங்க வந்த காரியத்த அறிய அப்பிடியே நிண்டாப்பில வந்திட்டன்.

**அசனார்லெவ்வை :-** இப்ப நாம ரெண்டுபேரும் அவசரமான ஒரு அலுவலாகத் தாழங்குடாவுக்குப் போகவேணும். மேலச் சுறுக்காக் கழுவிற்றுச் **சிறுவாலுக்கு மேல** சாறனக் கட்டிற்றுச் சட்டையையும் போட்டுட்டு வா.

பே.வ.மொ.சொல் :- **சிறுவால்**

எ.வ.மொ.சொற்றொடர் :- **(மெல்லிய சீலையால் தைத்து இடுப்பில் இருந்து முழங்கால் வரை மறைக்கும் உள் ஆடையான அரைக்காற்சட்டை - (உள்ளாடை)**

**[18]** **அலக்கா**

**(சின்னாச்சியும் - பொன்னாச்சியும் கதைக்கும்பொழுது)**

**(சின்னாச்சி - பொன்னாச்சியின் வீட்டுக் கடப்படியில் நின்றுகொண்டு)**

***சின்னாச்சி* :-** புள்ளலக்கா! புள்ளலக்கா! பொன்னாச்சி! உண்ட புருசனார் எங்க போனவருகா?

**பொன்னாச்சி :-** ஆரது! சின்னாச்சியா? மீனறுத்துக்கொண்டிருக்கிறன். வந்துக்க ஏலாது. அவரு, கல்லூட்டுத்திண்ணையடியில கதச்சிருக்கப் போனவர் கா.

***சின்னாச்சி* :-** அப்ப அவர் வந்ததும் தேங்கா விக்கிற சின்னாச்சி அவர்கடனாக வாங்கின பத்துத் தேங்காயின்ர காசக் கேட்டு வந்து தேடுன எண்டு உண்ட புருசனாரிட்டச் சொல்லிப்போடு. அப்பநான் வாறன்.

பே.வ.மொ.சொல் :- **அலக்கா**

எ.வ.மொ.சொல் :- பெண்ணை அழைக்கும் "கா" என எல்லா இடத்தும் வரும் அசைச்சொல் இது சொல்லின் இறுதியில் "கா" என்ற அசைச்சொல் பெற்றுவந்த அலக்(கா) என்ற சொல்லாகும்.

நன்னூல் எனப்படும் இலக்கண நூலில் சொல்லதிகாரம் இடையியல் என்ற பகுதியில் 441 ஆம் பாடலில் எல்லாவிடத்தும் வரும் அசைச்சொல் என்ற தலைப்பின்கீழ் :-

யா - கா - பிற - பிறக்கு - அரோ - போ - மாது - இகும் - சின் - குரை - ஒரும் - போலும் - இருந்து - இட்டு - அன்று - ஆம் - தாம் - தான் - கின்று - நின்று - அசைமொழிச் சொற்களாம் எனக் கூறியிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

" யா. கா பிறபிறக் கரோபோமாதிருஞ்
சின்குரையோரும் போலுமிருந்திட்
டன்றாந் தாந்தான் கின்றுநின்றசைமொழி "

(சொல்லதிகாரம் - இடையியல் - பாடல் 441)

மேற்காட்டியதற்குப் பொருந்த - "கா" :- புறநிழற் பட்டாளோகாண்டி 'கா' என்ற எடுத்துக்காட்டின்படி இங்கு அலக்கா என்ற பேச்சுவழக்கு மொழிச் சொல், இப்பகுதியில் பேசப்பட்டுவருகிறது. இதனையே மட்டக்களப்புத் தமிழகத்தின் சிறப்புகள் பற்றிக் கூறுவோர் ஆடவர் தோளிலும் 'கா' அரிவையர் வாயிலும் "கா" என்று கூறுவதுண்டு.

**எடுத்துக்காட்டு** - எடுகா - நடகா - சொல்லுகா - படுகா - தாகா - வாகா - போகா - வெட்டுகா - கட்டுகா முதலியன இது அரிவையர் வாயில் உள்ள 'கா' வாகும்.

**எடுத்துக்காட்டு** - புதிர்கா - தயிர்ப்பானைக்கா - வாழைக்குலைக்கா - சீலை மராப்புக்கா முதலியன ஆடவர் தோளிலுள்ள "கா" வாகும்.

தாம் :- நீர்தாம் தான் :- நீதான் - போலும் - வருந்தினை போலும் முதலியன எல்லா இடத்தும் வரும் அசைச்சொற்கள் பொதுவாக எல்லாப் பகுதிகளிலும் பேச்சு வழக்கு மொழியிலும் எழுத்து வழக்கு மொழியிலும் இடம்பெறுவதை நாம் அனைவரும் அறிவோம்.

**(19)** **கறாம் குட்டிகள்**

(பலசரக்குக் கடைப் பதுறுதீனும், பழக்கடை பரீத்தும் கதைக்கும் பொழுது)

**பரீத்** :- என்ன? பதுறுதீன் நீ காலம் காலத்தால பெரிய சத்தமா ஏசினது?

**பதுறுதீன்** :- இந்த ஊரில் உள்ள அஞ்சாறு கறாம் குட்டிகள் கடபூட்டின புறகு இரவில எண்ட கட முன்பலகையில தூசண வாத்தைகள எழுதியிருக் கானுகள். இத விடியக்காலத்தில பாத்ததும் எனக்குப் பொல்லாத கோபந்தான் வந்தது. அதால நான் கண்டபடி பெரிய சத்தமாக ஏசவேண்டி வந்தது.

பே.வ.மொ.சொல் :- கறாம் குட்டிகள்

எ.வ.மொ.சொற்றொடர் :- தகப்பன் பெயர் தெரியாது பிறந்த சிறுவர்கள் அல்லது ஒழுக்கங்கெட்ட பிள்ளைகள்.

**(20)** **ஆண்டார்**

(இரவில் கணவனும் மனைவியும் கதைக்கிற பொழுது)

**கணவன்** :- "ஏய்! என்ன புள்ள கத்துறான் ! புள்ளயத் தூக்கிக்கொண்டுபோய் ஆண்டாரக் காட்டு. கத்தாம இருப்பான்."

மனைவி :- "சரி, சரி, நீங்க சொன்னது போல புள்ளயத் தூக்கிக்கொண்டு போய் ஆண்டாரக் காட்டுறன்"

(ஆண்டாரைப் பிள்ளைக்குக் காட்டி, பின்வரும் கற்பனையான, வினாவிடை வசனங்களைக் கூறுகிறாள் தாய்)

**அவள்** :- ஆண்டாரே! ஆண்டாரே! எங்கே போறா?
**ஆண்டார்** :- கம்பு வெட்டப்போறேன்.
**அவள்** :- கம்பு என்னத்துக்கு?
**ஆண்டார்** :- காலை அடைக்க,
**அவள்** :- காலை என்னத்துக்கு?
**ஆண்டார்** :- மாடு அடைக்க
**அவள்** :- மாடு என்னத்துக்கு?
**ஆண்டார்** :- சாணி போட
**அவள்** :- சாணி என்னத்துக்கு?
**ஆண்டார்** :- வீடு மெழுக
**அவள்** :- வீடு என்னத்துக்கு?
**ஆண்டார்** :- பிள்ளை பெற
**அவள்** :- பிள்ளை என்னத்துக்கு?
**ஆண்டார்** :- என்னைப் பார்த்துப் பார்த்துத் துள்ளித் துள்ளி விளையாட.

மேற்காட்டிய கற்பனையான வினாவிடை வசனப் பேச்சு இப்பகுதியில் பேச்சு வழக்கில் இருந்து வருகிறது என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

பே.வ.மொ.சொல் :- **ஆண்டார்**
எ.வ.மொ.சொல் :- **நிலா (சந்திரன்)**

**(21) அணியம் – புறகுதல [லை]**

(கதிர்காமரும் - கந்தப்பரும் கதைக்கிறபொழுது)

**கந்தப்பர் :** அடே! கதிராமா! நீ இண்டைக்குத் தோணியில **அணியத்தில** இருந்து தொடுத்து வரவேணும். நாளைக்கு நான் தோணியில அணியத்திலிருந்து தொடுப்பன். இண்டைக்கு நான் தோணியில **புறகுதலயில** இருந்து தொடுக்கிறன் இது உனக்குச் சம்மதம்தானே!

**கதிராமர் :-** எனக்குத் தோணியில **அணியத்தில** இருந்து தொடுப்பதும், தோணியில **புறகுதலயில** இருந்து தொடுப்பதும் ஒண்டுதான். எதில இருந்து தொடுக்கிறதுக்கும் எனக்கு சம்மதம் தான்.

பே.வ.மொ.சொல் :- **அணியம்**
எ.வ.மொ.சொல் :- **தோணியின் முன்பக்கம்**

பே.வ.மொ.சொல் :- புறகுதல (புறகுதலை)

எ.வ.மொ.சொல் :- தோணியின் பின்பக்கம்

[22] **கொச்சிக்காய்**

(தாயும் மகனும் பேசும் பொழுது)

**தாய் :-** "மனே மனோகரன்! உங்க அப்பா காலயில சந்தைக்குப் போனவர் பச்சகொச்சிக்காய் வாங்காம வந்திற்றார். நல்ல பிள்ளையப்போல மாணிக்கத்தாரின்ர மரக்கறிக் கடைக்குப் போய் அரக்கிலோ பச்சகொச்சிக்காய் வாங்கித் தந்திரன்.

**மகன் :-** காசத்தா, வாங்கித்தாறன், இன்றும் என்னமும் வாங்கிறன்டா இதோட சொல்லிப்போடு.

பே.வ.மொ.சொல் :- பச்சகொச்சிக்காய்

எ.வ.மொ.சொல் :- பச்சை மிளகாய்

கீழ்வரும் இப்பகுதிக்குரிய நாடோடிப் பாடலில் "கொச்சி" என்ற பேச்சு வழக்குச் சொல் வந்திருப்பது இங்கு குறிப்பித்தக்கதாகும்.

**கொச்சிப்பழ உதட்டழகும் – உன்ர**
**கூரான மூக்கழகும்**
**மச்சாள் என் மனசவிட்டு – இன்னும்**
**மறையாமல் நிக்கிறதே!**

வே.வ.மொ.சொல் :- கொச்சிப்பழம்

எ.வ.மொ.சொல் :- பழமிளகாய் அல்லது மிளகாய்பழம்

[23] **உமல்**

(பெத்தப்பாவும் (பெற்றோரின் தந்தை) பேரனும் கதைக்கும் பொழுது

**பேரன் :-** இந்தப் பொலிதீன் பையில நீங்க வாங்கிவரச்சொன்ன பாக்கு, வெத்தில, போயில எல்லாம் இருக்குது அதுகள எடுத்து வைக்க வேண்டிய இடத்தில வையுங்க.

**பெத்தப்பா :-** உமல்தான் அந்தக் காலத்துக் கைப்பை காய்ந்த ஒருவிதமான புல்லால கைப்பையாக இழைத்தது. அதத்தான் உமல் எண்டு சொல்லுவாங்க. (பெத்தப்பா - பெற்றாரின் தந்தை)

பே.வ.மொ.சொல் :- உமல்

எ.வ.மொ.சொல் :- காய்ந்த புல்லால் ஆன கைப்பை

**[24]** **உல்**

(தேங்காய் வியாபாரியார் தேவநாயகத்தாரும், கூலி வேலையாள் குமாரசிங்கமும் கதைக்கும்பொழுது)

**வேதநாயகத்தார் :-** "இஞ்ச பார் குமாரசிங்கம்! இந்தக் குடிலுக்குள்ள நூறு தேங்காய்கள் உரியாமல் கிடக்குது. அதுகளச் சுறுக்காக உரிச்சித்தந்திரு."

**குமாரசிங்கம் :-** "தேங்காய் உரிக்கிற உல்லத் தாங்க."

**தேவநாயகம் :-** "நானென்ன உல்ல, மடியிலயா? கட்டி வச்சிருக்கன். கண்ணக் கசக்கிப் போட்டுப்பார். அந்தத் தேங்காயிருக்கிற குடிலுக்கு அருகில நாட்டி வைச்சிருக்கு."

பே.வ.மொ.சொல் :- **உல்**

எ.வ.மொ.சொல் :- **தேங்காய் உரிக்கும் கருவி (அலவாங்கு)**

**[25]** **குறிச்சி**

(மூத்ததம்பியரும் - முருகப்பரும் கதைக்கிற பொழுது)

**முருகப்பர் :-** "என்ன மூத்ததம்பியண்ண! ஆரையம்பதி ரெண்டாம் குறிச்சியில உங்கட பேரில உள்ள ஒரு வளவ விக்கப் போறிங்களாம் எண்டு அறிஞ்சன். மெய்தானா?

**மூத்ததம்பியர் :-** நல்ல விலைக்கு விக்கவந்தா விக்கிற எண்டுதான் எண்ணி இருக்கன். என்ன விலைக்கு அந்த வளவ வாங்க எண்ணியிருக்கிறா எண்டு நல்லா யோசிச்சிப் போட்டு இன்னொரு நாளைக்கு வந்து என்னிட்டச் சொல்லன். அதுக்குப் புறகு வில சரிவருமெண்டால் விசயத்த முடிப்பம்.

பே.வ.மொ.சொல் :- குறிச்சி

எ.வ.மொ.சொல் :- **ஊரினுள் இருக்கும் நிருவா நிலப்பரப்பு**

(குறிஞ்சி நிலத்திலுள்ள ஊரைக் குறிக்கும் சொல்)

இதன்கீழ் வருவன, பேச்சுவழக்கு மொழியில் வரும் சொற்களும் எழுத்து வழக்கு மொழியில் வரும் சொற்களும் இடம்பெறும் வாக்கியங்கள் மூலம் தரப்படும் சுருக்கமான விளக்கப்பட்டியலாகும்.

**(26)** **அட்டுத்துணி**

பே.வ.மொ.சொல் :- **அட்டுத்துணி**

எ.வ.மொ.சொல் :- **அழுக்குத்துணி**

பே.வ.மொ.சொல் வரும் வசனம் :- "அண்ண! அட்டுத்துணியை அணிந்து கொண்டு ஆக்களுக்குள் வரவேண்டாம்.

எ.வ.மொ.சொல் வரும் வசனம்:- "அண்ணன்! **அழுக்குத்துணி** யை அணிந்துகொண்டு ஆட்களுக்குள் வரவேண்டாம்."

[27] **ஆசறுதிக்காலம்**

பே.வ.மொ.சொல் :- **ஆசறுதிக் காலம்**

எ.வ.மொ.சொல் :- **கடைசிக் காலம்**

பே.வ.மொ.சொல் வரும் வசனம் :- இந்தத் தங்க மாலய எண்ட **ஆசறுதி காலத்தில** விற்றுச்செலவு செய்ய என்று பாதுகாப்பாக வைத்திருக்கிறேன்.

எ.வ.மொ.சொல் வரும் வசனம் :- இந்தத் தங்க மாலையை என்னுடைய **கடைசிக்காலத்தில்** விற்றுச் செலவு செய்ய என்று பாதுகாப்பாக வைத்திருக்கிறேன்.

[28] **இலையான்**

பே.வ.மொழி.சொல் :- **இலையான்**

எ.வ.மொ.சொல் :- **ஈ**

பே.வ.மொ.சொல் வரும் வசனம் :- "தம்பி! அந்த அப்பத்த **இலையான்** மொய்க்காம ஒரு ஏனத்துக்குள்ள வச்சி மூடிவிடு."

எ.வ.மொ.சொல் வரும் வசனம் :- "தம்பி அந்த அப்பங்களை **ஈ** மொய்யாதபடி ஒரு பாத்திரத்துள் வைத்து மூடிவிடு.

[29] **ஈர்**

பே.வ.மொ.சொல் :- **ஈர்**

எ.வ.மொ.சொல் :- **பேன் முட்டை**

பே.வ.மொ.சொல் வரும் வசனம் :- "அம்மா! உண்ட தலையில நிறைய **ஈர்**தான் இருக்கு"

எ.வ.மொ.சொல் வரும் வசனம் :- "அம்மா உன்னுடைய தலையில நிறையப் **பேன்முட்டைகள்** தான் இருக்கிறது."

[30] **உறுவா அரிசி**

பே.வ.மொ.சொல் :- **உறுவா அரிசி**

எ.வ.மொ.சொல் :- **வெந்தயம்**

பே.வ.மொ.சொல் வரும் வசனம் :- **உறுவா அரிசிக்** குழம்போட சோறு திண்டு கனகாலமாப் போச்சிது.

எ.வ.மொ.சொல் வரும் வசனம் :- **வெந்தயக்** குழம்புடன் சோறு சாப்பிட்டு நீண்டகாலமாகிவிட்டது.

[31] **ஊசாட்டம்**

எ.வ.மொ.சொல் :- **ஊசாட்டம் (ஊசலாட்டம்)**

பே.வ.மொ.சொல் :- **நடமாட்டம்**

பே.வ.மொ.சொல் வரும் வசனம் :- "சின்னப்பிள்ள அக்க! சில நாளா ஏன் இந்தப்பக்கமாக உன்ர ஊசாட்டத்தக் காணல்ல."

எ.வ.மொ.சொல் வரும் வசனம் :- "சின்னப்பிள்ளை அக்கா! சிர நாட்களாக ஏன் இந்தப் பக்கம் உன்னுடையநடமாட்டத்தக் காணக்கூடியதாயில்லை."

**[32] எறிப்பு**

பே.வ.மொ.சொல் :- **எறிப்பு**

எ.வ.மொ.சொல் :- **கடும் வெயில்**

பே.வ.மொ.சொல் வரும் வசனம் :- **"இப்ப இருக்கிற எறிப்பான காலத்தில உச்சிப்பொழுதான வேளயில வெளியால போறவாற எண்டா பெரிய கசிட்டமான காரியம்."**

எ.வ.மொ.சொல் வரும் வசனம் :- **"இப்போதுள்ள கடும் வெயில் காலத்தில மதியநேரத்தில் வெளியபோவதும், வருவதும் மிகவும் கஷ்டமான செயல்."**

**[33] ஏறுபொழுது**

பே.வ.மொழி சொல் :- **ஏறுபொழுது**

எ.வ.மொழி சொல் :- **முற்பகல்**

பே.வ.மொழி சொல் வரும் வசனம் :- **ஏறுபொழுதில ஏறாவூருக்குப் போனவரு இறங்குபொழுதில தான் வீடுவந்து சேர்ந்தாரு.**

எ.வ.மொ.சொல் வரும் வசனம் :- **முற்பகல் ஏறாவூருக்குப் போனவர் பிற்பகல்தான் வீடுவந்து சேர்ந்தார்.**

**முக்கிய குறிப்பு :-**

**உச்சிப்பொழுது** என்ற பே.வ.மொ. சொல் - எ.வ.மொழியில் நடுப்பகல் எனக் கூறப்படுகிறது.

**[34] ஐயுறவு**

பே.வ.மொ.சொல் :- **ஐயுறவு**

எ.வ.மொ.சொல் :- **சந்தேகம்**

பே.வ.மொ.சொல் வரும் வசனம் :- **"இவன் தான் களவெடுத்திருப்பான் எண்ட ஐயுறவாலதான் நான் அவனுக்கு அடிச்சுப்போட்டன்."**

எ.வ.மொ.சொல் வரும் வசனம் :- **"இவன்தான் களவெடுத்திருப்பான் என்ற சந்தேககத்தால் தான் நான் அவனுக்கு அடித்துவிட்டேன்."**

[35] **ஒள்ளுப்பம்**

பே.வ.மொ.சொல் :- ஒள்ளுப்பம் (எள் ஒப்பம்)

எ.வ.மொ.சொல் :- எள் ளளவு

பே.வ.மொ.சொல் வரும் வசனம் :- "பெரியம்மா! எங்கட வீட்டில சீனி முடிஞ்சி போச்சிது. தேத்தண்ணி குடிக்க ஒள்ளுப்பம் சீனி தாவன்".

எ.வ.மொ.சொல் வரும் வசனம் :- "பெரியம்மா! எங்களுடைய வீட்டில் சீனி முடிந்துவிட்டது. தேநீர் குடிக்க எள்ளளவு சீனி தாருங்கள்."

[35] **ஓரவாரம்**

பே.வ.மொ.சொல் :- ஓரவாரம்

எ.வ.மொ.சொல் :- பட்சபாதம் (பாரபட்சம்)

பே.வ.மொ.சொல் வரும் வசனம் :- "நீங்க ஓரவாரமில்லாமச் சரியான தீர்ப்புச் சொல்ல வேணும்."

எ.வ.மொ.சொல் வரும் வசனம் :- "நீங்கள் பட்சபாதம் இல்லாமல் சரியான தீர்ப்புச் சொல்ல வேண்டும்."

## மாற்றமடைந்த சொற்கள்

| | |
|---|---|
| வழுதுணங்காய் | கத்தரிக்காய் |
| எலுமிச்சம்பழம் | தேசிப்பழம் |
| அயமதாகம | ஓமம் |
| உள்ளி | வெள்ளைப்பூடு |
| ஆணம் | சொதி |
| உலுவாரிசி | வெந்தயம் |
| கொச்சிக்காய் | மிளகாய் |
| வேர்க்கொம்பு | சுக்கு |
| கொள்ளி | விறகு |
| பூணாரம் | நகை |
| சமைதல் | பூப்படைதல் |
| நங்கணம் | மைனா |
| கண்ணாம்பூச்சி | வண்ணத்துப்பூச்சி |
| கிக்கிலிப்பேய் | மீன்கொத்து |
| பக்கிலு | ஆந்தை |
| பொக்கணி | தொப்புள் |
| கமுக்கட்டு | அக்குள் |
| சொவ்வி | காது |
| மையோர் | மரவள்ளி |
| ஒள்ளுப்பம் | கொஞ்சம் |
| ஆண்டார் | அம்புலி |
| பொடியன் | சிறுவன் |
| பொடிச்சி | சிறுமி |
| அம்மை | அம்மா |
| அப்பன் | அப்பா |
| பெத்தப்பா | பாட்டன் |
| பெத்தா | பாட்டி |
| முடி | மயிர் |
| உமல் | பை |

# மாசுறும் மனித குலம்



சி.க.பொன்னம்பலம்

01) ஆதியிலே மானிடர்கள் அன்புடனே வாழ்ந்தார்
அவர்களுக்குள் போட்டியில்லை பொறாமைகளும் இல்லை
சாதி, மத பேதமில்லை சண்டைகளும் இல்லை
சான்றோரை ஈன்றோரைப் போல் மதிப்புச் செய்தார்
பாதியிலே வந்ததடா போதை, மது வெறிகள்
பக்திவழி, பண்பனைத்தும் குழிதோண்டிப் புதைத்தார்.
சேதியிது செவிக்கினிமை ஆகாது கண்டீர்
தேசத்தைக் கேட்டாலோ "துரோகமிவை" என்பார்.

02) வீதியிலே குப்பைமலை, சலசலப்புப் பைகள்
விரித்தெங்கும் பறந்துவிளை யாடுவது காணீர்
நீதிக்குப் புறம்பாகக் கட்டுமுயர் சுவர்கள்
நீண்டதெருச் சாக்கடையில் நிறைந்திருக்கும் விஷ நீர்
"பேதிக்கு" வித்தாகும் கொடுங்கிருமி விளையும்
பெரு "டெங்கு", "மலேரியா" நுளம்புகளும் பெருகும்
மேதினியில் இவையனைத்தும் சுகத்திற்கு நன்றோ?
மேலோங்கு கல்வியறி வுதவுவதும் இவையோ?

(03) புரட்சியெனக் கூறியெம தரசியலார் முன்னர்
பின்விளைவு நோக்காமல் பசளைவிதைப் பித்தார்
வரட்சியினால் வயல்நிலங்கள் நிலைகெட்ட தம்மா
வாய்த்ததொரு விளைபொருளும் நோய்கொடுத்த தம்மா
புரட்சியென வந்தவர்கள் மீண்டுமெழுந் திப்போ
புகட்டுகிறார் முன்னோர்கள் வகுத்தநெறி முறைகள்
திரட்டியநா சினிகளெல்லாம் மனிதனுக்கே நாசம்
செய்ததெனச் செப்புகிறார் சேதியிது கேளீர்!

(04) மருந்துக்கு மயங்கியழிந் திட்டநுளம் பாரும்
மாமனித ராகிஎதிர்க் கின்றபெரும் சக்தி
பொருந்திக்கொன் டின்னல்பல புரிகின்றார் பாரீர்
பொல்லாத மருந்துகளும் பொருந்தாது போச்சே
அருந்துகின்ற அரிசிமுதல் அத்தனையும் மருந்தால்
ஆகாத நஞ்சாகி அனர்த்தங்கள் செய்யும்
பெருந்துன்ப மடைகின்ற மனிதகுலம் உரத்துப்
பேசுவதால் சுகத்திற்கு ஆதாரம் வருமோ?

05) விதைகளிலே "மரபணுவின்" கலப்படம்செய் வதனால்
விளைவெல்லாம் "மாமிசமாய்" மாற்றுகிறார் பாராய்
சதைபொருக மீனுக்கு "மனிதமர பணுவைச்"
சந்தித்தே சிறுமீனைப் பெரியஉருப் படியாய்க்
கதைகளிலே வருவதுபோல் கட்டிவளர்க் கின்றார்
கயமை, அந்த மீனுண்போர் "மனிததசை" உண்பார்
சிதைகின்ற சமூகமதைச் சிந்திப்பார் யாரோ?
செய்வதெல்லாம் சுகாதாரச் சீர்கேடு தானே!

06) உயிரினத்தின் சூட்சுமத்தை உணருகின்ற வித்தை
உயர்வுக்குப் பதிலாக மனிதகுலம் தன்னை
வயிரமழிந் திட்டபரம் பரையாக்கி வைத்து
வாழ்வினையே வளமில்லாப் பாலைவன மாக்கும்
பயில்வதற்கு அரிதான "மரபணு" மாற்றம் செய்
பரபரப்பு மிக்கசெயல் பாரினையே கலக்கும்
துயில்பயிலும் மனிதா நீ துடித் தெழுந்து வாடா
துணிவுடனித் தீமைகளை அகற்றிடுவோ மொன்றாய்.



# சினிமாக்கலை சமூகத்தில் ஏற்படுத்தும் மாற்றம்

முருகேஸ் ராஜினி

**பொது**வாக கலை என்னும் போது "உள்ளத்து உணர்வுகளை ஒரு ஊடகத்தைக் கொண்டு தனக்கு விரும்பிய வடிவில் வெளிப்படுத்துவது" எனலாம். இவற்றுள் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டதே சினிமா எனும் கலைவடிவமாகும். தொழில்நுட்ப சாதனங்கள் உலகத்தை ஒன்றிணைத்து ஒரு கிராமமாக மாற்றி உலகச் சந்தைகளை, உலக கலாசாரத்தை உருவாக்குவதில் பெரும் பங்கு வகிக்கின்றன. பத்திரிகை, வானொலி, கணனி முதலிய சாதனங்களைப் போன்று இசை, ஒளிப்பதிவு, தொகுப்பு, வடிவமைப்பு நுட்பங்கள் என்பவற்றினூடாகத் தொழில்நுட்பக் கலையான சினிமா பலமான ஒன்றாக சமூகத்துடன் பின்னிப்பிணைந்துள்ளமையால் அது சமூகத்தில் ஏற்படுத்தும் தாக்கத்தினை ஆராயவேண்டியுள்ளது.

இன்றைய சூழலில் தகவலைத் தருகின்ற, பொழுதுபோக்காகவுள்ள சாதனங்கள் மனித வாழ்க்கையினுள் புகுந்துவிட்டதனால் சமூகமும் ஒருவித ஊடகச் சூழலிலேயே வாழ்வதை அவதானிக்க முடிகின்றது. இது சமூகமாற்றம் சம்பந்தப்பட்ட ஒன்றாகும். நவீன நாகரிகங்கள், வன்முறைகள், அரசியல், சமூக, கலாசார, ஆன்மீக மதிப்பீடுகளின்மீதும் மரபுகளின் மீதும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. செயற்கைக்கோள் அலை வரிசைகளும். பத்திரிகைகளும் இப்புதிய வாழ்க்கை முறைகளை அறிமுகப்படுத்துவதோடு அவற்றை நியாயப்படுத்தவும் செய்கின்றன.

ஒரே சமயத்தில் பல்வேறு இடங்களில் பல இலட்சம் மக்களைச் சந்திக்கின்ற வல்லமைமிக்க விஞ்ஞான விந்தைச் சாதனமான சினிமா பலம் கூடியதாகக் காணப்படுவதற்குச் சாதக ரீதியாக நோக்கும்போது பல காரணங்களைக் கூறலாம்.

வாழ்க்கையோடு போராடிய மனிதர் தொடர்ந்து துன்பத்தையே அனுபவிப்பர். இந்நிலையில் அவர்கள் சினிமா பார்ப்பதனால் அதிலிடம் பெறும் நகைச்சுவைகளினால் குறிப்பிட்ட நேரமாவது குழப்பங்களிலிருந்து தனது கவலைகளை மறந்து சந்தோசப்படுகின்றனர். அத்துடன் திரையரங்குகளில் சமூகம் ஒன்றிணைந்து பார்ப்பதால் மற்றவரின் அனுபவத்தைப் பெறக் கூடியதாகவும், படங்களில் தவறு விடுபவர்களைப் பார்த்துத் தன்னைத் தயார்படுத்திக்கொள்ளவும் வில்லனின் நடவடிக்கையைப் படத்தில் பார்த்து நிஜத்தில் தனக்குரிய எதிராளியை இனங்காணவும் இச்சினிமா துணை புரிகின்றது. இதனாலேயே இன்று அதி உன்னத பலங்கொண்டு அசைக்க முடியாததாகியுள்ளது எனலாம்.

அடுத்து நலந்தரும் நாகரிகங்களையும், நவீன தொழிநுட்பக் கருவிகளையும், கலைகளையும் பற்றித் தெளிவுறுத்துவதன் மூலம் தூங்கிக் கிடக்கும் சமுதாயத்தைத் தட்டி எழுப்புகின்றது. அன்றாட நடைமுறைகள், இன, மத, மொழி ரீதியான சமத்துவம், குடும்ப உறவு, அரசியலில் இடம்பெறும் ஊழல் என்பவற்றை எடுத்துக் காட்டுவதன் மூலம் நல்ல பாதைக்கு இட்டுச் செல்கின்றது. சமூகத்துக்குத் தேவையானவற்றையும், எண்ணங்களையும் எதிர்பார்க்கைகளையும் புலப்படுத்துகின்றன. எடுத்துக்காட்டாக "டைட்டானிக்", "யுரசிப்பாக்", "ஹேராம்" மற்றும் அண்ணாவின் படங்கள் மூலம் அறிவு வளர்ச்சி, சீர்திருத்தக் கருத்து என்பன காட்டப்படுவதுடன் பயிற்சி, முயற்சி மூலம் கலையார்வதைத் தூண்டி, மறைந்து கிடக்கும் கலைஞர்களை சமூகத்தின் மத்தியில் தூக்கிவிடுகின்றது. அத்துடன் படித்தவர்கள் மாத்திரமன்றி, படியாத பாமரரும் முயற்சியிருந்தால் முன்னேறலாம் என்ற தத்துவம் கலந்த சாதகமான கருத்துக்களையும் சினிமா முன்வைக்கின்றது.

இவ்வாறு சில சாதக விளைவுகள் சினிமாவின் மூலம் ஏற்படுகின்ற அதேநேரம் பல பாதக விளைவுகளும் காணப்படுகின்றன. அந்தவகையில் மேடை நாடகத்தில் இரத்தமும், சதையுமுள்ள மனிதனைப் பார்க்கின்றோம். ஆனால் சினிமாவில் தொடர்ச்சியான படங்களின் நிழலுருவத்தையே காண்கின்றோம். இதனால் நாடகத்தைப் போன்று நடிகர்களுக்கும், பார்வையாளர்களுக்கும் உள்ள நேரடித் தொடர்பு சினிமாவிலில்லை. சினிமாவில் ஒருபுறம் இயந்திரத்தில் ஓடும்படம், மறுபுறம் பார்வையாளர்கள். இதனால் சினிமாவில் வருகின்றன நிழற்படங்கள் கனவு போன்று மறக்கப்பட்டு விடுகின்றன.

பெண்ணடிமை, மதப்பிரசாரம், கூட்டுக்குடும்பங்களின் இறுக்கம், உறவுகள் உடையாது பேணுவது, அதீத கற்பனை கொண்ட காதல், சண்டைக்காட்சி இவையே சினிமாவை ஆக்கிரமித்து நிற்கின்றன. எனினும் இவை நடைமுறைக்கு ஏற்றதாக இல்லை. கலை வடிவங்கள் மிகவும் பலம் வாய்ந்தவை. மனித உணர்வுகளைக் கவர்ந்து தற்காலிகமாக மயக்கி ஈர்த்துச் செல்ல வல்லவை. இத்தகைய ஏமாற்றத்துக்குப் பார்வையாளரை ஈர்த்துச் செல்ல முயல்வது தவறு என்பது நாடகக் கோட்பாட்டாளரான "பிரெட்ஸின்" கருத்தாகும். இதற்கு அவர் சினிமாவை உதாரணம் காட்டுகின்றார்.

சினிமாவில் காட்சிகள் மிக வேகமாக மாறுவதனால் மனிதனைச் சிந்திக்கவே விடாது, கதையோடு, காட்சியோடு, இசையோடு, அழகுணர்வோடு அவனது நினைவுபூர்வமான உணர்வுகள் ஈர்த்துச் செல்லப்படுகின்றன. அதனாலேயே நடைமுறைக்கு ஒவ்வாத சம்பவங்கள், காட்சிகளைக் கூட தற்காலிகமாகப் பார்வையாளர்கள் ஒருபக்கச் சிந்தனையுடன் எவ்வித பகுத்தறிவுமின்றி ஏற்றுக்கொண்டு வருகின்றனர். எடுத்துக்காட்டாக, நாயகன் பலரை அடித்து விழுத்தியபோதும் ஒரு காயமும் இல்லாது உடை கூட கசங்காது இருப்பதைக் காணலாம். கதாநாயகி, கதாநாயகன் எப்போதும் அழகானவர்களாகவே இருப்பர். "அறுபது வயதான நாயகன் இருபது வயது நாயகியுடன் காதல் லீலை நடத்துகின்றார் என்பதனைப் பார்வையாளர்கள் படம் பார்க்கும்போது மறந்து கசப்புணர்ச்சியின்றி ரசிப்பதைக் காணலாம்." இவை அனைத்தும் சினிமாவின் வலிமை என்றே கூறலாம்.

இவ்வாறு பார்வையாளர்கள் முற்றாகத் தம் நினைவை இழந்து திரையில் தோன்றும் பாத்திரங்களுடனும், சம்பவங்களுடனும், ஒன்றிவிடுகின்றனர். பெரும்பாலான பார்வையாளர்கள் சினிமா பார்க்கும்போது தம் ஆசனங்களில் அமராது திரையிலே நாயகனாகவோ, நாயகியாகவோ மாறிவிடுகின்றனர். இச்சூழலில் பார்வையாளர்கள் யதார்த்த வாழ்வைக் காண்பதாக எண்ணிவிடுகின்றனர். அது உண்மையல்ல. முழு ஏமாற்றமே. இது இலாப நோக்கத்தைக் கருத்திற்கொண்டு கலைஞர்கள் பார்வையாளரை ஏமாற்றுகிறார்கள் எனலாம். எனவே சினிமாவினூடாக மனித வாழ்க்கையின் அனுபவத் தொகுப்பைப் பார்ப்பதான நினைவு பார்வையாளருக்கு ஏற்பட வேண்டும். அதுவே உண்மையாகும்.

இச் சினிமாவில் மனிதர்கள் தன்மானத்தை இழக்கின்றார்கள். எடுத்துக்காட்டாக, திரைப்பட அரங்குக்குள் நுழைந்து ஆசனம் தேடுவதுகூட

ஏதோ ஒரு சாதனையை முறியடிப்பதுபோல அவர்களுக்கிருக்கின்றது. இப்படிக் கஷ்டப்பட்டு அந்தச் சினிமாவைப் பார்ப்பதென்றால் அதற்குள் ஏதோ இருக்கின்றது. எனவே கவர்ச்சிமிக்க அந்த அம்சத்தைத் தானும் பெறவேண்டும் என்பதற்காக அவர்கள் தமது வாழ்வைச் சீரழிக்கின்றனர். இது பாடசாலை மாணவர் தொடக்கம், ஆசிரியர்கள், அலுவலர்கள் வரை பாதித்துள்ளது என்றால் மிகையாகாது.

முக்கியமாக வீட்டுக்குவரும் விருந்தினர்கள் தொடக்கம், தனது சமூகம், சுற்றம் என்பவற்றையும் தன்னைச் சுற்றி என்ன நடக்கின்றது என்பதையும் மறக்கும் நிலையைச் சினிமா ஏற்படுத்தித் தன்னுள் அடக்கி ஆதிக்கம் செலுத்துகின்றது. எடுத்துக்காட்டாக பக்திச் சிரத்தையுடன் ஆத்மீக வழிபாடு செய்யும்போது பக்கத்தில் சினிமாப்பாடல் பாடும்போது இறை நினைவில் கூட சினிமா நிறைவாகி விடுகின்றது. இதற்குச் சினிமாவிலுள்ள பாடல், வசனம், கதை என்பனவும் காலாகி விடுகின்றன. இதுபோன்று சினிமாவை தமது உயிர் மூச்சாக்கியதனால், கணவனை இழந்த, குழந்தையை இழந்த, மனைவியை இழந்தவர்கள் நம் சமூகத்தில் எத்தனையோ பேரைக் காணக்கூடியதாகவுள்ளது.

திரைப்படங்கள் யாவும் கற்பனாவாத நிலையிலேயே உள்ளன. உண்மையான வாழ்க்கை நிலைகளை இவற்றில் காணமுடியாது. சினிமாவில் காணும் போலிக் கற்பனைகளை நம்பி நீந்துபவர்கள் யதார்த்த வாழ்வைத் தரிசிக்க முடியாதவர்களாகின்றனர். “அவின்”, “கஞ்சா” போன்ற போதைகளில் அகப்பட்டவர்களாகி, உழைப்பில் ஆர்வங்குன்றி போலிக் கற்பனையில் வாழ முயலும் எண்ணமுடையவர்களாகின்றனர். இதனால் மனோபலம் இழந்த, திரிந்த மனநிலையுள்ள நோயாளராகிச் சமூகத்துக்குப் பயனற்றவர்களாகின்றனர். இந்நிலைமைக்கு இலாபந்தரும் பணத்தை மையமாகக் கொண்டு, சமூகத்தை மறந்து, சமூகத்துக்காகவே சினிமா என்பதை மறந்து சினிமாவுக்காகவே சமூகம் எனும் நிலையில்தான் சினிமாப் படங்கள் தயாரிக்கப்படுகின்றன.

மேலும் சினிமா எனும் போர்வையில் தாண்டவமாடும் முடிவெட்டுதல் தொடக்கம் ஆடை ஆபரணங்கள், பெயர் சூட்டுதல் வரையான அன்றாட வாழ்க்கைச் செய்கைகள் மக்கள் மத்தியில் நாகரிகத்தை, பண்பாட்டை மாற்றக்கூடிய வகையில் செயற்படுகின்றன. இதுமாத்திரமன்றி, மனிதனைச்

சிந்திக்கவிடாது, தனித்து எந்தச் சாதனையையும் செய்யவிடாத நிலையில், சினிமாவில் தங்களுக்குப் பிடித்த நடிகர்களின் பாணியில் ரசிகர் மன்றங்களை உருவாக்கி தம் வாழ்நாளை ஓட்டிச் செல்கின்றனர். இதன் மூலம் கருதப்படுவது என்னவென்றால், சினிமா இன்றி வாழ்க்கை இல்லை என்பதாகும். அந்தளவிற்கு இன்றைய சமூகம் சினிமாவுடன் பிண்ணிப் பிணைந்துள்ள நிலையைக் காணலாம்.

இவ்வாறு சினிமாவின் மூலமாக நிஜம் என்று எதை நினைத்து இருக்கின்றோமோ அதன் எளிமையான, தூய்மையான தோற்றம் மறைந்து, சினிமாவில் காண்பிக்கப்படும் நிஜத்தின் தோற்றம்தான் உண்மை என்ற நிலை வந்துவிடலாம். உலகம் முழுவதும் வியாபித்திருக்கும் வியாபாரச் சினிமாவின் நிஜம் வெகு விரைவிலேயே நம்மை வாழ்க்கையின் உண்மையிலிருந்து துண்டித்துவிடலாம். அப்போது சினிமாவில் இருக்கும் நிஜம் மட்டுமே நமக்கு நிரந்தர நிஜமாக இருக்கலாம். மரங்களும், ஓடுகின்ற ஆறுகளும் என்றோ ஒருநாள் மறைந்துபோகும் பொழுது சினிமாவில் காட்டப்படும் மரங்களும், ஆறுகளும் மட்டுமே நமக்கு நிலையாக இருக்கும் என்பதில் தவறில்லை. இது நாம் சினிமாவின் மூலம் எதிர்கொள்ளும் சிக்கல்களில் ஒன்றாகும்.

இவ்வாறு சினிமாவில் தாக்கத்தினைப் பார்க்கும்போது சமூகத்தின் மத்தியில் சினிமா எனும் கலை வடிவம் கனவுலகமாக, பிரச்சார அலையாக, வாழ்வின் தேடலாக, சோதனை முயற்சியாக, போராடும் ஆயுதமாக விளங்குகின்றதென்றால் உண்மையில் சினிமாவானது சமூகத்தின் மத்தியல் ஒரு பலம் வாய்ந்த கருவியாக வேரூன்றியிருப்பதைத் தெட்டத்தெளிவாக உணரமுடிகின்றதல்லவா? இவ்வாறு சினிமா இன்றைய சமூகத்தைத் தன் பிடிக்குள் ஈர்ப்பதற்கான காரணம் என்ன? ஏன் இவ்வீர்ப்பிற்கு இன்றைய சமூகம் கட்டுப்படுகின்றது என்பதை நோக்கின் பல்வேறுபட்ட கருத்துக்கள் எழுகின்றன. உதாரணமாக சினிமாவில் ஒருவன் அழும்போது சமூகமும் அழுகின்றது. சிரிக்கும்போது சமூகமும் சிரிக்கின்றது. இதற்கான காரணம், சினிமா மிகப் பலம்வாய்ந்த தொழில்நுட்பங்கொண்ட ஓர் கலையென்பதாகும்.

இவற்றிலிருந்து நாம் தெளிவான சிந்தனையோட்டத்தின் மூலம் சினிமா வேறு, வாழ்க்கை வேறு என்ற உன்னத கருத்தை உணர்ந்து "நீரகற்றிப் பாலருந்தும் அன்னத்தினைப் போன்று" முற்றாகச் சினிமாவை ஒதுக்காமலும், சினிமாவுக்குள்ளே தம் வாழ்நாளைக் கழிக்காமலும் வாழப் பழகிக்கொள்வதே வளரும் சமூகத்துக்கு எடுத்துக்காட்டாக அமையும் என்பதில் ஐயமில்லை.

| | | | |
|---|---|---|---|
| இ | மகிழம்பழம் | நறுபுளியம்பழம் | ப |
| ல் | சுரவணப்பழம் | காமரைப்பழம் | ழ |
| லா | கறுக்காப்பழம் | பிரம்பம்பழம் | ங் |
| ங்கா | கிளாப்பழம் | காட்டுமாம்பழம் | க |
| தி | சேணைப்பழம் | வெள்ளைநாவல்பழம் | ள் |
| ந் | மருங்கைப்பழம் | சம்புநாதப்பழம் | |
| த | நுரைப்பழம் | கிண்ணம்பழம் | |
| | கடலாஞ்சிப்பழம் | மசுக்குட்டான்பழம் | |
| | மீனாச்சியம்பழம் | கொவ்வைப்பழம் | |
| | சிமிட்டிப்பழம் | அன்னமின்னாப்பழம் (பச்சை) | |
| | வீரப்பழம் | அன்னமின்னாப்பழம் (சிகப்பு) | |
| | பாலப்பழம் | துவரம்பழம் | |
| | கூழாப்பழம் | காரைப்பழம் | |
| | பண்டிக்காயான்பழம் | | |

## மறைந்துபோன பொருட்கள்

| | |
|---|---|
| வல்லுகம் | தலைவாசல் |
| குட்டான் | தெருத்திண்ணை |
| கட்டுப்பெட்டி | உப்புச்சிரட்டை |
| தலகாரப்பெட்டி | மரக்கொட்டுக்கிணறு |
| புட்டுப்பெட்டி | வட்டில் |
| அண்டாப்பானை | சேவரக்கால் |
| அலாய்விலாய் பானை | வட்டா |
| உறி | படிக்கம் |
| திருகணி | கோடிப்பானை |
| சுரைக்குடுகு | மிதிதடிக்கட்டை |
| நாடங்குடுகு | வடிக்கா |
| திருநீற்றுக்குடுகு | கைவிழா |
| கிணத்துப்பட்டை | உமல் |
| பெட்டகம் | |



# சுனாமியும் மண்முனைப் பிரதேசமும்

யோகராஜா சுபேஸ்குமார்

இந்து சமுத்திரத்தின் முத்தென, நாற்றிசைகளும் கடலால் சூழப் பட்டு, இயற்கை எழிலும், நிறைந்த வளத்தினையும் கொண்டு பார்க் கும் அனைவரது கவனத்தையும் ஈர்த்திருந்த நாடே இலங்கைத் தீவாகும். இத்தீவிற்கு அழகு சேர்த்துக் கொண்டிருந்த ஆழ்கடலுக்கு ஏற்பட்ட திடீர் சீற்றர் காரணமாக வேலியே பயிரை மேய்ந்த கதையாக நடந்து முடிந்தது சுனாமி அனர்த்தம்.

கடந்த 2004 டிசம்பர் 26ந் திகதி எம்மக்கள் வாழ்க்கையில் மறக்க முடியாத ஓர் சோக நாளாகும். கடலே தஞ்சம் என வாழ்ந்த மக்களும், கடற்தொழிலுக்குச் சென்றவர்களும் கரையோரங்களில் வாழ்ந்தவர்களும் வேலை பார்த்தவர்களும் தமது வாழ்வாதாரங்களோடு கடலின் சீற்றத்திற்கு இரையாகி சின்னாபின்னப்பட்டுப்போன நாள் அது. காலையிலே உள் நுழைந்த அலை போகும்போது, அம்மக்களின் உயிர் உடலுடன் நிறைவேற்றக் காத்திருந்த கனவுகளையும், நிலைத்திருந்த கனவுகளையும் கற்பனைகளையும் ஒருநொடியில் அழித்துச் சென்றன. இலங்கைத் தீவிற்கு அழகுசேர்த்த அழகிய கடற்கரைகளும் அதனையணிடிய பிரதேசங்களும் உருக்குலைந்து அசிங்கமாக அழிந்த பொருட்களுடனும், இறந்த உடல்களுடனும் நிறைந்து காணப்பட்டன.

இலங்கையின் கரையோரப் பிரதேசங்களிற்கென்றே பிரபல்யமடைந்த இடங்களில் ஒன்று மட்டக்களப்பாகும். ஒருபக்கம் வாவியையும், மறுபக்கம் கடலையும் கொண்டு தலையோங்கி நின்ற இம் மட்டக்களப்பு மாநகரம் கூட இச் சுனாமியின் தாக்கத்திற்கு விதிவிலக்காகவில்லை.

சுனாமி என்பது ஒரு ஜப்பான் மொழி. அதாவது ஜப்பானின் துறைமுகங்களை அடிக்கடி ஆபத்துக்குள்ளாக்கி தம் உடமைகளை அழித்த அந்த அலைக்கு ஜப்பானியர்கள் இட்ட பெயரே சுனாமி

(துறைமுக அலை) ஆகும். என்றுமே அறிந்திராத ஒரு புதிய சொல் ஒன்று இன்று ஒரு வாழ்க்கையில் அத்தியாயம் எழுகின்றது வியப்பாகவே உள்ளது.

சுமாத்திராத்தீவின் வடக்கேயுள்ள தீவான சிமுயுள் தீவின் பாசுநாஸரே எனுமிடத்தில் கடலிற்கடியில் 30km ஆழத்தில் ஏற்பட்ட 9.5 றிச்டர் அளவான நிலநடுக்கத்தின் தாவுதல் இந்து சமுத்திரத்தின் மேற்பரப்பில் பாரிய பேரலைகளை உருவாக்கியது. நம் நேரப்படி காலை *6* மணி *55* நிமிடம் *33* செக்கனில் உருவான பேரலை நம் பிரதேசமடைய உள்ளூர் நேரப்படி 8.55 மணியளவில் காவுகொண்டது. இவ்வலை, இதன் முதல் தாக்கம் 7.19 மணிக்கு அந்தமான், நிக்கோபார் தீவுகளேயாகும்.

நடுக்கம் ஏற்பட்டு *8* நிமிடத்தின் பின்னரே இவ்வலைகள் உருவாகி கிழக்குமேற்காய் பிரயாணம் செய்யத் தொடங்கியிருக்கின்றன. கருக்கொண்ட அலைகளின் வேகம் கிட்டத்தட்ட ஆகாயத்தில் பறக்கும் ஜெட் விமானத்தை ஒத்ததாக அதாவது மணிக்கு 800km ஆகக் காணப்பட்டதாகவும் அதன் உயரம்24.4m ஆகவும் காணப்பட்டிருக்கின்றது. 420 நடுக்கம் ஏற்பட்ட இடத்திலிருந்து உருவாகிய அலை 240km தூரம் வரை பிரயாணத்தில் முதல் தாக்குதல் சுமாத்திராவின் அசே மாகாணம் பின் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கிப் பயணித்த வீரியம் கூடிய அலைகள் தொடர்ச்சியாகப் பயணித்து 1300km இல் இந்தியாவையும், 2000km பயணித்து இலங்கைத் தீவையும், 6000km இல் தென் ஆபிரிக்க எலிசபெத் துறைமுகத்தையும் சென்றடைந்துள்ளது. தென் ஆபிரிக்காவைச் சென்றடைகையில், அலையின் உயரம் 1.5m ஆகவே காணப்பட்டிருக்கின்றது. அதாவது ஆழிப்பேரலை தணிந்திருந்த இடமாகவே கருதப்படுகிறது.

இந்தச் சுனாமிப் பேரலைத் தாக்கத்தினால், பேரணர்த்தத்தினால் உண்மையிலேயே தாக்க அழிவுகள் அடிப்படையில் இலங்கை இரண்டாவது இடத்திலேயே காணப்படுகின்றது. முதலில் தென்கிழக்கின் கரையோரப் பிரதேசங்களை காலை *8.55* க்கு வந்தடைந்த அலை அதைத் தொடர்ந்து *15* நிமிடங்களில் பேரலைகள் வடகிழக்கு, கிழக்கு, மேற்கு, தெற்கு மற்றும் தென்மேற்கு திசைகள் உள்ளிட்ட 2260km நீளத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியதாகவும் ஆய்வு நூல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வலைகள் பற்றி மேலும் குறிப்பிடுவோமேயானால் ஏற்பட்ட முதல் அலையைவிட இரண்டாம் அலையே வீரியம் மிக்கதாகவும் பாரிய அழிவுகளை ஏற்படுத்தியதாகவும் காணப்பட்டது.

சேதங்கள் பற்றி நோக்குவோமேயானால், இலங்கையில் 235,145 குடும்பங்களிலிருந்து 502,456 நபர்கள் இவ்வனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுள் 169, 071 நபர்கள் 320 நலன்புரி நிலையங்களிலும், 333,385 நபர்கள் உறவினர், நண்பர்கள் வீட்டிலும் அகதிகளாக்கப்பட்டனர். இக்குடும்பங்களுள் 79791 குடும்பங்கள் வீடுகளை இழந்த நிலையில் நீண்டகால அகதிகளாக்கப்பட்டனர். அதிலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 63717 குடும்பங்கள் இழப்புக்களைச் சந்தித்திருக்கின்றன. இதுவே இலங்கையின் உச்ச எல்லையாகவும் அமைந்திருந்தது என ஆய்வு நூலொன்று எடுத்துக்காட்டியிருக்கின்றது.

உயிரிழப்பின் அடிப்படையில் அம்பாறை மாவட்டமே முதல் இடத்தில் காணப்படுகின்றது. அண்ணளவாக 10436 பேர் வரையில் இறந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் 2840 பேர் வரையிலேயே உயிரிழந்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தை எடுத்துநோக்குவோமேயானால், இம்மாவட்டம் 1907 சூறாவளி, 1913ல் வெள்ளப்பெருக்கு, 1956 மீண்டும் ஒரு வெள்ளம், 1978ல் மீண்டுமொரு சூறாவளி என பல அழிவுகளைச் சந்தித்திருக்கின்றன. மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்கனவே இச் சுனாமியலை சீண்டிப் பார்த்திருக்கின்றது. 1883ல் சீண்டிய அலை மீண்டும் 2004ல் காவுகொண்டிருக்கின்றது. இவ்வாறு இயற்கை அனர்த்தம் ஒருபுறம், யுத்த சூழ்நிலை ஒருபுறம் இம்மண்ணை அரித்துக்கொண்டே இருக்கின்றது.

இம்மாவட்டத்தில் 08 பிரதேச செயலாளர் பிரிவுகள் நேரடித் தாக்கத்தையும், எஞ்சிய 06 பிரதேச செயலாளர் பிரிவுகளும் ஏதோ ஒரு வகையில் பாதிப்புக்குள்ளாகியிருக்கின்றன. இவ் 08 பிரதேச செயலாளர் பிரிவுகளின் கீழ் அமைந்துள்ள 223 கிராம சேவையாளர் பிரிவுகளுள் 87 கிராம செயலாளர் பிரிவுகள் இப்பேரனர்த்தத்தினால் பாரிய பாதிப்பிற்குள்ளாகி இருக்கின்றன. இவற்றுள் 23 கிராம சேவையாளர் பிரிவுகள் பகுதியளவிலும் பாதிக்கப்பட்டுள்ளதாக ஆய்வு நூல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் நம் மண்முனைப்பற்று பிரதேசத்தை எடுத்துக் கொண்டோமேயானால், நேரடியாகவோ மறைமுகமாகவோ ஏதோ ஒரு வகையில் கடல் தாயை நம்பி வாழ்ந்த மக்கள் இவர்கள். விவசாயி, மீனவர்கள், தும்புத் தொழிலாளர்கள் என வாழ்ந்த எம் பிரதேச மக்கள் பொருளாதார ரீதியாகவும், உளரீதியாகவும் சுக்கு நூறாக உடைக்கப்பட்டனர். மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள 27 கிராம சேவையாளர் பிரிவிலும் 11 கிராமசேவகர் பிரிவு முற்றாகவும் பகுதியாகவும் சேதமடைந்து, ஆரையம்பதி மகாவித்தியாலயம், தாளங்குடா கிறிஸ்தவ தேவாலயம், முகைதீன்பாபா பள்ளிவாசல், பாலமுனை, தருமரெத்தினம் வித்தியாலயம், புதுக்குடியிருப்பு கண்ணகை வித்தியாலயம், கிரான்குளம் என்பன அகதிமுகாமாகப் பாவிக்கப்பட்டன. தனியார்கள், அரசுசார்பற்ற நிறுவனங்கள் காட்டிய உதவிக்கரங்களை மறக்கமுடியாது. யாரை யார் தேற்றுவது, இரங்குவது எத்திசையில் தங்கள் உதவிகளைச் செலுத்துவது என்பது எஞ்சிய பிரதேச மக்களிற்கு பாரிய மன அழுத்தமாகியது.

உடனடியாக சேவையில் ஈடுபட்ட நிறுவனங்கள், உடுப்பு, உணவு, மருத்துவம் என்பன தேவையறிந்து அளித்தது. இன்னுமொரு சாரார் பாதிக்கப்பட்டவர்களின் உள்ளங்களை மேம்படுத்துவதில் செயல்பட்டனர். 11 கிராமசேவக பிரிவிலும், வீடு பகுதியாகப் பாதிக்கப்பட்டவர்கள் 780 பேர். முழுமையாகப் பாதிக்கப்பட்டவர்கள் 1964 பேராகும். இவர்களுக்கு "நிகாப்" அலுவலகம் வீடுகட்ட உதவி புரிகின்றது. இப்பிரிவில் ஏற்பட்ட உயிரிழப்பு 63 ஆகும்.

நிறுவனங்களின் உதவியற்ற அரசாங்க உதவி மாத்திரம் பெறும் குடும்பங்கள் மிகவும் பரிதாபத்துக்கு உள்ளானார்கள். இருந்த குடிசை சுனாமியில் போனது, தனி அரசாங்கம் அளிக்கும் நிதியுதவியுடன் செயல்படுதல் மிகவும் கஸ்டமாகவே உள்ளது. சுனாமிக்குப் பின்னர் விலைவாசியும், தனிமனித வலுவும் இருமடங்காக உயர்ந்துள்ளது. இதனால் இவர் இப்போ மிகவும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளாகியுள்ளனர். குடிசையில் வாழ்ந்ததும் இல்லை, அரசாங்க உதவியுடன் அளிக்கும் வீட்டிலும் இருந்தபாடில்லை. இது மிகப்பெரிய உளப்பாதிப்பு.

⊠⊠⊠⊠⊠

# வாழும்போதே வாழ்த்துவோம்
# கலைஞர்கள் கௌரவம்



பெயர் : முருகப்பன் - கணபதிப்பிள்ளை
முகவரி : வேளாளர் வீதி, ஆரையம்பதி – 03.
பிறந்த திகதி : 22.01.1924
துறை : கூத்து

**திறமை :** கூத்துக்கள் எழுதுதல், தயாரித்தல், நடித்தல் என்பதோடு மட்டக்களப்பில் நவீன நாட்டுக்கூத்தை முதன்முதலில் அறிமுகப்படுத்தியமை.

**இயற்றித் தயாரித்த கூத்துக்கள் :**
லெச்சுமி கல்யாணம், பரிசாரி மகன், சூறாவளிக் கூத்து, அண்ணன்தங்கை.

**ஆடிய கூத்துக்கள் :** அலங்காரரூபன், சுபத்திரை கல்யாணம், பரிசாரிமகன்

**இலக்கியத்துறை :** கூத்துத் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகளை எழுதுதல், பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் 100க்கணக்கான கவிதைகளை எழுதியமை. 2002ல் "இலக்கிய நெஞ்சம்" எனும் நூலை வெளியிட்டமை.

**பெற்றுள்ள பட்டங்கள்**
- மாவட்டக் கலாசாரப் பேரவை – "கலைமணி" (1989)
- கலாசார திணைக்களம் – "கலாபூஷணம்" (1995)
- ஆசிரிய கலாசாலை பவளவிழா – "மக்கள் கவிமணி" (1996)
- பண்பாட்டலுவல்கள் பிரிவு – கல்வித்திணைக்களம் – "கலையரசு" (2000)

**கௌரவம் :** கிழக்குப்பல்கலைக்கழகம் 'உலக நாடக தின விழா'வில் 2001ம் ஆண்டு இவருக்கு "தலைக்கோல்" விருது வழங்கிக் கௌரவித்தது.



பெயர் : இராசையா - நாகலிங்கம் (அன்புமணி)

முகவரி : ஆரையம்பதி - 01.

பிறந்த திகதி : 06.03.1935

துறை : இலக்கியம்

**இலக்கியப் பணி :**

- ★ 'மலர்' எனும் மாத இதழின் ஆசிரியராக பணியாற்றியமை.
- ★ நூற்றுக்கு மேற்பட்ட கவிதைகளையும், சிறுகதைகளையும் பத்திரிகை, சஞ்சிகைகளில் எழுதியமை.
- ★ சமய, சமூக, கல்வி, கலை, இலக்கிய கட்டுரைகளை எழுதி வருகின்றமை.
- ★ மேடை நாடகங்களையும், வானொலி நாடகங்களையும் எழுதித் தயாரித்தமை.
- ★ நூல்கள் எழுதுதல், சிறந்த நூல்களைப் பதிப்பித்தல்.
- ★ மட்டக்களப்பின் அரிய நூல்களை மறுபிரசுரம் செய்தல்.

**எழுதிய நூல்கள் :**

ஒரு தந்தையின் கதை (நாவல்), இல்லத்தரசி (சிறுகதைத் தொகுப்பு), வரலாற்றுச் சுவடுகள் (சிறுகதைத் தொகுப்பு)

**பதிப்பித்தவை :**

- ★ அன்பு வெளியீட்டின் மூலம் - 9 நூல்கள்
- ★ கனடா Reflex நிறுவத்தின் மூலம் - 6 நூல்கள்
- ★ களுவாஞ்சிகுடி பிரதேச செயலகத்தின் மூலம் - 3 நூல்கள்

**பெற்றுள்ள பட்டம் :** இந்து சமய கலாசாரத் திணைக்களம் - "கலாபூஷணம்" (2002)

**பெற்றுள்ள கௌரவம் :** வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சு 2001ம் ஆண்டு இவருக்கு "ஆளுநர் விருது" வழங்கிக் கௌரவித்தது.



பெயர் : முகிதீன் பாவா - ஆதம்பாவா

முகவரி : காங்கேயனோடை - 13

பிறந்த திகதி : 08.10.1927

துறை : பதம் பாடுதல்

கற்றுக்கொண்ட முறை : 1973ம் ஆண்டு இந்தியாவைச் சேர்ந்த அப்துல் ரஷி தகோயாத் தங்கள் என்பவரிடம் பதம் பாடுதல், றபான் அடித்தல் என்பவற்றில் முறையாகப் பயிற்சி பெற்றார்.

பதம்பாடுதல் பணி :

- ★ கடந்த 32 வருடகாலமாக பள்ளிவாயிலில் இஸ்லாமிய ஆன்மீகப் பாடல்களைப் பாடி வருகின்றார்.
- ★ 1978ம் ஆண்டிலிருந்து காங்கேயனோடை முகிதீன் ஜூம் ஆப் பள்ளிவாயலில் இப்பணியை மேற்கொண்டு வருகின்றார்.
- ★ காங்கேயனோடை முகிதீன் ஜும்ஆப் பள்ளிவாயலில் கலிபாவாக முன்னின்று இராத்திப்பு மஜ்லிஸை (ஆன்மீகப் பணியாக) நடாத்தி வருகின்றார்.
- ★ பாடுதல் மட்டுமன்றி றபான் வாசிப்பதிலும் கைதேர்ந்தவர்.
- ★ பலநூற்றுக்கணக்கான பக்தர்களைப் பாடி மகிழ்வித்து வருபவர்.
- ★ ஒவ்வொரு வாரமும் வியாழக்கிழமை பிற்பகல் வெள்ளி இரவு 8.30 மணி தொடக்கம் காங்கேயனோடை முகிதீன் ஜும்ஆப் பள்ளிவாயலில் இவரிடமிருந்து இறை தியானப் பயிற்சிகளை நூற்றுக்கணக்கானவர்கள் பெற்றுக்கொண்டிருக்கின்றார்கள்.
- ★ அத்துடன் இவர் ஆயுள்வேத மூலிகைகளைப் பயன்படுத்தியும் இஸ்லாமிய ஆன்மீக வைத்திய முறைகளைக் கொண்டும் பல நோயாளிகளைக் குணப்படுத்தியுமிருக்கின்றார்.



பெயர் : கணபதிப்பிள்ளை இராசம்மா
முகவரி : தாழங்குடா 01, மண்முனை
பிறந்த திகதி : 1935ம் ஆண்டு
துறை : நாட்டு வைத்தியம்
(குழந்தை மகப்பேற்று வைத்தியம்)

**வைத்தியம் கற்றுக்கொண்ட முறை :**

மாமியார் வைராத்தையிடம் இருந்து முறையாகக் கற்றுக்கொண்டதுடன், அவருக்கு உதவியாளராக இருந்து அனுபவ அறிவையும் பெற்றுக்கொண்டார். மேலும் இவ்வைத்தியம் தொடர்பாக வைத்திய சாலையாலும் பயிற்றப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

**மருத்துவப் பணி :**

- கடந்த 40 வருடங்களாக இம் மகப்பேற்று வைத்தியப் பணியை இவர் மேற்கொண்டு வருகின்றார்.
- தமது கிராமத்தில் மட்டுமன்றி அயல் கிராமங்களிலும் இவ் வைத்தியப் பணியை மேற்கொள்கின்றார். குறிப்பாக, தாழங்குடா 1ம் வட்டாரம், 2ம் வட்டாரம், மண்முனை ஒல்லிக்குளம் முதலிய கிராமங்களிலுள்ள மக்களுக்கு இவர் தமது சேவையினை மேற்கொண்டு வருகின்றார்.
- இவரது வைத்தியச் சிறப்பை இன்றும் அங்குள்ள மக்கள் நினைவு கூருகின்றனர்.
- நவீன வைத்திய முறைகளும் வைத்தியசாலைகளும் பெருகி உள்ள இக்காலத்திலும் கூட இங்குள்ள மக்கள் இவ் வைத்தியம் தொடர்பாக இவரையே நாடி வருகின்றமை இவரது மருத்துவப் பணியின் சிறப்பைப் பறைசாற்றுகின்றது.

சாதனை : கடந்த 40 வருடகால வைத்திய சேவையில் இவர் 2000க்கும் மேற்பட்டோருக்கு வைத்தியம் செய்துள்ளார்.



| | |
|---|---|
| பெயர் | : செல்லத்தம்பி நாகமணி |
| முகவரி | : புதுக்குடியிருப்பு தெற்கு |
| பிறந்த திகதி | : 06.04.2006 |
| துறை | : கிராமிய நடனம் (கரகம்) |

**திறமை:** கரகாட்டங்களைத் தயாரித்தல். அதற்குரிய பாடல்களை இயற்குதல், இசைத்தல், உடை, ஒப்பனை செய்தல், மத்தளம் வாசித்தல் என கரகாட்டம் தொடர்பான சகலவற்றையும் செய்யக்கூடியவர்.

**கற்றுக்கொண்ட முறை :**

★ சிறுவயதிலிருந்து இத்துறை சார்ந்து ஏற்பட்ட ஆர்வம் உந்துதல் காரணமாகவும் அதிகளவான கரகாட்டம் நிகழ்ச்சிகளைப் பார்த்ததன் ஊடாகப் பெற்றுக்கொண்ட அறிவு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டும் கரகாட்டங்களைத் தயாரித்து வருகிறார்.

★ 1961ல் முதன் முதலாக "காத்தவராயன்" எனும் கரகாட்டத்தினைத் தயாரித்ததன் மூலம் இத்துறையில் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டார்.

**தயாரித்த கரகாட்டங்கள் :**

இதுவரை சுமார் 40 வரையான கரகாட்டங்களைத் தயாரித்துள்ளார். அவற்றுள் காத்தவராயன், வள்ளி திருமணம், கண்ணகி காற்சிலம்பு, சத்தியவான் சாவித்திரி, அரிச்சந்திர மயான காண்டம் என்பன குறிப்பிடத்தக்கவை.

**சிறப்பு** : இவரால் தயாரிக்கப்பட்ட "காத்தவராயன்" எனும் கரகாட்டம் திருக்கோயிலிலிருந்து வாகரைவரை சுமார் 22 மேடைகள் ஏற்றியமை இவரது கரகாட்டத் தயாரிப்பின் சிறப்பிற்கு எடுத்துக்காட்டு.

**தயாரித்த நவீன நாட்டுக்கூத்துக்கள் :**

கிட்டத்தட்ட 12 நவீன நாட்டுக் கூத்துக்களைத் தயாரித்துள்ளார். போடியார் மகள், மகேசரின் திருவிளையாடல் முதலியன அவற்றுள் குறிப்பிடத்தக்கவை.

**தயாரித்த நாடகங்கள் :** வஞ்சம், பழிக்குப்பழி, பரிசுத்த மகாராஜன் கதை, வில்வித்தை முதலிய இலக்கிய நாடகங்களையும் இவர் தயாரித்துள்ளார்.

**கௌரவம்:** கிழக்குப் பல்கலைக்கழக 'உலக நாடக தின விழா'வில் இவரது "கிருஷ்ண தூது" எனும் நாட்டுக்கூத்து மேடையேறியது. அதற்கான சான்றிதழையும் கௌரவத்தையும் இவர் பெற்றுள்ளார்.

# ஊரும் சிறப்புப் பொருட்களும்

| | | |
|---|---|---|
| குச்சவெளி | - | புகையிலை |
| பனிச்சங்கேணி | - | கருவாடு |
| வாகரை | - | முருங்கைக்காய் |
| பன்குடாவெளி | - | சட்டிபானை |
| காத்தான்குடி | - | பாய் |
| ஆரையம்பதி | - | கயிறு, கூத்து |
| மண்டூர் | - | கீரை |
| மகிழூர் | - | வழுதுணங்காய் |
| குறுமண்வெளி | - | அழகான பெண்கள் |
| மருதமுனை | - | சோமன் |
| புதுக்குடியிருப்பு | - | சுளகு |
| கல்லாறு | - | கூனி (றால்) |
| காங்கேயனோடை | - | ஓலைப்பெட்டி |
| களுதாவளை | - | வெற்றிலை |
| ஒந்தாச்சிமடம் | - | வெண்கலச்சாமான் |
| பிள்ளையாரடி | - | பனங்கிழங்கு |
| கொடுவாமடு | - | செங்கல் |
| கோளாவில் | - | மந்திரம் |
| கொக்கட்டிச்சோலை | - | தேரோட்டம் |
| தம்பிலிவில் | - | மழைக்காவியம் |
| மன்னம்பிட்டி | - | தேன் |
| மஞ்சந்தொடுவாய் | - | கள் |
| கரவாகு | - | உமல் (பை) |

# மண்முனைப்பற்றுப் பிரதேச மக்கள் வாழ்க்கையுடன் தொடர்புடைய பாரம்பரிய பொருட்கள்

அ.அருட்செல்வி

மனிதன் அவன் வாழும் சூழலுக்கு உட்பட்டு அதற்கு இசைய, அவன் தனக்குப் பயன்படும் முறையில் தான் உபயோகித்து வந்த பொருட்களை அமைத்துக்கொண்டான்.

அவன் பயன்பாடு கருதி உபயோகித்துவந்த சகல வகையான பொருட்களையும் வேறுவேறாகப் பகுத்து, நிரல்படுத்திச் சென்ற காலத்தோடு ஒட்டி, இன்றுள்ள காலக்கிரமப்படி ஒப்புநோக்கி, அவதானித்தால், இப்பயன்பாடுகள் கருதி – அன்று உபயோகித்து வந்த பொருட்கள் மாறுபட்ட சூழலுக்கும், காலப்போக்கிற்கும் உள்ளாகி அமைப்பிலும் செயல்படும் வகையிலும் பயன்படும் விதத்திலும் பரிணாம வளர்ச்சிப் படிமுறைப்படி காலத்திற்குக் காலம் மாற்றமடைந்து வந்துள்ளதை அவதானிக்கலாம்.

இந்த முறையினை அடித்தளமாக வைத்துச் சிறப்பாக மட்டக்களப்பைச் சேர்ந்த மண்முனைப் பிரதேசச் செயலக நிருவாகப் பிரிவுக்கு உட்பட்ட மக்கள் பயன்பாடு கருதி உபயோகித்து வந்த பலபொருட்களுள் சிலவற்றை எடுத்துக்காட்டி என் அறிவுக்கு எட்டிய அளவு தொடக்க ஆய்வு செய்ய முயற்சிக்கிறேன்.

### மரக்கொட்டுக் கிணறும், அதில் தண்ணீர் அள்ளும் மரத்தாலான 'பட்டை' எனப்படும் வாளியும்

அக்காலத்தில் இப்பகுதியில் வாழ்ந்துவந்த மக்கள் தங்களுக்கு உரிய குடிதண்ணீரைப் பெறுவதற்குத் தம் வசிப்பிடங்களில் தனி மரத்திலானாலமைத்த மரக்குழாய்களை (கொட்டுக்களை) நிலத்துள் செங்குத்தாக நிறுத்தி வைத்து கிணறுகளை அமைத்து வந்துள்ளனர். அக்கிணற்றிலிருந்து தண்ணீரை வெளியே அள்ளி எடுப்பதற்குத் தனி மரத்தினால் அமைத்த 'பட்டை' எனச் சொல்லப்படும் வாளியை உபயோகித்து வந்துள்ளனர்.

**விளக்கம் :-** நான்கு நான்கரை அடிக்களுக்குட்பட்ட நீளமுடையதும், இரண்டரை மூன்றடிக்கு உட்பட்ட பருமனுடையதுமான தனி மரத்தின் அடிப்பகுதியைத் தனித்தனியாய்த் துண்டாடி, அம் மரத்தை உள்பக்கமாக இரண்டு இரண்டரை அடிகளுக்கு உள்பட்ட, உள்விட்டம் உடையதாகக் குடைந்து, குழாய் வடிவில் அமைத்து, அதை ஒரு கொட்டு என அழைத்து, பத்தடியிலிருந்து பதிநான்கு அடிகள் வரை நிலத்தை ஆழமாகத் தோண்டி, அக்குழியினுள் மேற்காட்டிய வகையான மரக்கொட்டுகளை ஒன்றின்மேல் ஒன்றாகச் செங்குத்தாக வைத்து, நிலத்திலுள்ள குழியின் கொட்டுக்கு வெளியிலுள்ள பகுதியை மண்ணால் நிரப்பி மேற்காட்டிய கொட்டுக் கிணறுகள் அமைக்கப்பட்டு வந்தன. மேற்குறிப்பிட்ட விதமான அமைப்பினை உடைய மரக்கொட்டுக் கிணறுகளிலிருந்து தண்ணீரை வெளியே அள்ளி எடுப்பதற்கு : (ஒன்றேகால் அடி நீளமும் - ஒரு அடி பருமனுமுடைய தனியான முழு மரக்குற்றியை முக்கால் அடி உள்விட்டமுடையதாகக் குடைந்து, அதை ஒரு பாத்திரம் போல் (தற்கால வாளிபோல்) வடிவமைத்து, பட்டை என்ற பெயரில் அது உபயோகப்படுத்தப்பட்டு வந்தது.

மேற்கூறப்பட்ட மரக்கொட்டுக் கிணறும் 'பட்டை' எனப்படும் மரத்தாலான வாளியும் துலாக்கால் துலாவளை, துலாக்கம்பு என்பன ஒன்றுடன் ஒன்று தொடர்புறுத்தப்பட்டு வந்துள்ளன.

**விளக்கம் :** மரக்கொட்டுக் கிணற்றிற்கு அண்மையாக ஏழு, எட்டு அடி தூரத்தில் உவை (Y) வடிவுடைய பத்துப்பன்னிரண்டு அடி உயரமான தனிமரம் துலாக்கால் என்ற பெயருடன் நிலத்தில் நடப்பட்டு, அத் துலாமரத்தின் இரு கவர்களும் இந்த அடைப்புக் குறிக்குள் இருக்கும் விதத்தில் (Ȳ) குறுக்கு வளைமூலம் இணைக்கப்பட்டு, அதன்மேல் 'துலாவளை' என்ற பெயருடன் சுமார் பதினாறு அடிவரை நீளமானதும் ஒன்றரையடி சுற்றளவு உடையதுமான மரம் ஒன்று மேற்படி கொட்டுக் கிணற்றில் தண்ணீர் அள்ளக்கூடிய விதமாகப் பொருத்தப்பட்டு அந்தத் துலாவளையில் கொட்டுக்கிணற்றிலுள்ள தண்ணீரின் ஆழத்துக்கு ஏற்ற நீளமான துலாக்கம்பு கட்டப்பட்டு அத்துலாக் கம்பில் மேற்கூறப்பட்ட 'பட்டை' என்ற மரவாளி கட்டப்பட்டுத் தண்ணீர்

அள்ளப்பட்டு வந்துள்ளது. இந்த அமைப்பு அறிவியல் சார்ந்த பொறிமுறையாகும்.


இப்பிரதேசப் பிரிவிலுள்ள கிராமத்திலுள்ள ஒருவர் (அக்காலத்தில்) குளித்துவிட்டு வரும் ஒருவரைக் கண்டு "எங்கிருந்து வருகிறாய்?" என்று இன்னுமொருவர் கேட்டால், குளித்துவிட்டு வருபவர் (பின்வருமாறு கிணற்றுக்கு உரியவரின் பெயருடன் இணைத்து) "குமாரவேலியரின் கொட்டுக் கிணத்திலே பத்துப்பதினைந்து பட்டைத் தண்ணியில் குளித்துவிட்டு வருவதாக" கூறுவார்.

சென்றகாலத்தில் மட்டக்களப்புப் பகுதிக்கு வெளியிலிருந்து வந்தவர்கள் இப்பகுதியிலுள்ள கொட்டுக் கிணறுகளைப் பார்த்து விட்டு "இந்த மட்டக்களப்பு ஊரான் மரத்தைக் குடைந்து தோண்டித் தண்ணீரை எடுத்த மகா கெட்டிக்காரன்" என்று அதிசயப்பட்டுக் கூறியதாகச் செவிவழிச் செய்திமூலம் அறியப்படுகிறது. இது இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும்.

**தலகாரப்பெட்டி – சாப்பை – தளப்பத்து ஓலை**

இப்பகுதியில் வாழ்ந்து வந்த மக்கள் அக்காலத்தில் மழையில் தம் தலை நனையாதபடி பாதுகாக்கப் பனை ஓலையால் இழைத்த ஒருவகையான தொப்பியை அணிந்து வந்துள்ளனர். அது தலைகாரப்பெட்டி என்று அழைக்கப்பட்டு வந்துள்ளது. அத்துடன் தம் தலையையும் உடலையும் மழையில் நனையாது பாதுகாக்க ஒருவகை மென்மையான புல்லால் பாய்வடிவில் 'சாப்பை' என்ற பெயரில் செய்த மழைப் பாதுகாப்பிற்குரிய சாப்பைப் பாயினைப் பயன்படுத்தி வந்துள்ளார்கள். மேலும் மழையில் நனையாது தம்மைப் பாதுகாக்க இப்பகுதி மக்கள் 'தளப்பத்து' என்ற ஒருவகை மரத்து ஓலையையும் பயன்படுத்தி வந்துள்ளனர். இந்தத் தளப்பத்து ஓலை ஒன்றுடன் ஒன்று ஒட்டிய அமைப்பினை உடையதாகும். இந்தத் தளப்பத்து ஓலையை இன்றும் அருள்மிகு கண்ணகை அம்மன் கோவில் திருவிழாவில் அம்மனின் புனிதப்பேழையின் மேல் பிடித்துக் கோவிலை வலம்வருவதைக் காணலாம்.

**அம்மிக்கல் – திருகைக்கல் – சந்தணக்கல் – செக்குக்கல்**



கறி சமைப்பதற்குரிய காய்ந்த கொச்சிக்காய், தேங்காய், மஞ்சள், மிளகு, கடுகு முதலியவற்றை அரைக்க அம்மிக் கல்லையும், குழவியையும் உபயோகித்து வந்துள்ளனர். குரக்கன், பயறு, திணை முதலிய தானியங்களை அரைக்கத் திருகைக்கல்லை உபயோகித்து வந்துள்ளனர். மற்றும் சந்தனத்தை அரைக்க சந்தனம் அரைக்கும் கல்லில் சந்தனக்கட்டையைத் தேய்த்துச் சந்தனம் பெற்று வந்துள்ளனர். தேங்காய் எண்ணெயைப் பெறுவதற்கு செக்குக்கல்லையும் உபயோகப் படுத்தினர்.



**வட்டி – சேவரக்கால் – படிக்கம் – தளிசை**



உணவை (சோற்றை) வைத்து உண்ண வட்டவடிவான 'வட்டி' என்ற பாத்திரத்தையும் அந்த வட்டியை வைப்பதற்குச் சேவரக்கால் என்ற வட்டி ஏந்தியையும் உணவு உண்ணும் முன் கழுவும் நீரையும், உணவு உண்டபின் கைகழுவும் நீரை ஊற்றுவதற்குப் படிக்கம்' என்ற பாத்திரத்தையும் பலகாரம் - பழங்கள் வைப்பதற்குத் 'தளிசை' என்ற தட்டையும் சாப்பிட்டபின் வெற்றிலை சப்புவதற்குரிய பொருட்களை வைப்பதற்கு வட்டாவையும் வெற்றிலை சப்பித் துப்புவதற்கு மேற்குறிப்பிட்டப் படிக்கத்தையும் பயன்படுத்தி வந்துள்ளார்கள். (இவை வெண்கலத்தால் ஆனவையாகும்.)

**சுரைக்குடுகு :** (சுரை என்பது இப்பகுதியில் நாடங்கொடியெனக் கூறப்படுவது) இந்த நாடங்கொடியின் காய் கூசா வடிவினையுடையது. இக்கொடியில் காய்த்த முற்றிய நாடங்காயைத் தேர்ந்தெடுத்து அக்காயின் காம்புப் பகுதியிலிருந்து கீழ்ப்பகுதி வரை இரண்டு அங்குலத்துண்டை அறுத்து நீக்கிவிட்டு, அக்காயின் உள்ளிருக்கும் சதைப்பகுதியைக் குடைந்து வெளியே எடுத்துவிட்டு, முழுமையான நாடங்காயை அதன் தடித்த தோலுடன் வெயிலில். நன்கு காய வைத்து, அதனைப் பெரும்பாலும் நீர் உருவான பொருட்களை

வைப்பதற்கு உபயோகித்து வந்தனர். இதனைத் தொடர்ந்து களி மண்ணால் செய்யப்பட்ட குடம், கூசா, முட்டி, கிண்ணம் எனப்படும் நீர் வைக்கும் பாத்திரங்களை உபயோகித்து வந்துள்ளனர். இதனைத்தொடர்ந்து வெண்கலத்திலான குடம், செம்பு, கிண்ணம் முதலிய நீர்வைக்கும் பாத்திரங்களை உபயோகித்து வந்துள்ளனர். இவையாவும் இன்றுள்ள நீர்வைக்கும் நீர் உருவான பொருட்களை வைக்கும் பாத்திரங்களுக்கு முன்னோடியானவையாகும்.

**சுளகு, பால்வடி** : இவை ஈச்சை ஓலையின் நடுத்தண்டிலானவை. நெல், அரிசி புடைப்பதற்கும், தேங்காய்ப்பால் வடிப்பதற்கும் உபயோகப்படுத்துபவை.

**அரிவாள் மணை :** மணை என்பது பலகையாகும். இது மீன்களை அறுத்துத் துண்டாடிச் சுத்தம் செய்யப் பயன்படுத்துவது. இரண்டு இரண்ரை அடி ஒரு தலைப்பக்கத்தில் கத்திபோன்ற ஒரு கருவியைச் செங்குத்தாகப் பதித்து உருவாக்கப்பட்டது.

**சூட்டடுப்பு** : இது களிமண்ணினால் உருவாக்கப்பட்டது. முக்கால் அடி உள்விட்டமுடைய இரண்டங்குலம் தடிப்புள்ள களிமண் தட்டின் மேல் அரை அடி உயரமுடைய மூன்று அங்குலச் சுற்றளவுள்ள மூன்று கால்கள் (அடுப்புக்கல்கள் அமைந்துள்ளதுபோல) வடிவம் உடையது.

**இடியப்ப உரல் :** இது மரத்தினால் செய்யப்பட்டது. இதில் இரண்டு பகுதிகளுண்டு. மேல்பகுதி இடியப்பத்திற்குரிய மாவை நசித்துப் பிழியவைக்கும் பகுதி. மற்றது கீழ்ப்பகுதி. அது ஒரு அங்குல அளவிலான உள்விட்டமுள்ள வட்டக்குழியினையுடையது. இக் குழியின் அடிப்புறத்தில் இடியப்பத்திற்குரிய ஈர மாத்தாரைகள் வெளிவருவதற்குரிய சிறுசிறு துவாரங்கள் உள்ள வட்டவடிவான தகடு பொருத்தப்பட்ட அமைப்புடையது. இந்த இடியப்ப உரலின் மேற்பகுதியும், கீழ்ப்பகுதியும் வேறு வேறாக எடுக்கக்கூடிய அமைப்பை உடையன.

**இடியப்பத்தட்டு** : இது ஆறு அங்குல விட்டமுடைய வட்டவடிவம் உடைய தட்டாகும். இது கீழ்ப்பக்கம் பிரம்பினால் பல துவாரங்கள் உள்ளதாகப் பின்னப்பட்டது.

**பிட்டுக்குழல் :** இது ஒன்றரை அங்குல உள்விட்டமுடைய ஒருஅடி நீளமுடைய மூங்கில் குழலினால் அமைக்கப்பட்டது.

**கண் அகப்பை :** இது அகப்பை வடிவமானது. இது எண்ணெய் பலகாரத்தைப் பலகாரம் பொரிக்கும் பாத்திரத்திலுள்ள எண்ணையை விட்டுப் பலகாரத்தை மட்டுமே வெளியே எடுக்கக்கூடியதாக சிறு சிறு துவாரங்களையுடையது.

மேலும் விளக்குகள் தொடர்பாகக் கூறுவதாயின் இப்பகுதியில் உள்ளோர் முன்னர் தென்னோலைப் பந்தம், தென்னம்பாளைப் பந்தம், தூலப்பந்தம், தீச்சட்டி, தீவட்டி, எள்ளுமுடிச்சு, தேங்காய் சிரட்டைத் துண்டுகளின் குவியல் என்பவைகளை உபயோகித்து வந்துள்ளனர். பின்னர் அதனைத் தொடர்ந்து களிமண்ணாலான அகல்விளக்கு, வெண்கலத்தாலான தாள் விளக்கு, கைவிளக்கு, குத்துவிளக்கு, கிளை விளக்கு, தூக்கு விளக்கு என்பவைகளைப் பயன்படுத்தி வந்துள்ளனர். இவை தற்கால விளக்கு வகைகளுக்கு முன்னோடியான விளக்கு வகைகளாகும்.

அடுத்து திருவிழாக்கள் திருமண விழாக்கள் முதலியன வற்றுக்குரிய பந்தல்கள், வீதிகள் என்பவற்றை அலங்கரிப்பதற்குத் தென்னங்குருத்து, தென்னம்பாளை, கமுகம் பாளை, தென்னை இளநீர் குலை, குலையுடைய வாழைமரம், மாவிலை, கோடைப்பூ, வில்வப்பூ, தாமரைப்பூ, அல்லிப்பூ, மண்டு மரத்தின் இலை எனும் அலங்காரப் பொருட்களை உபயோகித்து வந்துள்ளனர். இவை இன்றுள்ள சோடனைப் பொருட்களுக்கு முன்னோடியானவை களாகும்.

மேலும் மட்டக்களப்பு வாவியை ஒட்டிய இப்பகுதி மக்கள் வாவியில் மீன்பிடிப்பதற்காகக் கழைக்கம்பு (தூண்டில்கம்பு) அத்தாங்கு, நண்டுத்தட்டு, ஒட்டிமீன் கூடு, சணல் நூல் வலை என்பவைகளைப் பயன்படுத்தி வந்துள்ளனர். இவை இன்று பயன்படுத்தும் மீன்பிடி கருவிகளுக்கு முன்னோடியானவையாகும். இப்படிப் பல்வேறுபட்ட பகுதிகளை எடுத்துக் கூறிக்கொண்டே போகலாம். விரிவுபடும் என்பதைக் கருதி இத்துடன் இக்கட்டுரையை நிறைவு செய்ய விரும்புகிறேன்.

# கடவுளும் நானும்



மூனாக்கானா

மண்ணிலே தான் பிறந்த மனிதர் படுந்துயரம்
எண்ணியே நான் வருந்தி இதற்கு என்ன காரணமோ
என்று நினைத்து இறைவனிடம் கேட்பமென்று
சென்றேன் திருலோகம் தெய்வத்தைக் கண்டுவிட்டேன்.
ஆழ்ந்த அமைதியுடன் ஆண்டவனார் வீற்றிருந்தார்.
ஆண்டவனே என்மனதில் ஐயமொன்று உள்ள தென்று
காண்டீபம் போல் வளைந்து கையெடுத்துக் கும்பிட்டேன்.
விண்ணிலிருந்து எங்கள் வேதனையைப் பார்ப்பதற்கோ
மண்ணில் எமைப்படைத்தாய் மனிதர் படுந்துயரம்
என்னவென்று சொல்லி எடுத்துரைப்பேன் உங்களிடம்
சொன்னால் கண்ணீர் சொரியும் தூயவரே உங்களுக்கும்
அன்னை இல்லாப் பிள்ளைகள்போல் அழுது தவிக்கின்றோம்.
பஞ்சம் பசி களவு பட்டினியும் பொய்கொலையும்
மிஞ்சும் பலநோய்கள் வேதனைகள் சோதனைகள்,
சூறாவளி வெள்ளம் சுனாமியொடு மண்சரிவு
ஆறாத வெப்ப அன்னர்த்தம் நிலநடுக்கம்,
உயிரிழப்போ பலலெட்சம் உடைமைகளோ பலகோடி
மயிரிழையில் நான்தப்பி வந்து இங்கே நிற்கின்றேன்.
எம்மையிந்த துன்பங்கள் ஏன்வருத்து கின்றதென்று
இந்த மடையனிடம் இயம்புமென்று கேட்டுநின்றேன்.
என் நிலையைக் கண்ட இறைவன் மனமிரங்கி
புன்முறுவல் பூத்து புனிதவாய் தான் திறந்து
மானிடனே! நானுமுன்னை மறுஉயிர்க்கும் மேலாக
ஆறாம் அறிவுதந்து அவனியிலே நான் படைத்தேன்.
நியதி பல வைத்தேன். நீயுணர்ந்து முன்னேற
அமைதியைக் காத்திடுதல் அடியேனின் வேலையல்ல
என்றும் அமைதியுடன் இவ்வுலகில் நீ வாழ

உன்னைப் படைத்துள்ளே உள்ளமொன்றை நான் வைத்தேன்.
வைத்த அந்த உள்ளத்தின் மகிமைதனைப் போதிக்க
புத்தரொடு யேசுநபி போன்ற எந்தன் தூதர்களை
சித்தர்களை முத்தர்களை இருடிகளை முனிவர்களை
எத்தனையோ ஞானிகளை அங்கே அனுப்பி வைத்தேன்.
அங்கே அனுப்பிவைத்த அவர் வழியை நாடாமல்
எங்கோ அலைகின்றீர். இது எந்தன் குற்றமல்ல.
அஹிம்சை தனையறிய அனுப்பினேன் காந்திதனை
பண்பறிந்து நீவிலக வல்லரக்கர் நான் படைத்தேன்
கள்ளமில்லா உள்ளத்தை கைக்குழந்தை காட்டவைத்தேன்.
எள்ளுக்குள் எண்ணெய்வைத்தேன் என்னை அறிந்துகொள்ள
நாநிலங்கள் காற்றுமழை நல்லாறு கடல்மலைகள்
சோலை வனங்களுடன் தூயநீர்ப் பொய்கையுடன்
சூரியனை சந்திரனை சுழலவிட்டேன் உனக்காக.
உண்மையே வெல்லுமென்று உலகறியக் காட்டுதற்கு
மன்னன் அரிச்சந்திரனை வாய்மைக்கு நான் படைத்தேன்.
கூடியே உண்பதற்கு குவலயத்தில் காகமுடன்
சோடி உறவுக்கு தூய அன்றில் நான் படைத்தேன்.
நல்லதையே பிரித்தெடுக்க நான் அன்னம் படைத்திருந்தும்
கெட்டதையே தேர்ந்தெடுத்து கெடுவதுவும் நீதானே.
பேதை மனந்தெளிய பெரிய தர்ம சாத்திரங்கள்
கீதை குறளுனக்கு கிடைக்கவைத்தேன் மானிடனே
வருகுமே மேடுபள்ளம் வாழ்க்கையிலே என்றறிய
இரவுபகல் மாறவைத்தேன் இதைநீ உணர்ந்தாயா?
பிறந்த நொடியிலும்சா பின்நூறு ஆண்டிலும்சா.
இறப்பும் பிறப்பும் என்பொறுப்பு ஆதலினால்
பிஞ்சும் உதிரும் பெருங்கனியும் தானுதிரும்
அஞ்சாமல் நீவாழ ஆனஇடைக் காலமுண்டு
இந்த இடைக்காலத்தில் இவை உணர்ந்து வாழாமல்
என்னை மறந்து என் படைப்பின் தத்துவங்கள்
தன்னை மறந்து தலைகீழாய் நீநடந்து
நொந்து அழுதுவந்தால் இதற்குநான் என்னசெய்வேன்?
அடிப்பதுவும் நீங்கள்தான் அழுவதுவும் நீங்கள்தான்.
தடுக்கி வழிநடந்து தவிப்பதனால் என்ன பயன்?
உண்மையைநீ உணர்ந்து ஒழுங்காய் நடந்து வந்தால்
என்னை நீ தேடி இங்குவரத் தேவையில்லை.
ஆதலினால் மானிடனே அயர்ந்து நீ போகாதே
உன்னுடைய உள்ளத்தின் உள்ளேநீ சிந்தித்தால்
என் படைப்பின் நோக்கமெல்லாம் எளிதில் புரிந்துவிடும்
சென்றுவா என்மகனே! திருந்திநீ வாழ்ந்திடுக!
என்று சொல்லி என்தெய்வம் எனக்கு விடை தந்ததுவே.

# பிரதேச சாகித்திய விழா - 2006

## கலாசார போட்டி முடிவுகள்

**1) கட்டுரைப் போட்டிகள்** (பாடசாலை மட்டம்)

கனிஷ்ட பிரிவு

1ம் இடம் : இரவீந்திரன் ஜிவித்சி
மட்/ஆரையம்பதி இ.கி.மி. மகா வித்தியாலயம்.

2ம் இடம் : தர்மலிங்கம் பிரசாந்
மட்/தாழங்குடா ஸ்ரீ விநாயகர் வித்தியாலயம்.

3ம் இடம் : தங்கராசா விஜித்தா
மட்/ஆரையம்பதி இ.கி.மி. வித்தியாலயம்

சிரேஷ்ட பிரிவு

1ம் இடம் : ப.சுதர்ஜினி
மட்/கிரான்குளம் விநாயகர் வித்தியாலயம்.

**2) கவிதைப் போட்டி** (பாடசாலை மட்டம்)

1ம் இடம் : ம.ருஸாந்தி - மட்/கிரான்குளம் விநாயகர் வித்தி.
2ம் இடம் : சி.ராகுலன் - மட்/கிரான்குளம் விநாயகர் வித்தி.
3ம் இடம் : ம.ஜனக்சினி - மட்/கிரான்குளம் விநாகர் வித்தி.

திறந்த மட்டம்

1ம் இடம் : தங்கராசா இன்பராசா - புதுக்குடியிருப்பு.

**3) சிறுகதைப் போட்டி**

1ம் இடம் : தங்கராசா இன்பராசா - புதுக்குடியிருப்பு.
2ம் இடம் : பஞ்சாட்சரம் இந்துநிஜா - மட்/ஆரையம்பதி இ.கி.மி.ம.வித்தி.

**4) கிராமிய நடனம்**

1ம் இடம் : கதிரவன் கலைக்கழகம் - புதுக்குடியிருப்பு.

**5) நாடகம்**

1ம் இடம் : கதிரவன் கலைக்கழகம் - புதுக்குடியிருப்பு

## சக்திமிக்க மூலிகைகள்

| | |
|---|---|
| சஞ்சீவினி | - இறந்தவர்களைப் பிழைக்கச் செய்வது. |
| விசல்யகரணி | - உடல் காயங்கள் எதுவானாலும் ஆற்றுவது |
| சாவர்ணயகரணி | - காயத்தின் வடுக்களை நீக்குவது |
| சந்தானகரணி | - வெட்டுப்பட்ட உறுப்புக்களை ஒட்டச் செய்வது |

## ஐம்பொறிகளால் துன்பப்படுபவை

| | |
|---|---|
| யானை | - உடம்பால் துன்பம் |
| மீன் | - வாயால் துன்பம் |
| விட்டில்பூச்சி | - கண்ணால் துன்பம் |
| தேன்வண்டு | - மூக்கால் துன்பம் |
| அசுணப்பறவை | - செவியால் துன்பம் |

## எண்ணெய்க் குளிப்பு

அருக்கன் எண்ணெய் அழகழிக்கும்
அணியார் திங்கள் ஆகாது
திருக்கருஞ் செவ்வாய உயிர்போக்கும்
செய்ய புதனில் பொருளுண்டாம்
கருத்தை அழிக்கும் கவின் வியாழன்
கைப்பொருள் போக்கும் கனவெள்ளி
பொருந்த முண்டாம் சனிஎண்ணெய்
பேணல் முழுக வல்லாரே.

## முகமுழிப்புக்கு நல்லவை

கஞ்சம் தங்கம் தீபம் கண்ணாடி எல் அங்கி
செஞ்சந்தம் நீர் மண் சிவலிங்கம் - மஞ்சங்கல
கற்றா தமது வலக்கை மனை கடாரி இவை
உற்றவ விழிப்பில் உத்தமம்

| | | |
|---|---|---|
| கஞ்சம் | - | தாமரை |
| அல்அங்கி | - | புகையற்ற நெருப்பு |
| செஞ்சந்தம் | - | செஞ்சந்தனம் |
| மஞ்சங் கல் | - | முகில்படர்ந்த மலை |
| கற்றா | - | கன்றீன்ற பசு |
| மனை | - | மனைவி |
| கடாரி | - | மிருதங்கம் |
| நீர் | - | கடல் |

கத்துகடல் சூழ்நாகை காத்தான்தன் சத்திரத்தில்
அத்தமிக்கும் போது அரிசிவரும் - குத்தி
உலையிட ஊர் அடங்கும் ஓர் அகப்பை அன்னம்
இலையிலிட வெள்ளிஎழும் (வெள்ளி - விடிவெள்ளி)

## புத்தாடை அணிய

காரியில் அழுக்கதாகும்
கதிரவன் பீடைபோகும்
மாரியில் நனையும் திங்கள்
வன்புதன் கந்தையாகும்
வீரிய மில்லைச் செவ்வாய்
வெள்ளியில் மடந்தை சேர்வாள்
கூரிய வியாழன் நன்றாம்
குலவிய ஆடை சாத்த.

காரி - சனிக்கிழமை மடந்தை - திருமகள்

துணுக்குகள் தொகுப்பு
திருமதி.சூரியகுமாரி ஜயபரன்

## முகமுழிப்புக்கு நல்லவை

கஞ்சம் தங்கம் தீபம் கண்ணாடி எல் அங்கி
செஞ்சந்தம் நீர் மண் சிவலிங்கம் - மஞ்சங்கல
கற்றா தமது வலக்கை மனை கடாரி இவை
உற்றல விழிப்பில் உத்தமம்

| | | |
|---|---|---|
| கஞ்சம் | - | தாமரை |
| அல்அங்கி | - | புகையற்ற நெருப்பு |
| செஞ்சந்தம் | - | செஞ்சந்தனம் |
| மஞ்சங் கல் | - | முகில்படர்ந்த மலை |
| கற்றா | - | கன்றீன்ற பசு |
| மனை | - | மனைவி |
| கடாரி | - | மிருதங்கம் |
| நீர் | - | கடல் |

கத்துகடல் சூழ்நாகை காத்தான்தன் சத்திரத்தில்
அத்தமிக்கும் போது அரிசிவரும் - குத்தி
உலையிட ஊர் அடங்கும் ஓர் அகப்பை அன்னம்
இலையிலிட வெள்ளிஎழும் (வெள்ளி - விடிவெள்ளி)

## புத்தாடை அணிய

காரியில் அழுக்கதாகும்
கதிரவன் பீடைபோகும்
மாரியில் நனையும் திங்கள்
வன்புதன் கந்தையாகும்
வீரிய மில்லைச் செவ்வாய்
வெள்ளியில் மடந்தை சேர்வாள்
கூரிய வியாழன் நன்றாம்
குலவிய ஆடை சாத்த.

காரி - சனிக்கிழமை மடந்தை - திருமகள்

**துணுக்குகள் தொகுப்பு**
**திருமதி.சூரியகுமாரி ஜயபரன்**

# சமாதானத்திற்காய் பிரார்த்திப்போம்

காலைக்கதிர் உதயத்திலே.....
கண்விழிக்கும் மானிடர்கள்
சோலைக்குயில் கீதத்திலும்.....
சுகமாய் வீசும் தென்றலிலும்
சந்தோஷம் அடைந்தார்களா? - இல்லை
சாக்காட்டில் தவித்தாரையா - தினமும்
அழிவுகள் ஒழிந்திங்கே அன்பொன்றே நிலைத்திருக்க
சமாதானத்திற்காய் பிரார்த்திப்போம்.

ஜாதியின பேதத்தினால்
ஜோதியினை அணைத்துவிட்டு.....
மத மொழி துவேசத்தால்
மதம் கொள்ளும் மனிதயினம் - உலகில்
பாதி உயிர் இல்லாமல்
பதைத்துமே மாழுதையா - ஆதலால்
நாமிங்கு அன்போடு கைகோர்த்து
சமாதானத்திற்காய் பிரார்த்திப்போம்.

அமைதியுள்ளம் இல்லாமல்
ஆவேசம் அடைவதினால் - நாம்
சாதிப்பதுதான் என்ன....?
சகோதர உறவுகளின்.....
சாவுகளும் சவக்காலைகளும்....
மீதியாய் இவ்வுலகில் மிஞ்சிவிடப் பார்க்குதையா....!
ஆதலால் நாமிங்கே அன்போடு கைகோர்த்து
சமாதானத்திற்காய் பிரார்த்திப்போம்.

ஓரணியாய் நாங்கள் நின்று....
ஒற்றுமையை நிலைநாட்டி
மனிதநேய மாண்புகளை - எம்
மனதிலே வளர்த்தெடுத்தால்....
இனிதாகும் இப்பூமி - என்றும் நாம்
இன்பமுடன் வாழ்ந்திடலாம்
ஆதலால் நாமிங்கு அன்போடு கைகோர்த்து
சமாதானத்திற்காய் பிரார்த்திப்போம்.

- தங்கராசா இன்பராஜா -

ஜனி அச்சகம் - 09, இருதயபுரம் மேற்கு, மட்டக்களப்பு. 065-2222597